NURTURING EARLY LEARNERS
A GOOD START FOR EVERY CHILD

சிங்கப்பூர்ப் பாலர் பள்ளிக் கல்விக்குரிய பாடக்கலைத்திட்டப் பணிச்சட்டம்

# மொழிக்கும் படிப்பறிவுக்கும் உரிய கல்வியாளர் வழிகாட்டி

Copyright © 2023, Ministry of Education
Republic of Singapore
Earlier editions published by Ministry of Education, Singapore in 2003 and 2013.

All rights reserved. This publication shall not be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior written permission of the copyright owner.

All information contained herein is correct at the time of printing.

ISBN: 978-981-18-7435-2

# பொருளடக்கம்


**நன்றி நவில்தல்** 4

**கல்வியாளர் வழிகாட்டி - ஒரு கண்ணோட்டம்** 5

**இயல் 1: இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம்** 17

- இளம்பருவக்காலக் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உதவும் முக்கியக் கூறுகள் 22
- தாய்மொழியைக் கற்பிக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கியக் கூறுகள் 34

**இயல் 2: தாய்மொழி கற்றலுக்குத் திட்டமிடுதல்** 36

- இளம்பருவத்தில் மொழியும் படிப்பறிவும் 37
- இருமொழிகளைக் கற்றல் 38
- தாய்மொழி கற்றல் 38
- கற்றல் குறிக்கோள்கள் 39

**இயல் 3: தாய்மொழி கற்றல் கற்பித்தல்** 63

- அர்த்தமுள்ள விளையாட்டின் வாயிலாகப் பிள்ளைகளைக் கற்றலில் ஈடுபடுத்துதல் 65
- தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம் வாயிலாக நடைமுறைக்கு ஏற்ற கற்றலை வழிநடத்துதல் 68
- பல்வேறு நிலையில் கற்போருக்கு ஆதரவளித்தல் 72
- தாய்மொழி கற்றலுக்கான சூழலை அமைத்தல் 77
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு 82

**இயல் 4: கற்றலையும் வளர்ச்சியையும் உற்றுநோக்குதலும் மதிப்பிடுதலும்** 87

- முழுமையான மதிப்பீடு 89
- பிள்ளைகளின் கற்றலை உற்றுநோக்குதல் 90
- பிள்ளைகளின் கற்றலை ஆவணப்படுத்துதல் 92

**இயல் 5: துடிப்புமிக்க தாய்மொழி கற்றல் சமூகத்தை உருவாக்குதல்** 99

- ஆசிரியர்கள் தங்களின் பணி குறித்துச் சுய எண்ணப் பிரதிபலிப்பில் ஈடுபடுதல் 100
- பணித்திறன் சார்ந்த கற்றல் சமூகம் 103
- ஆசிரியர்கள் பங்காளிகளுடன் உடனிணைந்து செயலாற்றுதல் 104

**நிறைவுரை** 111

**கலைச்சொற்கள்** 113

**துணைநூற்பட்டியல்** 117

# நன்றி நவில்தல்

இந்த ஆவணத்தை உருவாக்குவதற்கு ஆலோசனை வழங்கிய முனைவர் எஸ். பி. ஜெயராஜதாஸ் பாண்டியன், தலைமை முதன்மையாசிரியர் (பணி ஓய்வு, 2022) அவர்களுக்குக் கல்வி அமைச்சு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த ஆவணத்தை உருவாக்குவதற்கு ஆலோசனைகள், கருத்துகள், பரிந்துரைகள் நல்கிய இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் பணிச்சட்ட மறு ஆய்வுக் குழுவினருக்கு எங்கள் நன்றி.

பின்வரும் உயர்கல்விக்கழகத்தின் கல்வியாளர்களது பயன்மிகு கருத்துகளுக்கு எங்கள் நன்றி:

- முனைவர் மணிவண்ணன் முருகேசன்
  தலைவர், தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பட்டக்கல்வி, மனிதவியல் மற்றும் நடத்தை அறிவியல் பள்ளி, சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்

- முனைவர் க. காவேரி
  மூத்த விரிவுரையாளர், எஸ். ஆர். நாதன் மனித மேம்பாட்டுப் பள்ளி, சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்

நடவடிக்கைகளுக்கான யோசனைகளும் புகைப்படங்களும் வழங்கிய பின்வரும் பாலர் பள்ளிகளுக்கும் குழந்தைப் பராமரிப்புச் சேவை நிலையங்களுக்கும் எங்கள் நன்றி:

- கல்சா பாலர் பள்ளி
- கல்வி அமைச்சின் பாலர் பள்ளிகள்
- ராமகிருஷ்ண மிஷன் சாரதா பாலர் பள்ளி
- ம.செ.க சமூக அறநிறுவனம் ஸ்பார்கல்டாட்ஸ் பாலர் பள்ளி, செங்காங் ஈஸ்ட் புளோக் 187B

# கல்வியாளர் வழிகாட்டி - ஒரு கண்ணோட்டம்

கல்வி அமைச்சு இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தை 2022-ஆம் ஆண்டில் மேம்படுத்தியுள்ளது. பரந்துபட்ட கோட்பாடுகளின்வழியே பாலர் பள்ளிகளில் பயிலும் நான்குமுதல் ஆறு வயது பிள்ளைகளுக்குப் பாடக்கலைத்திட்டத்தைத் திட்டமிடுவதற்கும் தரமிகு கல்வியை வழங்குவதற்கும் இது உதவும். (மழலையர் வகுப்பு இரண்டாம் ஆண்டுக்கும், பாலர் பள்ளி முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு ஆகிய வகுப்புகளுக்கும் உரியது.)

நம் பிள்ளை குறித்த நம் நம்பிக்கைகளே இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தின் மையப்புள்ளியாக உள்ளது. பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியையும் மகிழ்வுறு கற்றலையும் வலியுறுத்துவதாக இது அமையப்பெறுகிறது. இப்பணிச்சட்டம் பிள்ளைகளின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உதவும் முக்கியக் கூறுகளாகிய விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இது எல்லாக் கற்றல் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. இந்த முக்கியக் கூறுகளின்வழியே கற்றல் அனுபவங்களைத் தொடர்ந்து குவிநோக்கத்தோடு பிள்ளைகளுக்கு வழங்குவது இன்றியமையாதது. ஏனெனில், இவையே பிள்ளைகளது பண்புநலன் மேம்பாட்டிற்கும் வாழ்நாள் கற்றலுக்கும் பிறரோடு இணக்கத்துடன் வாழ்வதற்கும் அடித்தளமாக அமையும்.

பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு, இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம், அறிவாற்றல், திறன்கள், ஐந்து கற்றல் பகுதிகளுக்குரிய இயல்புகள் முதலியன துணையாக விளங்குகின்றன. மேலும், மகிழ்வூட்டும் அர்த்தமுள்ள கற்றல் நடவடிக்கைகளைத் திட்டமிடவும் வடிவமைக்கவும் வழிநடத்தவும் ஆறு ‘ஐடீச்’ *(iTeach)* கோட்பாடுகள் பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கு நன்முறையில் துணைபுரிகின்றன. இவை பாலர் பள்ளிக் கல்வியின் கற்றல் விளைவுகளின் படிநிலைகளையும் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளையும் பிள்ளைகள் அடைய வலுவான அடித்தளத்தை அமைத்துத் தருகின்றன.

## கல்வியாளர் வழிகாட்டியின் பயன்கள்

இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தைத் தரமிகு கற்றல் அனுபவங்களாகப் பிள்ளைகளுக்கு அமைத்துத்தரக் கல்வியாளர் வழிகாட்டி ஆசிரியர்களுக்குத் துணைபுரிகிறது.

இந்த வழிகாட்டி ஆசிரியர்களுக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் உத்திகளையும் கற்றல் நடவடிக்கைகளுக்கான எடுத்துக்காட்டுகளையும் வழங்குகின்றது. மேலும், இது கற்றலை மேம்படுத்துவதற்கான கற்றல் சூழல்களை உருவாக்கும் வழிகளையும் பிள்ளைகளின் கற்றலையும் வளர்ச்சியையும் உற்று நோக்கி மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது. கல்வியாளர் வழிகாட்டி இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தின் கோட்பாடுகளையும் கற்றல் குறிக்கோள்களையும் அணுக்கமாகக் கொண்டமைந்துள்ளது.

இந்த வழிகாட்டியிலுள்ள எடுத்துக்காட்டுகள் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவற்றை எடுத்துக்காட்டுகின்றன.


விழுமியங்கள்


சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள்


கற்றல் இயல்புகள்


நிர்வாகச் செயற்பாட்டுத் திறன்கள்

1. விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள், நிர்வாகச் செயற்பாட்டுத் திறன்கள் ஆகியவற்றைக் கற்றல் அனுபவங்களின் வாயிலாகப் பேணி வளர்த்தல்

2. வெளிப்புறத்தில் வெளிப்புறத்தைப்பற்றி வெளிப்புறத்தின் வாயிலாகக் கற்றல்

3. தொழில்நுட்பத்தை அர்த்தமுள்ள வகையிலும் பொருத்தமாகவும் பயன்படுத்துதல்

பிள்ளைகளின் மொழியறிவையும் படிப்பறிவையும் மேம்படுத்துவதற்கான யோசனைகளைக் கல்வியாளர் வழிகாட்டி வழங்குகிறது. ஆசிரியர்கள் இந்த வழிகாட்டியிலுள்ள எடுத்துக்காட்டுகளையும் பரிந்துரைகளையும் பயன்படுத்தித் தரமிகு கற்றல் அனுபவங்களைப் பிள்ளைகளுக்கு வழங்கி அவர்களை வழிநடத்தலாம். மேலும், ஆசிரியர்கள் பிள்ளைகளின் ஆர்வநிலை, தேவைகள், திறன்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த எடுத்துக்காட்டுகளையும் பரிந்துரைகளையும் மாற்றியமைத்துக்கொள்ளலாம்.

## முகவுரை

தரமான பாலர் பள்ளிக் கல்வி பிள்ளைகளுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துத் தரும். சிங்கப்பூரில் பாலர் பள்ளிக் கல்வியின் தரத்தைத் தொடர்ந்து கட்டிக்காப்பதோடு அதை மேம்படுத்தவும் இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம் சீரமைக்கப்பட்டுள்ளது. இது உள்ளூரிலும் உலக அளவிலும் பாலர் பள்ளிக் கல்வியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் மாற்றங்களையும் பிரதிபலிக்கும்வண்ணம் அமைந்துள்ளது. மேலும், சிங்கப்பூரின் சமூகச்சூழலையும் மொழிச்சூழலையும் கருத்திற்கொண்டு இப்பணிச்சட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. கேட்டல், பேசுதல் ஆகிய திறன்களை வளர்ப்பதற்கான அடிப்படையை அமைத்துத் தருவதற்குரிய முக்கியத்துவத்தை இப்பணிச்சட்டம் வலியுறுத்துகிறது. தாய்மொழிவழி நம் பல்லினப் பண்பாட்டை அறிமுகப்படுத்துவதோடு குடும்பத்தினர், நண்பர்கள், சமூகத்தினர் ஆகியோருடன் தாய்மொழியில் தொடர்புகொள்வதையும் இப்பணிச்சட்டம் ஊக்குவிக்கிறது.

பாலர் பள்ளித் தாய்மொழி ஆசிரியர்கள் இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தை நன்கு புரிந்துகொள்ள உதவும் நோக்கில் இந்தக் கல்வியாளர் வழிகாட்டி வரையப்பட்டுள்ளது. அத்துடன், பாலர் பள்ளியின் இரண்டாம் ஆண்டு இறுதியில் பிள்ளைகள் அடையவேண்டிய கற்றல் குறிக்கோள்களும் இவ்வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிள்ளைகள் தாய்மொழி கற்றலை விரும்புவதோடு தொடக்கப்பள்ளியில் கற்றலைத் தொடர்வதற்குத் துணையாக அமையும் கற்றல் குறிக்கோள்கள், முக்கிய அறிவாற்றல், மொழித் திறன்கள், கற்றல் இயல்புகள் முதலியவையும் இந்த வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வழிகாட்டியில் வலியுறுத்தப்படும் நெறிமுறைகளோடு பிள்ளைகளின் தேவைகளையும் வளர்ச்சிநிலைகளையும் கருத்திற்கொண்டு ஆர்வமூட்டும் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆசிரியர்கள் திட்டமிட வேண்டும். ஒவ்வொரு கற்றல் அனுபவத்தையும் பிள்ளைகளின் மனத்தில் ஆழமாகப் பதியச்செய்ய வேண்டும். அவ்வகையில் இந்த வழிகாட்டி, ஆசிரியர்களுக்கு உறுதுணையாக அமையும்.

## அறிமுகம்

இருமொழிக் கல்வி சிங்கப்பூர்க் கல்விமுறையின் முக்கியக் கூறாகும். வீடுகளில் ஆங்கிலம் முதன்மை மொழியாக நிலவும் போக்கு அதிகரித்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் சுமார் 16 விழுக்காட்டு வீடுகளில் அதிகமானோர் ஆங்கிலத்தை முதன்மை மொழியாகப் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு ஆங்கிலத்தை முதன்மை மொழியாகப் பயன்படுத்தும் வீடுகளில் பெரும்பாலானோர் தாய்மொழி ஒன்றையும் இரண்டாம் மொழியாகப் பேசுகிறார்கள். (புள்ளியியல் துறை, 2020).




பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளையினது கற்றலில் பங்கேற்றல்

பிள்ளைகள் தாய்மொழியில் பேசுவதற்கான ஆர்வத்தை வளர்ப்பதன் அவசியத்தையும் தமது உள்ளூர் இனப்பண்பாட்டைப்பற்றி அவர்கள் அறிந்துகொள்வதன் அவசியத்தையும் இப்போக்குகள் உணர்த்துகின்றன. பிள்ளைகள் ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் வெவ்வேறு நிலையிலான மொழிச்சூழல்களையும் திறன்களையும் பெற்றுள்ளனர் என்பதையும் இவை காட்டுகின்றன. ஆகையால், பிள்ளைகள் ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் ஆர்வமும் திறனும் பெற்று விளங்க ஆசிரியர்கள் பிள்ளைகளது பல்வேறுபட்ட தேவைகளை அறிந்து அவற்றை வகுப்பறையில் நிறைவுசெய்தல் அவசியம்.

## பாலர் பள்ளிக் கல்வியின் கற்றல் விளைவுகளின் படிநிலைகள்

பாலர் பள்ளி நிலையில் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் எதிர்பார்க்கப்படும் ஏற்றங்களைப் பாலர் பள்ளிக் கல்வியின் கற்றல் விளைவுகளின் படிநிலைகள் வரையறுக்கின்றன. இவற்றோடு பாலர் பள்ளியில் பயிலும் பிள்ளைகளின் தன்னம்பிக்கையையும் சமூக மனவுணர்வு சார்ந்த திறன்களையும் மேம்படுத்துதல் அவசியமாகும். அவை பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கும் வாழ்நாள் கற்றலுக்கும் அவர்களைத் தயார்படுத்துகின்றன.

எனவே, பாலர் பள்ளிக் கல்வியின் இரண்டாம் ஆண்டு இறுதியில், பிள்ளைகள் கற்றல் விளைவுகளைப் பின்வரும் படிநிலைகளில் பெற்றிருப்பர்:

- தம்முடைய குடும்பத்தினர், நண்பர்கள், ஆசிரியர்கள், சமூகத்தினர் ஆகியோரிடம் அன்பு காட்டுவர்.
- உடற்கூறு இயக்கம், ஆரோக்கிய வாழ்வுக்குரிய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை வளர்த்துக்கொண்டு, பல்வேறு வகையான கலைகளில் மகிழ்வுடன் பங்கெடுப்பர்.
- தம்மைப்பற்றி நல்லுணர்வும் மனநிறைவும் கொண்டிருப்பர்.
- எண்ணங்களையும் உணர்வுகளையும் எடுத்துரைக்கக் கூடியவர்களாக இருப்பர்.
- எதையும் துருவி ஆராய வேண்டும் என்னும் ஆர்வமும் தூண்டுதலும் பெற்றிருப்பர்.
- மற்றவர்கள்மீது அக்கறையும் மரியாதையும்கொண்டு பழகக்கூடியவர்களாக இருப்பர்.
- மற்றவர்களுடன் பொருள்களைப் பகிர்ந்துகொண்டு விளையாடும் இயல்பைப் பெற்றிருப்பர்.
- எது சரி, எது தவறு என்பனவற்றை அறிந்திருப்பர்.

பாலர் பள்ளிக் கல்வியின் முக்கியக் கற்றல் விளைவுகளின் படிநிலைகள், பிள்ளைகள் அடுத்த நிலையை அடைவதற்கு அடித்தளமாக அமைகின்றன. இவை கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள திறன்களைப் பிள்ளைகள் அடைவதற்குத் துணைபுரிகின்றன.

## கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள்

கல்விப் பயணத்தில் ஈடுபடும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் பெற வேண்டிய பண்புகளைக் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள் விளக்குகின்றன. அவற்றைப் பிள்ளைகள் அடைவதற்குத் தகுந்த ஆதரவைச் சிங்கப்பூர்க் கல்விமுறை ஒவ்வொரு நிலையிலும் அப்பிள்ளைகளுக்கு வழங்கி வருகிறது. இந்த ஆதரவு, பிள்ளைகள் தகுந்த திறன் வளர்ச்சியைப் பெற்றுத் திகழ வழிவகுக்கிறது.

அவையாவன:

- தம்மை அறியவும் தெளிவாக மதிப்பிடவும் சுயமாகவும் நுணுக்கமாகவும் சிந்திக்கவும் பயன்விளைவுமிக்க கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடவும் **தன்னம்பிக்கை கொண்டிருத்தல்**

- தம் சுயகற்றலுக்குப் பொறுப்பேற்றுக் கற்க வேண்டும் என்னும் நாட்டங்கொண்டு வினவியும் **கருத்துத்தெரிவித்தும் விடாமுயற்சியுடனும் சுய முனைப்புடனும் கற்றல்**

- குழுவாகத் திறம்படச் செயற்பட்டுப் புதுமுயற்சிகளில் ஈடுபட்டு, எதிர்கொண்ட இடர்களைக் களைந்து, புத்தாக்கத்துடன் செயற்பட்டு, உன்னத நிலையை அடையத் **துடிப்புடன் பங்களித்தல்**

- வலுவான குடிமையுணர்வுடன் நடப்புச் செய்திகளை அறிந்தவர்களாகவும் தம்மைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் அக்கறையுள்ளவர்களாகவும் சிங்கப்பூரில் வேரூன்றிய தன்மைகொண்ட **அக்கறையுள்ள குடிமக்களாகவும் திகழ்தல்**

நம் தாய்மொழிக் கல்வியானது சிங்கப்பூரிலும் சிங்கப்பூருக்கு அப்பாலும் ஒத்த மொழி பேசுபவருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவும் நம் பண்பாடுகளை அறிந்துகொள்ளவும் துணைபுரிவதாக அமைந்துள்ளது.

பிள்ளைகளின் வாழ்நாள் கல்விக்கான அடித்தளத்தைப் பாலர் பள்ளிக் கல்வி அமைக்கிறது. பிள்ளைகளுக்குப் பாலர் பள்ளியில் கிடைக்கப்பெறும் தரமான அனுபவங்கள் அவர்களின் வருங்காலக் கல்விப்பயணத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கண்டறியப்பட்டுள்ளது (ஹெக்மென், 2008; ஷங்கெஃவ், 2000; சில்வியா, மெல்ஃகுவிஷ், செமன்ஸ், சிராஜ்-பிலெச்ஃவட், டெகர்ட், 1999). மேலும், பிள்ளைகள் வாழ்க்கைக்காகக் கற்க ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. சிங்கப்பூர்க் கல்விச் சூழலில் வாழ்க்கைக்கான கற்றல் இயக்கம் (Learn for Life Movement) பின்வரும் வகையில் பாலர் பள்ளிக் கல்விக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது:

- மகிழ்வுறு கற்றலைத் தூண்டுதல்
  (Igniting the Joy of Learning)
  பிள்ளைகள் மகிழ்ச்சியாகக் கற்றுக்கொள்வதுடன் கற்றலில் பேரார்வங்கொள்ளச் செய்தலை வலியுறுத்துகிறது.

- வாழ்க்கைக்காகப் பன்மொழி கற்றல்
  (Learning Languages for Life)
  பன்மொழி கற்பதால் பிள்ளைகள் அறிவுசார் நிலையிலும் பிற்காலத்தில் பொருளியல் கண்ணோட்டத்திலும் பயன் பெறுவார்கள். மேலும், இவ்வியக்கம் பிள்ளைகளின் பண்பாட்டு அடையாளத்தையும் வளர்க்கிறது.

- கல்வி ஏற்றமிகு சக்தியாக இருப்பதையும் உறுதிப்படுத்துகிறது.
  (Ensuring Education as an Uplifting Force)
  பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் சிறந்த தொடக்கம் அமைவதற்கு இது வழிவகுக்கின்றது.

> ***குழந்தைகள் பிறந்ததுமுதல் மொழியைக் கற்றுக்கொள்ளத் தொடங்குகிறார்கள்; மொழியைப்பற்றிக் கற்றுக்கொள்கிறார்கள்; மொழியின்வழியே கற்றுக்கொள்கிறார்கள்.***
>
> ஹலிடே, 1969



இருமொழிக்குரிய நம் கடப்பாடு என்பது மக்களை அவரவர் தாய்மொழிகளோடு ஆங்கிலத்தை ஊக்கத்தோடு கற்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அம்மொழியில் தேர்ச்சிபெற்றுப் பணிநிமித்த மொழியாக அதனைக்கொள்வதையும் தாண்டிச் செல்கிறது. மாறுபட்ட பண்பாடுகள், வேறுபட்ட கண்ணோட்டங்கள், சித்தாந்தங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு அவற்றை இணைக்கக்கூடிய தனித்துவம் வாய்ந்த அடையாளத்தைக் கொண்டிருப்பது சிங்கப்பூரர்களின் கடப்பாடாகும். ஒருவரது பண்பாட்டிற்கும் விழுமியங்களுக்கும் மொழியே சாளரம். ஒன்றுக்கும் மேற்பட்ட மொழியைக் கற்றுத்தேர்வது நன்மை பயக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் போற்றிப் பாராட்டுதலும் வெவ்வேறு கண்ணோட்டங்களையும் விழுமிய அமைப்புமுறைகளுக்கு இடையேயும் இணைப்பை ஏற்படுத்துவது பெரும் நன்மை பயக்கும். இது சிங்கப்பூரராக நம்மைப் பிறரிடமிருந்து தொடர்ந்து வெகுகாலம் வேறுபடுத்திக் காட்டும்.

திரு சான் சுன் சிங், கல்வி அமைச்சர், 2021



## சிங்கப்பூரின் இருமொழிக் கல்விக்கொள்கை

இருமொழிக் கல்விக்கொள்கை நம்முடைய கல்விமுறையின் அடிப்படையாகும். இக்கொள்கையின்படி பிள்ளைகள் அனைவரும் ஆங்கிலமொழியையும் தங்களது தாய்மொழியையும் கற்க வேண்டும். இதன் விளைவாகப் பல்வேறு இனத்தவரும் கருத்தைப் பரிமாறிக்கொள்வதற்குப் பயன்படும் பொது மொழியாக ஆங்கிலம் திகழ்கிறது. சிங்கப்பூரர்களின் பண்பாட்டு அடையாள உணர்வை உறுதிப்படுத்துவதில் தாய்மொழி குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றுவதால் தாய்மொழிக் கல்வியை இருமொழிக் கல்விக்கொள்கை ஊக்குவிக்கிறது. இதன் பயனாக, தலைமுறை தலைமுறையாகப் பாரம்பரியப் பண்புகள் நீடித்து நிலைத்திருக்கின்றன. பொருளியல் கண்ணோட்டத்தில் சிங்கப்பூரர்கள் ஆங்கிலமொழி, தாய்மொழி ஆகிய இரண்டையும் பயன்படுத்துவதால், ஆசிய, மேற்கத்திய முதலிய நாடுகள் வாயிலாகத் தகவலறிவையும் வாய்ப்புகளையும் பெற முடியும். எனவே, ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் பிள்ளைகளின் மொழியறிவை ஒருசேர வளர்ப்பது பொருளியல் மேம்பாட்டுக்கு வழிவகுப்பதோடு சிங்கப்பூரின் பல்லினப் பண்பாடும் பல்லினச் சமுதாயமும் வெற்றிகரமாக நீடித்து நிலைபெற்றிருப்பதை உறுதிசெய்யும்.



பல்லினப் பிள்ளைகள் இந்தியப் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுதல்

## தாய்மொழிக் கல்வியின் குறிக்கோள்கள்:

2010-ஆம் ஆண்டு, கல்வி அமைச்சு, தாய்மொழிகளுக்கான மறு ஆய்வினை மேற்கொண்டது. அந்த ஆய்வு அறிக்கையில் தாய்மொழியை ஆர்வத்தோடு கற்றுத் திறமையாகப் பயன்படுத்துவோரை உருவாக்கும் மூன்று குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டன. அவை பாலர் பள்ளிக் கல்விக்கும் பொருந்தும்.

அவையாவன:

1. **கருத்துப்பரிமாற்றம் —** பின்வருவனவற்றுள் பிள்ளைகளின் அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்:

   - புரிந்துணர்வுடன் கேட்டல்
   - கருத்தை வெளிப்படுத்தப் பேசுதல்
   - சொற்களை அடையாளங்காணுதலும் ஆசிரியரின் வழிகாட்டுதலோடு படித்தலும்
   - சிந்தனைகளைப் பிரதிபலிக்க அடையாளமிடுதலும் குறியீடுகளை வரைதலும் எழுத்துகளை எழுதுதலும்

2. **பண்பாடு —** பின்வருவனவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பிள்ளைகளைப் பல்லினப் பண்பாட்டைப் போற்றி மதிக்கச் செய்தல்:

   - விழாக்கள், பழக்கவழக்கங்கள், மரபுகள், இன்ன பிற
   - நாட்டுப்புறக் கதைகள், இதர கதைகள், இன்ன பிற

3. **தொடர்பிணைப்பு —** பின்வருவனவற்றில் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சமூகத்தினர் ஆகியோருடன் பிள்ளைகள் வலுவான உறவை வளர்த்துக்கொள்ளுதல்:

   - விழாக்கள், பழக்கவழக்கங்கள், மரபுகள் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்குபெறுதல்
   - அன்றாட வாழ்க்கையில் தாய்மொழியைப் பயன்படுத்தித் தாய்மொழி கற்றல் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்

## தாய்மொழிகள் கற்றல், கற்பித்தல் மறு ஆய்வு (2010)

இருமொழிக் கல்விக்கொள்கை காலத்திற்கு உகந்தபடி பயன்மிக்கதாக இருப்பதை உறுதிசெய்வதற்காக 2010-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அன்றைய கல்வித் தலைமை இயக்குநர் தலைமையில் தாய்மொழிக்கான மறு ஆய்வுக் குழு (Mother Tongue Languages Review Committee) அமைக்கப்பெற்றது. வீடுகளில் ஆதிக்க மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டு வருவதாக ஆய்வில் கண்டறியப்பட்டது. வீட்டில் பேசப்படும் மொழி, மாணவர்களின் தாய்மொழி குறித்த மனப்போக்கையும் தாய்மொழித் திறனையும் பாதிப்பதாக ஆய்வு குறிப்பிட்டிருந்தது. குறிப்பாக, ஆங்கிலம் பேசும் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களிடையே தாய்மொழி கற்க விரும்புவோரின் எண்ணிக்கை குறைவாக இருந்தது கண்டறியப்பட்டது.

வீட்டில் வெவ்வேறு மொழிப் பின்னணிகளையும் தாய்மொழியில் வெவ்வேறு மொழித்திறன்களையும் பெற்றுள்ள மாணவர்களுக்கு ஏற்பத் தாய்மொழி கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடுவது அவசியம் என்பதை அறிக்கை எடுத்துரைத்தது. மாணவர்கள் தாய்மொழியைத் தங்களால் இயன்ற நிலைவரை கற்பதற்கு இது வழிவகுக்கும்.

## தாய்மொழிகள் கற்றல், கற்பித்தல் தொடர்பான பிற ஆய்வுகள்

இருமொழிகள் கற்பதால் அறிவுத்திறன் சார்ந்த நன்மைகளைப் பெற இயலும். அறிவுசார் ஆய்வின்படி, ஒருமொழி கற்கும் பிள்ளைகளைவிட இருமொழிகள் கற்கும் பிள்ளைகளுக்குக் கவனத்துடன் செயற்படக்கூடிய ஆற்றல் அதிகம் (பயாலிஸ்டாக், கிரேக் & லுக், 2012). இருமொழி கற்கும் பிள்ளைகளால் குறிப்பிட்ட ஒரு பணியில் கவனத்தை முழுமையாகத் தக்கவைத்துத் தங்களின் இலக்குகளை அடைய முடியும் (பயாலிஸ்டாக் & மஜூம்டர், 1998). பள்ளிச் சூழலில் பிள்ளைகள் ஆக்கபூர்வமாகச் செயற்படுவதற்கு உதவக்கூடிய பல்வேறு அறிவுசார் நன்மைகளுள் இதுவும் ஒன்று (பெஸ்ட், மில்லர் & நக்லியரி, 2011).

அதுமட்டுமன்றி, இளம்வயதிலேயே தாய்மொழி கற்பதன் முக்கியத்துவத்தை அறிவுசார் ஆய்வு சுட்டுகிறது. எட்டு வயதுக்கு முன்பாக ஆங்கில மொழியையும் தாய்மொழியையும் கற்கும் பிள்ளைகள் இம்மொழிகளைத் தாமதமாகக் கற்கத் தொடங்கும் அவர்தம் சக வயதினரைவிட உயர்நிலைவரை இம்மொழிகளில் திறன்பெற்று விளங்க அதிக வாய்ப்பிருக்கிறது என்பதை ஆய்வு எடுத்துரைக்கிறது (கௌல், 2011). மேலும், பிள்ளைகளின் தாய்மொழி கற்றலுக்குக் குடும்பத்தினர் அளிக்கும் ஊக்கம், ஆதரவு (ரென் & வூ, 2013; டிக்சன், வூ & டரக்மெ, 2012; அபு பாக்கர், 2005; லீ & ராவ், 2005), தாய்மொழியை அடிக்கடி பயன்படுத்துதல், தாய்மொழிப் பயன்பாட்டுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் (டிக்சன், வூ & டரக்மெ, 2012) போன்றவை பிள்ளைகள் தாய்மொழியை எளிதில் கற்றுக்கொள்வதற்கான காரணங்களாகும்.




பிள்ளைகளின் தமிழ்மொழி கற்றலில் பெற்றோர் ஆர்வம் காட்டுதல்

பொருளடக்கப் பக்கத்திற்குச் செல்லவும்

# இயல் 1

## இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம்


# இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம்

இளம் மாணவர்களைப் பேணி வளர்க்கும் வகையில் பணிச்சட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது. இது சிங்கப்பூர்ப் பிள்ளைகளின் இளம்பருவக்காலக் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உதவக்கூடிய முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது. நம் பிள்ளைகள் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளை அடைவதற்கும் வாழ்நாள் கற்றலை மேற்கொள்வதற்கும் பொறுப்பான குடிமக்களாக உருவாவதற்கும் வலுவான அடித்தளத்தை எவ்வாறு அமைக்கலாம் என்பதை இப்பணிச்சட்டம் சித்திரிக்கிறது.

### படம் 1: இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம்

**பிள்ளைகள் பற்றிய நம்பிக்கைகள்**
- பிள்ளைகள் மகிழ்வுற்று அறிவார்வத்தோடும் துடிப்போடும் திறம்படக் கற்கும் இயல்பினர்.
- பன்முகச் சூழலிலும் பல்லினப் பண்பாட்டுச் சூழலிலும் விளையாடியும் கற்றலில் ஈடுபட்டும் பிள்ளைகள் யாவரும் ஒருசேர வளர்ச்சி காண்பர்.

**விழுமியங்கள்**
- மதிப்பு
- பொறுப்புணர்வு
- பரிவு
- நேர்மை




**சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள்**
- சுய விழிப்புணர்வு
- தன்னிலை ஆளுமை
- சமூக விழிப்புணர்வு
- உறவுநிலை ஆளுமை
- பொறுப்புமிக்க முறையில் முடிவெடுத்தல்

**கற்றல் இயல்புகள்**
- விடாமுயற்சி
- எண்ணப் பிரதிபலிப்பு
- மதிப்புணர்ந்து போற்றுதல்
- புதுப்புனைவாக்கம்
- புத்தார்வமும் அறிவார்வமுங்கொள்ளுதல்
- ஈடுபாடுகொள்ளுதல்


இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தின் மையமாகப் பிள்ளைகளைப் பற்றிய நம்பிக்கை உள்ளது. விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவற்றோடு ஐந்து கற்றல் பகுதிகளின் முக்கிய அறிவாற்றல், திறன்கள், இயல்புகள் முதலியவை பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்குகின்றன.

பிள்ளைகளின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் ஆசிரியர்கள் வழங்கும் ஆதரவே இப்பணிச்சட்டத்திற்கு மிக முக்கியமானதாகும். தரமிகு கற்றல், கற்பித்தலைத் திட்டமிடவும் வடிவமைக்கவும் அர்த்தமுள்ளதும் பொருத்தமானதுமாகிய கற்றல் அனுபவங்களைப் பிள்ளைகளுக்கு அளிக்கவும் ஆசிரியர்களுக்கு 'ஐடீச்'-இன் (***iTeach***) ஆறு கோட்பாடுகள் தொடர்ந்து வழிகாட்டுகின்றன.

இந்தக் கற்றல் அனுபவங்கள், பாலர் கல்வியின் கற்றல் விளைவுகளின் படிநிலைகளைப் பிள்ளைகள் அடைவதற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துத் தருகின்றன. மேலும், கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள திறன்களில் அவர்கள் வளர்ச்சியடையவும் உதவுகின்றன.

## தாய்மொழி பயிலும் பிள்ளைகள் பற்றிய நமது நம்பிக்கை

பிள்ளைகள் எப்படிப்பட்டவர்கள், அவர்களின் திறன்கள் யாவை, அவர்கள் எப்படிக் கற்றுக்கொள்கிறார்கள் என்பன பற்றிய புரிந்துணர்வு ஆசிரியர்களின் வகுப்பறை நடைமுறைகளை வகுத்துக்கொள்ள உதவுகிறது. ஆசிரியர்கள் பிள்ளைகளின் கற்றலைத் திட்டமிட்டு அவர்களின் சிந்தனையை எவ்வளவு சிறப்பாக விரிவுபடுத்துகிறார்கள் என்பதை அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையே தீர்மானிக்கும்.






## பிள்ளைகள் மகிழ்வுற்று அறிவார்வத்தோடும் துடிப்போடும் திறம்படக் கற்கும் இயல்பினர்.

பிள்ளைகள் இயல்பாக விளையாட்டில் விருப்பங்கொள்பவர்கள். விளையாடும்போது அவர்கள் மகிழ்ச்சியில் திளைப்பார்கள். அவர்கள் தங்களைச் சுற்றி நடப்பனவற்றின்மீது அறிவார்வங்கொண்டு அவற்றைப்பற்றிச் சிந்தித்தும் வினா எழுப்பியும் நுணுகி ஆராய்ந்தும் அறிந்துகொள்ள முற்படுவார்கள். பிள்ளைகளுக்குத் தங்களின் அன்றாட நடவடிக்கைகளையும் கற்றல் தெரிவுகளையும் தேர்ந்தெடுப்பதில் வாய்ப்புகள் வழங்கப்படும்போது அவற்றிற்கேற்றவாறு மிகுந்த ஈடுபாட்டுடன் தங்கள் நண்பர்களுடனும் ஆசிரியருடனும் இணைந்து ஏற்புடைய கற்றல் சூழலை உருவாக்கிக்கொள்வார்கள். தகுந்த ஆதரவும் சூழலும் அமையப்பெற்றால், பிள்ளைகள் எதையும் முனைப்புடன் கற்றுக்கொள்வார்கள்.




பிள்ளை ஆசிரியருடனும் நண்பருடனும் இணைந்து மகிழ்வுறு கற்றலில் ஈடுபடுதல்

## பன்முகச் சூழலிலும் பல்லினப் பண்பாட்டுச் சூழலிலும் விளையாடியும் கற்றலில் ஈடுபட்டும் பிள்ளைகள் யாவரும் ஒருசேர வளர்ச்சி காண்பர்.

பிள்ளைகள் சமூகத்தின் ஓர் அங்கம். அவர்கள் பிற சமூகப் பிரிவினருடன் அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கிக்கொள்ள முற்படுவார்கள். சிங்கப்பூர்ச் சமூகத்தில் பல்வேறுபட்டோர் பல்வகைப் பின்னணிகளையும் விருப்பங்களையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகள் தங்கள் வயதையும் ஆற்றலையும் பொருட்படுத்தாமல் இத்தகையோருடன் விளையாட்டிலும் கற்றலிலும் ஈடுபட்டு வளர்கிறார்கள். இதன்வழியாகவும் பிறரின் தேவைகளைப் புரிந்துகொண்டு அவர்களிடம் அக்கறையாகவும் மரியாதையாகவும் அன்பாகவும் பேசிப் பழகக் கற்றுக்கொள்கிறார்கள்.

நம்முடைய பிள்ளைகள் செறிவுமிக்க மொழியும் பண்பாட்டுச் சூழலும் நிறைந்த சமூகத்தில் வாழ்கிறார்கள். இதனால், பல்லினப் பண்பாட்டைப் போற்றி மதிப்பதோடு ஆங்கிலத்தையும் தாய்மொழியையும் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ள அதிக வாய்ப்புள்ளது. இயல்பான வாழ்க்கைச் சூழலில் பங்கேற்றல், செய்து பார்த்தல் ஆகியவற்றின்மூலம் பல்லினப் பண்பாட்டின் பாரம்பரியத்தைப்பற்றிக் கற்றுக்கொள்கிறார்கள். இதன்வழி இன நல்லிணக்கத்தைக் கட்டிக்காப்பதன் அவசியத்தையும் பல்லினப் பண்பாட்டு மரபுகளை மதித்துப் போற்ற வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்துகொள்கிறார்கள்.




பிள்ளைகளுக்குச் செறிவுமிக்க மொழி, பண்பாட்டுச் சூழலை அமைத்துத் தருதல்

# இளம்பருவக்காலக் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உதவும் முக்கியக் கூறுகள்

இளம்பருவக்காலக் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உதவக்கூடிய முக்கியக் கூறுகள் இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றுக்கான விளக்கம் பின்வருமாறு:

## விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள்

பிள்ளைகளின் குணநலன்களை வளப்படுத்துவதற்கும் பயன்முனைப்புமிக்க கற்றல் நிகழ்வதற்கும் விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவற்றை அவர்கள் கற்றுக்கொள்வது இன்றியமையாததாகும். இளம் பிள்ளைகளைப் பேணி வளர்க்கையில் மேற்குறித்த மூன்று முக்கியக் கூறுகளை ஆசிரியர்களும் பெற்றோர்களும் சமூகமும் பயன்படுத்துவதால் பிள்ளைகளுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இடையே வலுவான உறவு ஏற்படுகிறது.

இந்த வலுவான உறவுசார் பிணைப்புகள் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு உணர்வையும் அடையாளத்தையும் வழங்குகின்றன. இதனால், பிள்ளைகளால் தங்களின் சுற்றுச்சூழலை நம்பிக்கையுடன் ஆராயவும் மற்றவர்கள் வாயிலாகக் கற்றுக்கொள்ளவும் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடவும் இயலும். விழுமியங்கள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவை பாலர் பள்ளிக் கல்வியின் கற்றல் விளைவுகளின் படிநிலைகளை அடைவதற்கு இன்றியமையாதவையாகும்.



தமிழில் பேசுபவர்களுடன் தமிழில் உரையாடுதல்

## விழுமியங்கள்




பிள்ளைகள் சரியான முடிவுகள் எடுப்பதற்கும் அவற்றை முறையாகத் தெரிவிப்பதற்கும் விழுமியங்கள் உதவுகின்றன. சரி, தவறு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை அறியவும் பொறுப்பான தெரிவுகளைத் தேர்ந்தெடுக்கவும் சமூகத்தில் தங்களின் பங்கைப்பற்றி மேலும் அறிந்துகொள்ளவும் விழுமியங்கள் உதவுகின்றன. குறிப்பாகப் பல்லினப் பண்பாடுகள் நிறைந்த நமது சமுதாயத்தில் நம்மை ஒன்றிணைக்கும் பொது விழுமியங்களும் (Shared Values) பிறரை மதிக்கும் பண்பும் நமது பன்முகத்தன்மையைப் போற்றிக் கொண்டாட வகைசெய்கின்றன. இதனால், ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் நம்மால் வாழ இயல்கிறது. நம்முடைய பிள்ளைகளின் வாழ்நாள் அனுபவத்திற்குப் பொருந்தும் நான்கு முக்கிய விழுமியங்கள் **மதிப்பு, பொறுப்புணர்வு, பரிவு, நேர்மை** ஆகியவையாகும்.

### மதிப்பு

பிறரை மதித்து நடக்கும் பிள்ளைகள் தங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், ஆசிரியர்கள், சமூகத்தினர் ஆகியோர் தங்களுக்குச் செய்த உதவியை மறக்காமல் அதற்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள். பிள்ளைகள் பிறருடைய வேறுபாடுகளையும் தனித்தேவைகளையும் கருதாமல் அவர்களைச் சமமாக மதிப்பார்கள். பிள்ளைகள் பிறருடன் பேசும்போதும் பழகும்போதும் கனிவாக நடந்துகொள்வார்கள்.

### பொறுப்புணர்வு

பொறுப்புணர்வு கொண்ட பிள்ளைகள் அன்றாட வேலைகளில் ஈடுபடும்போது தங்களுடைய வேலைகளைத் தாங்களே செய்ய முனைவார்கள். அவர்கள் தாங்கள் செய்வதில் பெருமிதங்கொள்வதோடு அவற்றைச் செய்து முடிப்பதற்கும் ஊக்கங்கொள்வார்கள்.

### பரிவு

பிறரது (எ-டு: மக்களும் மற்ற உயிரினங்களும்) தேவைகளை உணர்ந்து அனுதாபத்தையும் புரிந்துணர்வையும் வெளிப்படுத்துவார்கள். இப்பிள்ளைகள் தங்களின் செயல்கள் பிறர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவார்கள். அவர்கள் தங்களின் சொல்லிலும் செயலிலும் கனிவையும் அக்கறையையும் காட்டுவதற்கு வாய்ப்புகளை எதிர்பார்ப்பார்கள்.

### நேர்மை

நேர்மையைக் கடைப்பிடிக்கும் பிள்ளைகள் உண்மையாக நடந்துகொள்வதுதான் சரியானது என்பதை அறிவார்கள். அவர்கள் தங்களது செயல்களின் விளைவுகளைத் துணிச்சலுடன் ஏற்றுக்கொள்வதோடு தாங்கள் செய்த தவறுகளிலிருந்தும் கற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்கள். அவர்கள் சரியான செயல்களைச் செய்ய முயல்வதோடு தவறு நிகழும்போது அதுபற்றிப் பேசத் துணிவார்கள்.

## சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள்

சமூக மனவுணர்வு சார்ந்த திறன்களின் வளர்ச்சி பிள்ளைகளுக்கு இயல்பாக ஏற்படுவதில்லை. பிள்ளைகள் தங்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் நடத்தையையும் ஒழுங்கமைக்கவும் கட்டுப்படுத்தவும் கற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் பிறருடன் ஒத்திசைவாக நடந்துகொள்ளத் தங்களைப் பழக்கிக்கொள்வதால் அவர்கள் பிறருடன் வலுவான உறவை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இது அவர்களின் உடல்நலத்திற்கும் மனநலத்திற்கும் நன்மை விளைவித்து இனிமையான கற்றல் நிகழ்வதற்கு ஏதுவான சூழமைவை ஏற்படுத்துகிறது.

சமூக மனவுணர்வு சார்ந்த வளர்ச்சிக்கான அறிவாற்றலும் திறன்களும் வாழ்நாள் முழுவதும் ஏற்படும் பற்பல அனுபவங்களினால் வளரக்கூடியவை. ஆசிரியர்கள் நடைமுறைசார்ந்த கற்றல் அனுபவங்களை வடிவமைத்து, கற்றலுக்கான ஆதரவை நல்கிப் பிள்ளைகளின் தேவைக்கும் ஆர்வத்திற்கும் ஏற்ற வகையில் அவற்றுள் மாற்றங்களைச் செய்ய வேண்டும்.




சமூக மனவுணர்வு சார்ந்த வளர்ச்சிக்கான அனுபவங்களை ஏற்படுத்தித் தருதல்

பாலர் பள்ளிக் கல்வியின்போது வலியுறுத்தப்படும் சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

**சுய விழிப்புணர்வு** – பிள்ளைகள் தங்களின் உணர்ச்சிகள், எண்ணங்கள், பண்புகள், தனிப்பட்ட இலக்குகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள வழிவகுப்பதோடு தாங்கள் யார் என்பதைப் பற்றிய தெளிவையும் உருவாக்கிக்கொள்ளவும் உதவுகிறது.

**தன்னிலை ஆளுமை** – இத்திறன் பிள்ளைகள் தங்களின் உணர்ச்சிகள், எண்ணங்கள், நடத்தைகள் ஆகியவற்றைத் தாமாக ஒழுங்குபடுத்திக்கொள்ளவும் தங்களின் நலனைப் பேணவும் சமூகம் சார்ந்த நன்னடத்தைகளை வெளிப்படுத்தவும் உதவுகிறது.

**சமூக விழிப்புணர்வு** – இத்திறன் பிள்ளைகள் அறிவுநிலையிலும் உணர்வுநிலையிலும் பிறரின் உளமறிந்து செயற்படும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள உதவுகிறது. மேலும், பல்வேறு பின்னணி அல்லது பண்பாடு கொண்டவர்களின் கண்ணோட்டங்களைப் புரிந்துகொள்வதோடு சமூகச் சூழலுக்கும் பிறருடைய தேவைகளுக்கும் மதிப்பளிக்கும் நுண்ணுணர்வைப் பெறுவதற்கும் உதவுகிறது.

**உறவுநிலை ஆளுமை** – இத்திறன் பிள்ளைகள் சமூக விதிமுறைகளுக்கும் பண்பாட்டுக்கும் ஏற்பப் பிறருடன் உடன்பாடான உறவுகளை வளர்த்துக்கொள்ளவும் அவற்றைத் தக்க வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. பிள்ளைகள் முன்னோக்குப் பார்வையுடன், தங்களது செயற்பாடுகள் பிறர்மீது ஏற்படுத்தும் தாக்கத்தையும் விளைவுகளையும் புரிந்துகொள்ளும் பரிவுமிக்க குணத்தை வளர்க்க உதவுகிறது.

**பொறுப்புள்ள முறையில் முடிவெடுத்தல்** – இத்திறன் பிள்ளைகள் நெறிமுறைசார் காரணங்களையும் விழுமியங்கள் அடிப்படையிலான முடிவுகளையுங்கொண்டு சரியான தெரிவுகளைத் தேர்ந்தெடுக்க உதவுகிறது.



## கற்றல் இயல்புகள்

கற்றலின்போது நன்னடத்தையும் கற்றலைப் பற்றிய நல்ல மனப்போக்கும் கற்றல் நிகழ்வதற்கு இன்றியமையாதவை. நல்ல கற்றல் பண்புகளைக்கொண்ட பிள்ளைகள் தமக்குச் சவால்களும் சிரமங்களும் ஏற்பட்டாலும் தொடர்ந்து கற்கவும் கற்றதை வெவ்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்தவும் ஊக்கங்கொள்வார்கள். இத்தகைய பிள்ளைகள் வாழ்நாள் முழுவதும் கல்வியில் நாட்டங்கொண்டு திகழ்வதோடு விரைந்து மாறிவரும் உலகில் சிறந்து விளங்குவதற்குத் தக்க தயார்நிலையினையும் பெற்றிருப்பார்கள்.

**விடாமுயற்சி, எண்ணப் பிரதிபலிப்பு, மதிப்புணர்ந்து போற்றுதல், புதுப்புனைவாக்கம், புத்தார்வமும் அறிவார்வமுங்கொள்ளுதல், ஈடுபாடுகொள்ளுதல்** ஆகிய பண்புகள் பிள்ளைகளுக்கு அவசியமாகும். இப்பண்புகளின்வழியாகப் பிள்ளைகள் ஆர்வத்துடனும் துடிப்புடனும் செயல்திறனுடனும் தாய்மொழியைக் கற்பார்கள்; கற்றலை மகிழ்ந்து அனுபவிப்பார்கள்.



**விடாமுயற்சி (Perseverance)**

விடாமுயற்சியுள்ள பிள்ளைகள், தங்கள் வேலையைச் செய்து முடிக்கும்வரை தொடர்ந்து அச்செயலில் ஈடுபடுவார்கள். கற்றல் சவால்மிக்கதாக இருந்தாலும் அவர்கள் எளிதில் ஊக்கத்தை இழக்கமாட்டார்கள்; கொண்ட இலக்கிலிருந்து பின்வாங்கமாட்டார்கள்.

**எண்ணப் பிரதிபலிப்பு (Reflectiveness)**

எண்ணப் பிரதிபலிப்பு செய்யும் திறன்கொண்ட பிள்ளைகள், தாங்கள் பெற்ற அனுபவங்களின்போது செய்ததையும் பார்த்ததையும் கேட்டதையும் உணர்ந்ததையும் சிந்தித்துப் பார்ப்பார்கள். அவர்கள் தங்களின் கற்றலை மேம்படுத்தவும் புதிய அறிவாற்றலையும் புரிந்துணர்வையும் பெறவும் மாற்று யோசனைகளைப்பற்றிச் சிந்திக்கவும் செய்வார்கள்.

**மதிப்புணர்ந்து போற்றுதல் (Appreciation)**

மதிப்புணர்ந்து போற்றும் பண்புள்ள பிள்ளைகள், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட குணங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் பிறர் பேசுவதைக் கேட்டு அந்தக் கருத்துகளுக்கு மதிப்பளித்து அவற்றிலிருந்தும் கற்றுக்கொள்வார்கள்.

**புதுப்புனைவாக்கம் (Inventiveness)**

புதுப்புனைவாக்கத் திறன்கொண்ட பிள்ளைகள், தங்களின் சிந்தனையில் நெகிழ்வுத்தன்மை கொண்டவர்கள். அவர்கள் ஆக்கபூர்வமான வழிகளில் ஆராய்ந்து செயலாற்றும் திறன் மிக்கவர்கள்.

**புத்தார்வமும் அறிவார்வமுங்கொள்ளுதல் (Sense of wonder and curiosity)**

புத்தார்வமும் அறிவார்வமுங்கொள்ளும் பிள்ளைகள், உலகைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவார்கள். அவர்கள் கேள்விகள் கேட்கத் தயங்க மாட்டார்கள். அதோடு, புதியனவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்ளவும் விரும்புவார்கள்.




**ஈடுபாடுகொள்ளுதல் (Engagement)**

ஈடுபாடு நிறைந்த பிள்ளைகள் ஊக்கத்துடனும் மகிழ்வுடனும் கற்பார்கள். அவர்கள் அக்கறையுடன் கற்பதோடு சிறந்து விளங்க முயல்வார்கள்.

## கற்றல் பகுதிகள்

பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்குப் பங்களிக்கும் ஐந்து கற்றல் பகுதிகள் பின்வருமாறு அமைந்துள்ளன:

- அழகியலும் படைப்பாக்க வெளிப்பாடும்
- உலகைக் கண்டறிதல்
- உடல்நலமும் பாதுகாப்பும் இயக்கத்திறன் வளர்ச்சியும்
- மொழியறிவும் எழுத்தறிவும் (ஆங்கிலமும் தாய்மொழியும்)
- எண்ணறிவு

ஒவ்வொரு கற்றல் பகுதியும் சில கற்றல் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. பாலர் பள்ளிக் கல்வியின் இரண்டாம் ஆண்டின் நிறைவில் பிள்ளைகள் தெரிந்துகொள்ள வேண்டியவைபற்றியும் செய்ய வேண்டியவைபற்றியும் பொதுவான எதிர்பார்ப்புகளைக் கற்றல் குறிக்கோள்கள் உள்ளடக்கியுள்ளன.



தமிழ்மொழி கற்றலின்போது மற்றக் கற்றல் பகுதிகளையும் ஒருங்கிணைத்தல்

அவை பின்வருமாறு அமைந்துள்ளன:

| கற்றல் பகுதி | கற்றல் குறிக்கோள்கள் |
|---|---|
| அழகியலும் படைப்பாக்க வெளிப்பாடும் | 1. கலையும் இசையும் அசைவும் சார்ந்த நடவடிக்கைகளில் மகிழ்வுடன் பங்கேற்றல்<br>2. கலையும் இசையும் அசைவும் சார்ந்த நடவடிக்கைகளின்வழியே கருத்துகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துதல்<br>3. கலை, இசை, அசைவு ஆகியவற்றைப் போற்றுதல் |
| உலகைக் கண்டறிதல் | 1. தாங்கள் வாழும் உலகத்தைப்பற்றி அறிவார்வங்கொள்ளுதல்<br>2. தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துகொள்ள இன்றியமையாச் செயற்பாட்டுத் திறன்களைப் பயன்படுத்துதல்<br>3. தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய பொறுப்புணர்வையும் அக்கறையையும் மதிப்பையும் வளர்த்துக்கொள்ளுதல் |
| உடல்நலமும் பாதுகாப்பும் இயக்கத்திறன் வளர்ச்சியும் | 1. வீட்டிலும் பள்ளியிலும் பொது இடங்களிலும் ஆரோக்கியமான பழக்கவழக்கங்களையும் பாதுகாப்பு விழிப்புணர்வையும் வளர்த்துக்கொள்ளுதல்<br>2. உடல் சார்ந்த பலவிதமான நடவடிக்கைகளில் பங்கேற்று மகிழ்தல்<br>3. நடவடிக்கைகளின்போது கட்டுப்பாடு, ஒருங்கிணைப்பு, சமநிலை ஆகியவற்றை வெளிப்படுத்துதல்<br>4. நுண்ணியக்கத்திறன் நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டையும் ஒருங்கிணைப்பையும் வெளிப்படுத்துதல் |
| மொழியறிவும் எழுத்தறிவும் (ஆங்கிலம்) | 1. மகிழ்ச்சிக்காகவும் தகவல் பெறுவதற்காகவும் செவிமடுத்த கருத்தையொட்டிப் பிறருடன் தன்னம்பிக்கையோடு பேசுதலும் கலந்துரையாடுதலும்<br>2. மகிழ்ச்சியுடனும் புரிந்துணர்வுடனும் படித்தல்<br>3. குறியீடுகள் முதலான வடிவங்கள், எழுத்துகள், வழக்கமான எழுத்துகளையும் தாமே உருவாக்கிய எழுத்து வடிவங்களையும் கொண்ட சொற்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி எண்ணங்களையும் தகவல்களையும் தெரிவித்தல் |
| எண்ணறிவு | 1. எண்ணியல் கருத்தாக்கங்களையும் திறன்களையும் பயன்படுத்தி, அன்றாட அனுபவங்களின் வாயிலாக மகிழ்வுடன் கற்றுக்கொள்ளுதல்<br>2. தொடர்புகளையும் வடிவங்களையும் புரிந்துகொள்ளுதல்<br>3. எண்ணியல் திறன்களையும் எண் குறித்த உணர்வையும் வளர்த்துக்கொள்ளுதல்<br>4. அடிப்படை வடிவங்களையும் இடஞ்சார்ந்த கருத்தாக்கங்களையும் புரிந்துகொள்ளுதல் |

தாய்மொழி ஆசிரியர்கள், மொழியும் படிப்பறிவும் என்னும் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள். அத்துடன், தாம் நடத்தும் நடவடிக்கைகளில் மற்ற நான்கு கற்றல் பகுதிகளையும் இணைத்துக்கொள்வதால் பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு அவர்கள் துணைபுரிவார்கள். இதனால், தாய்மொழி வாயிலாக மற்றக் கற்றல் பகுதிகளிலும் வளர்ச்சி காணப் பிள்ளைகளுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

## ‘ஐடீச்’ (*iTeach*) கோட்பாடுகள்

மழலையர் கருத்தியல் கோட்பாடுகள், அணுகுமுறைகள், செயல்முறைகள் ஆகியவற்றையும் ஆசிரியர்கள் கவனத்திற்கொண்டு கற்றலை நெறிப்படுத்த வேண்டும். அதனால், தரமான பாலர் பள்ளிப் பாடக்கலைத்திட்டத்தில் ‘ஐடீச்’ (***iTeach***) கோட்பாடுகள் இன்றியமையாதவையாகக் கருதப்படுகின்றன. பிள்ளைகள் முழுமையான கல்வியைப் பெற்று வளர்ச்சியடைவதற்கு இவை துணைபுரிகின்றன.

பிள்ளைகளின் கற்றலையும் வளர்ச்சியையும் மேம்படுத்த ஏதுவான நடைமுறைகளையொட்டி, உள்ளூரிலும் அனைத்துலக அளவிலும் நடைபெற்ற ஆய்வுகளில் கண்டறியப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இக்கோட்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.



தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம் வாயிலாக
நடைமுறைக்கு ஏற்ற கற்றல் நிகழுதல்

| ‘ஐடீச்’ (*iTeach*) கோட்பாடுகள் | | ஆய்வுகளின் அடிப்படையிலான விளக்கம் |
|---|---|---|
| Integrated approach to teaching and learning<br><br>**கற்றல் கற்பித்தலுக்குரிய ஒருங்கிணைந்த அணுகுமுறை** | பிள்ளைகள் தங்கள் கற்றலையும் அன்றாட வாழ்க்கை அனுபவங்களையும் அர்த்தமுள்ள வகையில் தொடர்புபடுத்திப் பார்க்கவும் கருத்தாக்கங்களும் திறன்களும் எவ்வாறு ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பதைப் புரிந்துகொள்ளவும் அவற்றை வெவ்வேறு சூழல்களில் பயன்படுத்தவும் கற்றல் கற்பித்தலுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை உதவுகிறது. அர்த்தமுள்ள தொடர்புகளை எவ்வாறு உருவாக்கிக்கொள்ளலாம் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு அமையும்.<br><br>வெவ்வேறு கற்றல் பகுதிகளுக்கிடையே; பிள்ளைகளின் முந்தைய அனுபவங்களுக்கும் புதிய அனுபவங்களுக்கும் இடையே; பிள்ளைகளின் ஆர்வத்துக்கும் அன்றாட அனுபவங்களுக்கும் புதிய அனுபவங்களுக்கும் இடையே; வெவ்வேறு கற்றல் சூழல்களுக்கு இடையே; (எ-டு: வீட்டிலும் வெளியிலும், வீட்டிலும் பாலர் பள்ளியிலும், ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் நடத்தப்படும் நடவடிக்கைகளுக்கு இடையே) வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களுக்கு இடையே. (எ-டு: வெவ்வேறு வகுப்பு, நிலை) | நமது மூளை ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவற்றை எளிதில் உள்வாங்கிக்கொள்கிறது; தொடர்பற்ற தனித்தனித் தகவல்களை நிராகரிக்க முயல்கிறது. (கேய்ன் & கேய்ன், 1991) |
| Teachers as facilitators of learning<br><br>**கற்றலை வழிநடத்துபவராக ஆசிரியர்கள் விளங்குதல்** | கற்றலை வழிநடத்தும் ஆசிரியர்கள் தங்கள் அறிவு, திறன், வளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பிள்ளைகளின் கற்றலை விரிவுபடுத்துகின்றனர். பிள்ளைகளின் கற்றலையும் வளர்ச்சியையும் மேம்படுத்த அவர்கள் பிள்ளைகளின் குடும்பங்களுடன் நெருக்கமான தொடர்பிணைப்பை ஏற்படுத்திக்கொள்கின்றனர். ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கற்றலில் முனைப்புடன் ஈடுபடுத்தவும் கற்றலை வழிநடத்தவும் பலதரப்பட்ட கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தலாம். பிள்ளைகளின் மாறுபட்ட கற்றல் தேவைகளையும் ஆர்வங்களையும் பூர்த்திசெய்யத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகள் உட்படப் பல்வேறு வகையான கற்றல் கற்பித்தல் வளங்களையும் அவர்கள் பயன்படுத்தலாம். பாலர் பள்ளிகளில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்த கற்றல் கற்பித்தல் வழிகாட்டு குறிப்பு (2017) என்னும் குறிப்பேட்டில் மூன்று வழிகாட்டு கோட்பாடுகள் | பிள்ளைகளால் செய்ய இயலும் காரியங்களோடு அவர்கள் சற்றுக் கூடுதலாக முயன்று பெறக்கூடிய கற்றல் அனுபவங்களையும் ஆசிரியர் சேர்த்துக்கொண்டு தக்க ஆதரவை வழங்க வேண்டும். (வைகாட்ஸ்கி, 1962) |

| | | |
|---|---|---|
| | விவரிக்கப்பட்டுள்ளன. அவை, தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் அர்த்தமுள்ள, பொருத்தமான பயன்பாடு குறித்து ஆசிரியர்களுக்குப் பரந்த வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. அவை பின்வருமாறு அமைந்துள்ளன:<br><br>பிள்ளைகளுக்குரிய கற்றல் அனுபவங்களைப் பூர்த்தி செய்வதாகவும் அவர்தம் வளர்ச்சிநிலைக்கு ஏற்றதாகவும் இருத்தல்; ஆசிரியர்களின் ஆதரவும் வழிகாட்டுதல்களும் இருத்தல்; பிள்ளைகளின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் முக்கியமாகக் கருத்திற்கொண்டிருத்தல்.<br><br>பிள்ளைகள் கற்றுக்கொள்வதற்கு உகந்த சூழலை ஏற்படுத்த ஆசிரியர்கள் விழைகின்றனர். அது பிள்ளைகளுக்குப் பாதுகாப்பானதாகவும் மகிழ்வூட்டுவதாகவும் கற்றலுக்குத் தேவையான தூண்டுதல்களை வழங்குவதாகவும் அமைதல் வேண்டும். பிள்ளைகள் அனுபவத்தின் வாயிலாகக் கற்று வளம்பெறுவதற்காகப் பலவிதமான வெளிப்புற நடவடிக்கைகளை ஆசிரியர்கள் வழங்கலாம்:<br><br>• *வெளிப்புறக் கற்றல்* – பிள்ளைகள் வெளிப்புறத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br><br>• *வெளிப்புறத்தைப்பற்றிக் கற்றல்* – பிள்ளைகள் வெளிப்புறத்தைப்பற்றி ஆராய்ந்து மேலும் தெரிந்துகொள்ளுதல்<br><br>• *வெளிப்புறத்தின் வாயிலாகக் கற்றல்* – பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியை ஆதரிக்க ஆசிரியர்கள் வெளிப்புறச் சூழலின் தனித்துவமான பண்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுதல் | |
| Engaging children in learning through purposeful play<br><br>**அர்த்தமுள்ள விளையாட்டின்வழியே பிள்ளைகளைக் கற்றலில் ஈடுபடுத்துதல்** | அர்த்தமுள்ள விளையாட்டின்வழியே பிள்ளைகளைக் கற்றலில் ஈடுபடுத்த வேண்டும் என்பதை இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டம் பரிந்துரைக்கிறது. அர்த்தமுள்ள விளையாட்டு என்பது, பிள்ளைகளுக்கு மகிழ்வூட்டும் அர்த்தமுள்ள விளையாட்டு அனுபவங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதன்வழியே விரும்பத்தக்க கற்றல் அடைவுநிலைகளை அடைவதைக் குவிநோக்கி, பிள்ளைகளின் கற்றலையும் வளர்ச்சியையும் விரிவுபடுத்தி வழிநடத்துவது உறுதிப்படுத்தப்படும். அர்த்தமுள்ள விளையாட்டு என்பது பிள்ளை தன்னிச்சையாகத் தாமே முன்னெடுப்பதுமுதல் அதிகக் கட்டமைப்போடு ஆசிரியர் முன்னெடுக்கும் விளையாட்டுவரையிலும் அடங்கும். | விளையாட்டு என்பது, பிள்ளைகளின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் முக்கியமான நடவடிக்கை ஆகும்.<br>(வைகாட்ஸ்கி, 1966) |

| | | |
|---|---|---|
| Authentic learning through quality interactions<br><br>**தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம் வாயிலாக நடைமுறைக்கு ஏற்றவாறு கற்றல் நிகழுதல்** | பிள்ளைகள் மற்றவர்களுடனோ பொருள்களுடனோ சுற்றுச்சூழலுடனோ தொடர்புகொண்டு கருத்தையோ யோசனையையோ முன்வைக்க மற்றவர்களுடன் நீடித்த உரையாடல்களில் ஈடுபட வேண்டும். அதற்காக ஆசிரியர் திட்டமிட்டுச் செயற்படும்போது தரமிக்க கருத்துப்பரிமாற்றம் நிகழ்கின்றது.<br><br>தரமிக்க கருத்துப்பரிமாற்றத்தை ஊக்குவிக்க ஆசிரியர்கள் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்:<br><br>• உடன்பாடானதும் ஆதரவானதுமான சூழலை உருவாக்குதல்<br><br>• தெளிவான வகுப்பறை எதிர்பார்ப்புகளையும் நடைமுறைகளையும் அமைத்தல்<br><br>• வினாக்களையும் தூண்டுதல்களையும் பயன்படுத்தி அறிவுசார் வளர்ச்சியை மேம்படுத்துதல் | சமூகத்துடன் நிகழும் கருத்துப்பரிமாற்றம் அறிவுசார் வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைக்கிறது. (வைகாட்ஸ்கி, 1978) |
| Children as constructors of knowledge<br><br>**பிள்ளைகள் தாங்களாகவே தங்கள் அறிவாற்றலை உருவாக்குதல்** | பிள்ளைகள் தங்களின் அன்றாட அனுபவங்கள், உற்றுநோக்குதல், ஆராய்தல், பிரதிபலித்தல், தொடர்புகொள்ளுதல், முடிவெடுத்தல் ஆகியவற்றின் வாயிலாகவும் தங்கள் அனுபவங்கள் குறித்துச் சக நண்பர்களுடனும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாடுதல் வாயிலாகவும் தம் அறிவை வளர்த்துக்கொள்கின்றனர். | பிள்ளைகள் தாம் சந்திக்கும் மனிதர்கள், பார்க்கும் இடங்கள், பொருள்கள் போன்றவற்றைப்பற்றிச் சுயமாகத் தம் அறிவை வளர்த்துக்கொள்கிறார்கள். (பியாஜே, 1932) |
| Holistic development<br><br>**முழுமையான வளர்ச்சி** | பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சி, அவர்களின் உடல், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், அறிவாற்றல், நன்னெறி, படைப்பாற்றல், அழகியல் முதலானவற்றை உள்ளடக்குகிறது. இத்திறன்கள் மேம்பாடு அடைவதால் பிள்ளைகள் அன்றாட வாழ்க்கையின் தேவைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள முடியும். அத்துடன் அவர்கள் புதியனவற்றைக் கண்டுபிடிப்பதால் ஏற்படும் உற்சாகத்தையும் அனுபவிக்க முடியும். பாலர் பள்ளி ஆண்டுகள் பிள்ளைகளின் மற்ற முக்கியத் திறன்களான நிர்வாகச் செயற்பாடு, சுய கட்டுப்பாட்டுத் திறன்கள் ஆகியவற்றை வளர்ப்பதற்கான நற்களங்களாக அமைகின்றன. | கல்வியின் நோக்கம் ஒருவருடைய அறிவு, மனம், செயற்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதே ஆகும். இவை பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி, சமூக மனவுணர்வு சார்ந்த வளர்ச்சி, உடல்வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது. (பெஸ்டலோசி, 1746-1827) |

# தாய்மொழியைக் கற்பிக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கியக் கூறுகள்:

## 1. பிள்ளைகளிடையே தாய்மொழி வாழும் மொழியாக நிலைபெற வேண்டும்

பல்வேறு நடைமுறை சார்ந்த சூழல்களில் தாய்மொழியை அடிக்கடி கேட்கும் வாய்ப்புப் பிள்ளைகளுக்கு அமைதல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் தங்கள் அன்றாடச் செயற்பாடுகளிலும் நிகழ்வுகளிலும் தாய்மொழியைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கண்கூடாகப் பார்ப்பார்கள்; உணர்வார்கள். இதன்வழியே பிள்ளைகள் தாய்மொழியை விருப்பத்துடனும் இயல்பாகவும் பயன்படுத்த முனைவார்கள்.

பிள்ளைகளிடையே தாய்மொழி வாழும் மொழியாகத் தொடர வேண்டுமாயின், அன்றாட வகுப்பறை நடவடிக்கைகளிலும் செயற்பாடுகளிலும் தாய்மொழியைப் பயன்படுத்த வேண்டும். கற்றல் தொடர்பான கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கோ விளக்குவதற்கோ தாய்மொழியைப் பயன்படுத்தலாம். மேலும், நம் பல்லினப் பண்பாட்டின் குறிப்பிட்ட அம்சங்களை எடுத்துக்காட்டுவதற்கும் தாய்மொழியைப் பயன்படுத்தலாம்.

### எடுத்துக்காட்டு:

பெரியவர்களுக்கு அவரவர் பண்பாட்டிற்கு ஏற்றவாறு எவ்வாறு முகமன் கூறுவது என்பதைப் பிள்ளைகளிடம் காட்டுவதோடு அதன் முக்கியத்துவத்தையும் விளக்கலாம்.

## 2. பல்வேறுபட்ட திறன்களைக்கொண்ட பிள்ளைகளுக்கு ஏற்றவாறு தாய்மொழி கற்பித்தல் அமைய வேண்டும்

பொதுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி கற்றலில் திறன் அடிப்படையில் பல்வேறுபட்ட நிலைகளில் இருப்பதை 2010-ஆம் ஆண்டு தாய்மொழிகள் மறு ஆய்வின்போது மேற்கொண்ட கருத்தாய்வு முடிவுகள் குறிப்பிடுகின்றன. அதுபோலவே, பாலர் பள்ளிப் பிள்ளைகளும் வேறுபட்ட மொழித்திறன்களைக் கொண்டவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. எனவே, ஆசிரியர்கள் பிள்ளைகளின் வீட்டுமொழிப் பின்னணியையும் மொழி ஆற்றலையும் கருத்திற்கொண்டு, கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும். அத்துடன், தாய்மொழியில் பல்வேறுபட்ட திறன்களைக்கொண்ட பிள்ளைகளுக்காக வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் உத்திகளை வகுப்பறையில் மேற்கொள்ள வேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

தாய்மொழியில் திறம்படச் செயற்படக்கூடிய பிள்ளைகளுக்கு அவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடக்கூடிய சற்றுச் சவால்மிக்க நடவடிக்கைகளைக் கொடுக்கலாம். தாய்மொழியில் அடிப்படைத் திறன்களைப் பாலர் பள்ளியில் கற்றுக்கொள்ளும் பிள்ளைகளுக்கு ஏற்ற நடவடிக்கைகளை வடிவமைத்துக் கொடுப்பதோடு அவர்களுக்குக் கூடுதல் ஆதரவையும் நல்கலாம்.

### 3. நடைமுறை சார்ந்த சூழல்களில் தாய்மொழி கற்றல் ஈடுபாடுமிக்கதாகவும் கருத்துப்பரிமாற்றத்திற்கு வழிவகுப்பதாகவும் அமைய வேண்டும்

தாய்மொழி கற்றல் ஈடுபாடுமிக்கதாகவும் கருத்துப்பரிமாற்றத்திற்கு வழிவகுக்கும் முறையிலும் நிகழ்ந்தால், ஒத்த வயதுள்ள பிள்ளைகள், ஆசிரியர்கள், குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரிடையே தாய்மொழியில் உரையாடுவதற்கு ஏற்புடைய சூழமைவு உருவாகக்கூடும். பிள்ளைகள் பல்வேறு சூழலில் பலருடன் தாய்மொழியில் உரையாடும்போது அவர்கள் ஏற்கெனவே கற்றுக்கொண்டவை வலுப்பெறும்; புதிய சொற்களையும் தொடர்களையும் அறிந்துகொள்ள வாய்ப்புகள் ஏற்படும். மேலும், தாய்மொழி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரியாகத் திகழ்ந்து, பிள்ளைகள் தாய்மொழியைக் கற்கவும் பயிற்சி பெறவும் நடைமுறை சார்ந்த சூழலில் வாய்ப்புகளை வழங்கி அவர்களின் கற்றலுக்குத் துணைபுரியலாம். சமச்சீரான அளவில் வெளிப்படையான கற்றல் வாய்ப்புகளை வழங்குவதாலும் அர்த்தமுள்ள விளையாட்டுவழியே மொழியை அறிமுகப்படுத்துவதாலும் பிள்ளைகளின் மொழி கற்றல் மேம்படும் என ஆய்வு சுட்டுகிறது. (மௌரலிஸ் & நியூமன், 2010).

**எடுத்துக்காட்டு:**

பிள்ளைகளைப் பாலர் பள்ளியின் அருகிலுள்ள கடைக்கு அழைத்துச் சென்று கடைக்காரரிடம் தாய்மொழியில் பேசிப் பொருள்களை வாங்கச் செய்யலாம். இதனால், வகுப்பறையில் கற்றுக்கொண்ட சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்திப் பார்க்கும் வாய்ப்புப் பிள்ளைகளுக்குக் கிடைக்கும்.

பொருளடக்கப் பக்கத்திற்குச் செல்லவும்

# இயல் 2

## தாய்மொழி கற்றலுக்குத் திட்டமிடுதல்

# தாய்மொழி கற்றலுக்குத் திட்டமிடுதல்

தாய்மொழி கற்றலுக்குத் திட்டமிடும்போது பிள்ளைகள் மொழியை எவ்வாறு கற்றுக்கொள்கிறார்கள்; அதனை எவ்வாறு கைவரப்பெறுகிறார்கள் என்பதை ஆராய்வது அவசியம்.

# இளம்பருவத்தில் மொழியும் படிப்பறிவும்

தாயின் வயிற்றில் கருவாக இருந்த காலம் முதற்கொண்டே குழந்தைக்கு மொழிசார்ந்த அறிவு இயங்கத் தொடங்கிவிடுகிறது. கருவில் இருக்கும் குழந்தைக்கு வெவ்வேறு ஒலிப்புகளை உணர்ந்துகொள்ளும் திறன் உண்டு. மொழியைப் புரிந்துகொள்வதற்கு முன்னர்க் குழந்தைகள் தம்மைச் சுற்றி எழும் ஒலிகளைக் கேட்பதில் ஆர்வங்கொள்கின்றன. அவ்வொலிகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருளை உணர்த்துகின்றன என்பதைக் குழந்தைகள் புரிந்துகொள்கின்றன. குழந்தைகள் பிறந்ததுமுதல் தம்மைப் பேணி வளர்ப்பவர்களுடன் உணர்வுபூர்வமாகத் தொடர்புகொள்கின்றன.

ஆறு மாதத்திற்கும் குறைவான வயதுடைய குழந்தைகள் மொழி அடிப்படையில் ஒலிகளை அடையாளங்காணும் திறன் பெற்றிருக்கும். இந்தத் திறன் குழந்தை வளரவளர மேலும் வளர்ச்சி காணும். தாம் வளரும் சுற்றுச்சூழலில் கதைப்புத்தகம் படித்தல், பாட்டுப் பாடுதல், விளையாட்டுகள்மூலம் மொழி கற்றல் ஆகியவை இடம்பெற்றால் குழந்தைகள் அந்த மொழியைக் கூர்ந்து கேட்கத் தொடங்கும்; அம்மொழியைக் கற்க வேண்டும் என்னும் ஆர்வம் குழந்தைகளுக்கு இயல்பாகவே அதிகரிக்கும்; கேட்டல், பேசுதல் முதலிய அடிப்படை மொழித்திறன்களை மேம்படுத்திக்கொள்ளவும் இவை நல்வாய்ப்பாக அமையும்.

பின்வரும் கூறுகளை உற்றுநோக்குவதன்வழிப் பிள்ளைகள் மொழி கற்றலில் அடைந்துள்ள வளர்ச்சியை அளவிட்டு அறியலாம்.

| | |
|---|---|
| **பிள்ளைகளின் ஆர்வமும் ஈடுபாடும்** | மொழியை மகிழ்வுடனும் உற்சாகத்துடனும் பயன்படுத்துதல் |
| **பிள்ளைகளின் மொழித்திறன்** | கேட்டல், பேசுதலுக்கான அறிவாற்றலும் திறன்களும் பெற்றிருத்தல் |
| **பிள்ளைகளின் படிப்பறிவுத்திறன்** | படித்தல், எழுதுதலுக்கான அறிவாற்றலும் திறன்களும் பெற்றிருத்தல் |

பிள்ளைகளின் மொழித்திறனும் படிப்பறிவுத்திறனும் படிப்படியாக வளர்ச்சி காணும்போது அவர்கள் மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும் ஆற்றலும் மேம்படுகின்றது. இந்த மொழி ஆற்றல் அவர்கள் மற்றவர்களுடன் கருத்தைப் பரிமாறிக்கொள்வதற்கும் தங்களின் சமூகத்தைப்பற்றியும் தாம் வாழும் உலகத்தைப்பற்றியும் மேலும் புரிந்துகொள்வதற்கும் அடிப்படையாய் அமையும்.

## இருமொழிகளைக் கற்றல்

பிள்ளைகளின் தொடக்கக்கால ஆண்டுகள் மொழி வளர்ச்சிக்கு அடிப்படையானவை. ஒவ்வொரு குழந்தையாலும் இளவயதில்தான் மிக எளிதாக மொழியைக் கற்றுக்கொள்ள இயலும். எனவே, பாலர் பள்ளிகளில் இருமொழிக் கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது அவசியமாகும்.

பிள்ளையின் கற்றலும் சிந்தனையாற்றலும் மேம்படுவதற்கு மொழியறிவும் படிப்பறிவும் இன்றியமையாதவை. உலகமயமாதல் சூழலில் உலக நாடுகளோடு பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள ஆங்கிலமொழி நம் பிள்ளைகளுக்கு அடிப்படைத் தேவையாக அமைகிறது. அதே வேளையில், பிள்ளைகள் தங்கள் மரபையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ளவும் கட்டிக்காக்கவும் தாய்மொழி அறிவு மிகவும் அவசியமாகிறது. இருமொழிகளைக் கற்றுக்கொள்வது பிள்ளைகளின் அறிவாற்றல் மேம்பட வழிவகுக்கிறது. இருமொழிகளைக் கற்றுக்கொள்ளும்போது, பிள்ளைகளின் கவனம் அதிகரிப்பதோடு ஒருமுகப்படுத்தும் திறனும் மேம்படுகின்றது என ஆய்வு குறிப்பிடுகிறது (பெஸ்ட், மில்லர், & நஹ்லெரி, 2011).

## தாய்மொழி கற்றல்

சிங்கப்பூரில் தமிழ்மொழியை வாழும் மொழியாகத் தொடர்ந்து நிலைபெறச் செய்வதே நம்முடைய இலக்காகும். அதனை அடைவதற்குச் சமூகத்திலும் இல்லங்களிலும் நிலவும் மொழிச்சூழலை மனத்திற்கொண்டு பிள்ளைகளின் மனங்கொள்ளும் வகையில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் அமைதல் வேண்டும்.

தமிழ்மொழியைக் கற்பதனால் பிள்ளைகள் தமிழ்ப் பண்பாட்டைப்பற்றி மேலும் அறிந்துகொள்கின்றனர். உண்ணுகின்ற உணவு, உடுத்துகின்ற உடை, கொண்டாட்டங்கள், மரபுவழிப் பாடல்கள், கதைகள் முதலியவற்றை அறிந்துகொள்கின்றனர். இதனால், தங்கள் இனத்தவரின் பாரம்பரியத்தையும் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும் பிள்ளைகள் அறிந்துகொள்ள முடிகிறது.

இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டமானது கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. எனவே, ஆசிரியர்கள் இந்த மொழித்திறன்களை வளர்க்கும் வகையில் நடவடிக்கைகளை வடிவமைத்துக் கற்பிக்க வேண்டும். இதற்குப் பின்வரும் கற்றல் குறிக்கோள்களும் முக்கிய அறிவாற்றல்களும் மொழித்திறன்களும் கற்றல் இயல்புகளும் வழிகாட்டித் துணைபுரிகின்றன.

## கற்றல் குறிக்கோள்கள்

நம்முடைய பிள்ளைகளுக்குத் தாய்மொழி கற்றலில் வலுவான தொடக்கத்தை அளித்து, வாழ்நாள் முழுவதும் தாய்மொழியைக் கற்பவர்களாக அவர்களை உருவாக்குவதே இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தின் இலக்காகும். இந்த இலக்கை எட்டும் நோக்கில், பாலர் பள்ளிக் கல்வியின் இரண்டாம் ஆண்டு (K2) நிறைவுபெறுவதற்குள் கீழ்க்காணும் மூன்று கற்றல் குறிக்கோள்களைப் பிள்ளைகள் அடைவதற்கு ஆசிரியர்கள் வழிவகைசெய்தல் வேண்டும்.

### கற்றல் குறிக்கோள் 1

**தாய்மொழியைக் கற்பதில் மகிழ்ச்சியும் ஆர்வநிலையும்**

| முக்கிய அறிவாற்றல் / திறன்கள் / இயல்புகள் | பிள்ளைகள் பின்வருவனவற்றைச் செய்யும்போது அவர்களின் கற்றலை எவ்வாறு கண்காணிக்கலாம் என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள்: |
|---|---|
| **1.1** தமிழ்மொழி நடவடிக்கைகளில் பங்கேற்க ஆர்வங்கொள்ளுதல் (எ-டு: கதை கேட்டல், பாடுதல், நடித்தல்) | • பாடல் வரிகளுக்கேற்பப் பாவனை செய்தல், விளையாட்டுகளில் ஈடுபடுதல், வாசிக்கப்படும் கதைகளையொட்டிய வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளித்தல் (எ-டு: கதைகளைப்பற்றிப் பேசுதல், வரைதல் அல்லது நடித்துக் காட்டுதல்)<br>• தமிழ்மொழி நடவடிக்கைகளின்போது கற்றல் தொடர்பாக உதவி வேண்டுதல்<br>• தமிழ்மொழி நடவடிக்கைகளின்போது வினாக்கள் எழுப்புதல்<br>• தமிழ்மொழியில் உரையாடலைத் தொடங்கவும் கலந்துகொண்டு பங்களிக்கவும் முயலுதல்<br>• தமிழ்மொழியில் கதைகளைச் சொல்லச் சொல்லியும் பாடல்களைப் பாடச் சொல்லியும் கேட்டல்<br>• கதைகளையும் பாடல்களையும் கவனமாகக் கேட்பதோடு கண்வழித் தொடர்பில் ஈடுபடுதல் அல்லது மற்றவர்களுடன் உரையாடும்போது கண்வழித் தொடர்பில் ஈடுபடுதல் |

| | |
|---|---|
| | • பாடல்களில் கவர்ந்த வரிகளை ஒப்புவித்தல் அல்லது பாடலுக்கு ஏற்றவாறு தாமாகவே பாவனை செய்தல்<br>• தமிழ்மொழியில் சொற்கள், சொற்றொடர்கள் அல்லது தொடர்களைச் சொல்லுதல்<br>• தமிழ்மொழி நடவடிக்கையின்போது ஏற்பட்ட கற்றல் அனுபவங்களைப்பற்றிப் பேசுதல் |
| **1.2** தமிழ்ப் புத்தகங்களையும் அச்சிடப்பட்ட பிற வளங்களையும் பார்க்க ஆர்வங்கொள்ளுதல் | • ஓய்வு நேரத்தில் தமிழ்மொழியிலுள்ள வாசிப்புக்குரிய வளங்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல்<br>• புத்தகங்களில் ஆர்வங்காட்டுதல் (எ-டு: புத்தகத்திலுள்ள படங்களைச் சுட்டிக்காட்டிக் கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது வினவுதல்)<br>• தமிழ்ப் புத்தகத்தில் தமக்குப் பிடித்தவற்றைத் தமது நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல்<br>• தாம் அறிந்துள்ள அல்லது சுற்றுப்புறத்தில் காணப்பெறும் தமிழ்மொழியில் அச்சிடப்பட்டவை/ பாடல்கள்/ விளையாட்டுகள் முதலியவற்றின்பால் சக வயதினர் அல்லது பெரியவர்களின் கவனத்தை ஈர்க்க முயலுதல் |

தாய்மொழியைக் கற்றுக்கொள்வதில் ஆர்வங்காட்டும் பிள்ளைகள், தம் தாய்மொழி குறித்துத் தங்களுக்குத் தெரிந்தவற்றிற்கும் தெரிந்துகொள்ள விரும்புவனவற்றிற்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்துக்கொள்வார்கள். இதற்குச் சக வயதினர், ஆசிரியர் ஆகியோரின் ஆதரவு தேவைப்படும். ஆசிரியர்கள் பிள்ளைகளின் விருப்பங்கள், தேவைகள், திறன்கள் ஆகியவற்றையும் பிள்ளைகள் பெறவேண்டிய முக்கிய அறிவாற்றல், மொழித்திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவற்றையும் கருத்திற்கொண்டு அவர்களின் வளர்ச்சிக்கும் மொழி கற்றலுக்கும் தேவையான ஆதரவை வழங்க வேண்டும். தாய்மொழி கற்றலில் பிள்ளைகள் ஆர்வத்துடன் ஈடுபடும்போதுதான், கற்றுக்கொள்ள வேண்டியவற்றில் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

## 1.1 தமிழ்மொழி நடவடிக்கைகளில் பங்கேற்க ஆர்வங்கொள்ளுதல்

தாய்மொழியைப் பயன்படுத்தக்கூடிய ஆதரவான சூழலில் தாங்கள் இருப்பதாகப் பிள்ளைகள் உணர்ந்தால்தான் தாய்மொழி கற்றல் நடவடிக்கைகளின்மீது பிள்ளைகளுக்கு ஆர்வம் ஏற்படும்; அவர்கள் அந்நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்பார்கள். தாய்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் பிள்ளைகளுள் சிலர் தாய்மொழியில் பேசுவதற்குத் தயங்குகிறார்கள் (க்ரஷன் & டெர்ரல், 1983). இருப்பினும், தொடக்கத்தில் சுட்டிக்காட்டியும் தலையசைத்தலின்வழி ஆமோதித்தும் மறுத்தும் சைகை காட்டியும் தாய்மொழி நடவடிக்கைகளில் அவர்களால் பங்குபெற முடியும். நாளடைவில் அவர்கள் ஆர்வத்தோடு தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது தாய்மொழியிலேயே பதிலளிக்க முயல்வார்கள்.

### எடுத்துக்காட்டு 1:

**நோக்கம்**

தமிழ்மொழியில் நடத்தப்படும் அசைவியக்கப் பயிற்சியில் (aerobic exercise) பிள்ளைகள் ஆர்வத்துடன் கலந்துகொள்ளுதல்

**நடவடிக்கை**

அசைவியக்கப் பயிற்சி ஒன்றைச் செய்து காட்டிப் பிள்ளைகளிடம் அதேபோலச் செய்யச் சொல்லவும். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு சொல்லையோ தொடரையோ பயன்படுத்தி விளக்கவும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

பிள்ளைகள் வெளிப்புறத்தில் இந்த நடவடிக்கையைச் செய்யும்போது, செயல்களுக்குரிய சொல்வளத்தை ஒருசேரப் பெறுகின்றனர்.

**பல்வேறு திறன்கொண்ட பிள்ளைகளுக்குரிய கற்றல் குறிப்புகள்**

நம் கை கால்களைக்கொண்டு என்ன செய்யலாம் முதலான வினாக்களைக் கேட்கும்போது மொழியைத் திறம்படப் பயன்படுத்தும் பிள்ளைகளால் விடை கூற முடியும்.

## 1.2 தமிழ்ப் புத்தகங்களையும் அச்சிடப்பட்ட பிற வளங்களையும் பார்க்க ஆர்வங்கொள்ளுதல்

பிள்ளைகள் தாய்மொழி நடவடிக்கைகளை விரும்பும்போது, தங்கள் விருப்பத்தைப் பலவழிகளிலும் வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் தாய்மொழியிலுள்ள கதைப்புத்தகங்களைப் புரட்டிப் பார்ப்பார்கள்; அதிலுள்ள கதையை அறிந்துகொள்ள விரும்புவார்கள்; வகுப்பறையிலும் வகுப்பறைக்கு அப்பாலும் தாய்மொழியில் அச்சிடப்பட்ட வளங்களைக் கூர்ந்து கவனிப்பார்கள். தங்களுக்கு அறிமுகமாகிய எழுத்துகளையும் சொற்களையும் சுட்டிக்காட்டி அவற்றைப் படிக்க முயல்வார்கள்.

### எடுத்துக்காட்டு 2:

**நோக்கம்**

பிள்ளைகள் தமிழ்மொழியில் உள்ள படப்புத்தகங்களை ஆர்வத்துடன் பார்த்தல்

**நடவடிக்கை**

பிள்ளைகளிடம் இரண்டு படப்புத்தகங்களைக் காட்டவும். முன்னட்டையைப் பார்த்துப் புத்தகம் எதைப்பற்றியது என்பதை ஊகிக்கச் சொல்லவும். முதலில் எந்தப் புத்தகத்தை அவர்களிடம் படித்துக் காட்ட வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கச் சொல்லவும். புத்தகத்தைப் படித்து முடித்ததும் அவர்களுக்குப் பிடித்த பக்கத்தைக் குறிக்கக் கட்டை விரலை உயர்த்தியோ தாழ்த்தியோ காட்டச் சொல்லவும் (thumbs-up or thumbs-down). பிள்ளைகள் சிலரை அழைத்து அந்தப் பக்கத்தில் அவர்களுக்குப் பிடித்ததை ஓரிரு சொற்களிலோ சிறிய தொடர்களிலோ கூறச் சொல்லவும்.

**பல்வேறு திறன்கொண்ட பிள்ளைகளுக்குரிய கற்றல் குறிப்புகள்**

தமிழில் பேசாத பிள்ளைகளிடம் எந்தப் பகுதி அவர்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஊக்கப்படுத்தவும். ஆங்கிலத்தில் பிள்ளைகள் பேசினால் அதைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறவும்.

## கற்றல் குறிக்கோள் 2

## தாய்மொழியில் அடிப்படை மொழித்திறன்களையும் எழுத்தறிவுத் திறன்களையும் வளர்த்தல்

| முக்கிய அறிவாற்றல்/ திறன்கள்/ இயல்புகள் | பிள்ளைகள் பின்வருவனவற்றைச் செய்யும்போது அவர்களின் கற்றலை எவ்வாறு கண்காணிக்கலாம் என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள்: |
|---|---|
| 2.1 புரிந்துணர்வுடன் கேட்டல்<br><br>2.1.1 எளிய செய்திகளையும் கட்டளைகளையும் புரிந்துகொள்ளுதல்<br><br>2.1.2 உரையாடலின் மையக்கருத்தைப் புரிந்துகொள்ளுதல் | • பெயரைச் சொல்லி அழைக்கும்போது பொருத்தமான மெய்ப்பாட்டின்வழியே பதிலளித்தல் (எ-டு: தலையசைத்தல், கையசைத்தல்)<br>• பட அட்டைகள் படிநிலைகளைக்கொண்ட கட்டளைகளைக் கேட்டுச் செயற்படுதல்<br>• பாடல்கள் பாடும்போது பொருத்தமாகப் பாவனை செய்தல்<br>• உரையாடலின்போது எளிய செய்திக்கும் மையக்கருத்துக்கும் பொருத்தமான மெய்ப்பாட்டின்வழி அல்லது எளிய சொற்களைக்கொண்டு பதிலளித்தல் (எ-டு: கண் தொடர்பு, சைகை, முகபாவங்கள் அல்லது எளிய சொற்கள்) |
| 2.2 கருத்தை வெளிப்படுத்தப் பேசுதல்<br><br>2.2.1 தமது தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துதல்<br><br>2.2.2 எளிய வினாக்களை வினவுதலும் விடையளித்தலும்<br><br>2.2.3 தமது அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுதல் | • தெரிந்த முகமன்களைக் கூறுதல் (எ-டு: “வணக்கம்”, “போய் வருகிறேன்”)<br>• தமது தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துவதற்குச் சைகைகளுடன் ஓரிரு சொற்களைப் பயன்படுத்துதல்<br>• தமது பெயரையும் வயதையும் கூறி அறிமுகப்படுத்திக்கொள்ளுதல்<br>• தாம் அறிந்துள்ள பொருள்களின் பெயர்களைக் கூறுதல் (எ-டு: வீட்டிலும் வகுப்பறையிலும் பாலர் பள்ளியிலும் உள்ள பொருள்கள்)<br>• தம்மைச் சுற்றியுள்ளவர்களைப்பற்றியும் தமக்கு நன்கு அறிமுகமானவர்களைப்பற்றியும் மேலும் அறிந்துகொள்ள வினவுதல் (எ-டு: குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், அண்டைவீட்டார்)<br>• எளிய தொடர்களைப் பயன்படுத்தி மற்றவர்களிடம் தமது அனுபவங்களைக் கூறுதல் (எ-டு: குடும்பத்தினரோடு வெளியே சென்ற அனுபவம், விருப்பமான புத்தகம், தொலைக்காட்சி நிகழ்ச்சி)<br>• தமது குடும்பத்தினர், ஆசிரியர்கள், நண்பர்கள், ஆகியோரிடம் எளிய செய்திகளைத் தெரிவித்தல்<br>• எளிய சுருக்கமான உரையாடல்களில் பங்கேற்றல்<br>• பேசும்போது பொருத்தமான தொனியையும் ஒலி அளவையும் பயன்படுத்துதல் (எ-டு: பணிவன்பாகப் பேசுதல்) |

| | |
|---|---|
| 2.3 சொற்களை அடையாளங்காணுதலும் ஆசிரியரின் வழிகாட்டுதலோடு படித்தலும் | • வகுப்பறை, பாலர் பள்ளி, பாலர் பள்ளியின் சுற்றுப்புறம் முதலிய இடங்களில் காணப்பெறும் எழுத்துகளையும் சொற்களையும் அடையாளங்கண்டுகொள்ளுதல் (எ-டு: வில்லைகளில் உள்ள சொற்கள், சொற்சுவர்கள், நூல்கள், கடைகளின் பெயர்ப்பலகைகள், சுவரொட்டிகள்) |
| 2.3.1 அறிமுகமான சொற்களை அடையாளங்காணுதல் | • தம் பெயரை அடையாளங்கண்டுகொள்ளுதல்<br>• புத்தகத்தைச் சரியான முறையில் கையாளுதல் |
| 2.3.2 அச்சிடப்பட்டவை, நூல்கள் முதலியவற்றில் காணப்பெறும் செய்திகள் குறித்த விழிப்புணர்வைப் பெற்றிருத்தல் | • கதைப்புத்தகத்தின் ஒரு பக்கத்திலுள்ள முதல் சொல்லைக் காட்டி, அங்கிருந்து படிக்கத் தொடங்க வேண்டும் என்பதை ஆசிரியருக்குச் சுட்டிக்காட்டுதல்<br>• ஆசிரியர் கதையைப் படிக்கும்போது எழுத்துகளையும் சொற்களையும் சுட்டிக்காட்டுதல் |
| 2.3.3 கதை அல்லது பாடல் பற்றிய புரிந்துணர்வை வெளிப்படுத்துதல் | • தமிழ் எழுத்துகளைப் பற்றிய சில தகவல்களை அறிந்திருத்தல் (எ-டு: தமிழில் உள்ள 12 உயிரெழுத்துகள், 18 மெய்யெழுத்துகள், 18 அகரமேறிய உயிர்மெய்யெழுத்துகள்)<br>• படித்துக் காட்டப்படும் தமிழ்க் கதைக்கு அல்லது பாடலுக்கு ஏற்ற சைகைகளுடனும் முகபாவங்களுடனும் பதிலளித்தல்<br>• கதையில் தங்களைக் கவர்ந்த கதாபாத்திரத்தைப்பற்றிப் பேசுதல் அல்லது கதையில் தங்களுக்குப் பிடித்த பகுதியைப்பற்றிப் பேசுதல் (எ-டு: அந்தக் கதாபாத்திரம் ஏன் பிடித்திருக்கிறது?)<br>• கதையின் முக்கிய நிகழ்வுகளை மறுபடியும் கூறுதல்<br>• கதையில் வரும் சில நிகழ்வுகளை வரிசைப்படுத்துதல் (எ-டு: வரைந்து காட்டுதல் அல்லது படங்களைச் சரியான வரிசையில் அடுக்குதல், நிரல்படச் சொல்லுதல்)<br>• எளிய சொற்கள் அல்லது சொற்றொடர்களின் பொருளைப்பற்றிப் பேசுவதற்குப் படங்களை வழிகாட்டு குறிப்புகளாகப் பயன்படுத்துதல் (எ-டு: புத்தகத்திலுள்ள படங்கள், பட அட்டைகள்) |

| | |
|---|---|
| 2.4 சிந்தனைகளைப் பிரதிபலிக்க அடையாளமிடுதலும் குறியீடுகளை வரைதலும் எழுத்துகளை எழுதுதலும்<br><br>2.4.1 தமிழ் எழுத்துகளையும் சொற்களையும் எழுதும் முறையைப் பற்றிய அடிப்படைப் புரிந்துணர்வுடன் பார்த்தெழுதுதல்<br><br>2.4.2 குறியீடுகளை வரைந்தோ எழுதியோ ஒரு தலைப்பைப்பற்றி விளக்கலாம் என்னும் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல் | • முறையாக அமர்ந்து கட்டுப்பாட்டுடனும் லாவகத்துடனும் தடித்த பென்சிலை அல்லது வண்ண எழுதுகோலைப் பிடித்தல்<br>• எழுத்தின் வரிவடிவத்தை முறையாக எழுத முயலுதல்<br>• மணலில் வரைதல், விரலில் வண்ணங்கள் தடவி எழுத்து வடிவங்களை உருவாக்குதல்<br>• கிறுக்கவும் எழுத்தைப் போன்று வடிவங்களை எழுதவும் தடித்த பென்சில் அல்லது வண்ண எழுதுகோலைப் பயன்படுத்துதல்<br>• சிந்தனைகளை வெளிப்படுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்துதல் (எ-டு: நிலாவைக் குறிக்க வட்டம், ‘சாண்ட்விச்’ ரொட்டியைக் குறிக்க முக்கோணம் அல்லது நீள்சதுரம் வரைதல்)<br>• பலவித எழுத்து வடிவங்களிலுள்ள கருத்துகளை அல்லது விவரங்களை நண்பர்கள் அல்லது ஆசிரியர் கேட்கும்போது, சொற்களாகவோ தொடர்களாகவோ வாய்மொழியாக விளக்கிக் கூறுதல் |

அடிப்படை மொழித்திறன்களை வளர்த்துக்கொள்ளும் பிள்ளைகளால் மற்றவர்களிடம் தன்னம்பிக்கையுடன் தொடர்புகொள்ள முடியும். பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டின் நிறைவில் பிள்ளைகளுக்கு இருக்க வேண்டிய நான்கு அடிப்படை மொழித்திறன்கள் பின்வருமாறு அமைந்துள்ளன:

## 2.1 புரிந்துணர்வுடன் கேட்டல்

பிள்ளைகளின் கேட்டல் திறனை வளர்ப்பது எதிர்காலத்தில் அவர்களின் கருத்துணர் திறனை வளர்ப்பதற்கான முதற்படி (பெர்ஃபெட்டி, லண்டி & ஒக்ஹில், 2005). உரையாடல்கள், பாடல்கள், கதைப்புத்தகங்கள் போன்றவற்றில் மொழி பயன்படும் நிலையைப் பிள்ளைகள் கேட்பதற்குப் போதிய வாய்ப்பளிக்க வேண்டும். அப்போது, அவர்கள் கூர்ந்து கேட்டுணரும் திறனை வளர்த்துக்கொள்ள முனைவார்கள். அவர்கள் தங்களைச் சுற்றியிருப்பவர்கள் பேச்சில் இடம்பெறும் உரையாடல்களைக் கேட்பதன் வாயிலாகப் புதிய சொற்களையும் தொடர்களையும் அறிந்துகொள்வார்கள்.

### 2.1.1 எளிய செய்திகளையும் கட்டளைகளையும் புரிந்துகொள்ளுதல்

தாய்மொழியில் ஆசிரியர் கூறும் எளிய செய்திகளையும் கட்டளைகளையும் பிள்ளைகள் ஓரளவு புரிந்துகொண்டு அதற்கேற்ப நடந்து தம்முடைய புரிந்துணர்வை வெளிப்படுத்த முயல்வார்கள். (எ-டு: தலையசைத்தல், கையசைத்தல், கண் தொடர்பு, சைகை, முகபாவங்கள், எளிய சொற்கள் அல்லது தொடர்கள், இன்ன பிற).

### 2.1.2 உரையாடலின் மையக்கருத்தைப் புரிந்துகொள்ளுதல்

பிள்ளைகள் வகுப்பில் ஆசிரியருக்கும் மற்றப் பிள்ளைகளுக்கும் இடையே நடைபெறும் கலந்துரையாடல்களை ஓரளவு புரிந்துகொண்டு, பொருத்தமாகப் பதிலளித்தோ தம்முடைய கருத்தை மெய்ப்பாட்டின்வழி உணர்த்தியோ அந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்க முயல்வார்கள். (எ-டு: மேற்காட்டிய தலையசைத்தல் முதலானவை).

#### எடுத்துக்காட்டு 3:

**நோக்கம்**

பிள்ளைகள் ‘சிலைபோல் இருத்தல்‘ என்னும் விளையாட்டை விளையாடுவதற்கான வழிமுறைகளைக் கேட்டு அதனைப் பின்பற்றுதல்

**நடவடிக்கை**

சிலை என்பதைப் படங்கள் அல்லது ஒளிக்காட்சி வாயிலாகக் காண்பித்து விளக்கி அறிமுகப்படுத்தவும். பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவினரும் முறையே சிலையாகப் பாகம் ஏற்பர் என்பதைக் கூறவும். ஒவ்வொரு குழுவில் இருக்கும் பிள்ளைகள் ஏதாவது ஒரு தோரணையில் இருக்க வேண்டும் என்பதையும் அப்படி எவ்வளவு நேரம் அசையாமலும் சத்தம் போடாமலும் இருக்க வேண்டும் என்பதையும் கூறவும். சிலைபோல அதிக நேரம் இருக்கும் குழுவே வெற்றிப் பெற்ற குழுவாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**



இந்த நடவடிக்கை பிள்ளைகளின் நிர்வாகச் செயற்பாட்டுத் திறன்களை வளர்க்கிறது. மேலும், தடையுணர்வுக் கட்டுப்பாட்டின்மூலம் குறிப்பிட்ட நேரத்துக்குப் பிள்ளைகள் ஆடாமல் அசையாமல் சத்தமின்றி இருக்கவும் செய்கிறது.

**பல்வேறு திறன்கொண்ட பிள்ளைகளுக்குரிய கற்றல் குறிப்புகள்**

விளையாட்டின் தொடக்கத்தில் கட்டளைகளுக்கு ஏற்ற காட்சிக்குறிப்புகளைப் பயன்படுத்தவும். பிள்ளைகள் விளையாட்டை எப்படி விளையாடுவது என்பதைப் புரிந்துகொண்ட பின்னர், காட்சிக்குறிப்புகளை நீக்கிவிடலாம்.

## 2.2 கருத்தை வெளிப்படுத்தப் பேசுதல்

பிள்ளைகளின் பேச்சை மதித்து, அவர்கள் தங்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் சொற்களில் வெளிப்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதால், அவர்களின் தன்னம்பிக்கை வளரும். கருத்துப்பரிமாற்றத்தின் வாயிலாகவும் விளையாட்டின் வாயிலாகவும் பல்வேறு சொற்களையும் தொடர்களையும் பிள்ளைகள் பயன்படுத்த அறிந்துகொள்வார்கள். எடுத்துக்காட்டு: மருத்துவராகவும் நோயாளியாகவும் பாத்திரமேற்று நடித்தல் (ஹெரிஸ், கொலின்கொஃப் & ஹிர்ஷ்-பசெக், 2010). இப்படிப்பட்ட சூழல்களில் எளிய வாக்கியங்கள் (எ-டு: “எனக்கு எழுதுகோல் வேண்டும்.”), வினா வாக்கியங்கள் (எ-டு: “அது என்ன?”) எனப் பலவகையான வாக்கியங்களில் கருத்துப்பரிமாற்றம் நிகழ்த்த அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இது பிள்ளைகளின் பேச்சுத்திறன் மேம்படுவதற்கும் வாய்மொழிக்கும் எழுத்துமொழிக்கும் உள்ள தொடர்புநிலையைப் புரிந்துகொள்வதற்குமான அடிப்படையை உருவாக்குகிறது. மேலும், புதிய எண்ணங்களை உருவாக்கிக்கொள்வதற்கும் அவற்றை மற்றவருக்குத் தெரிவிப்பதற்கும் எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு இத்திறன்கள் துணைபுரியும். எனவே, பிள்ளைகளின் பேசுதல் திறன் மேம்பாடு, எதிர்காலத்தில் அவர்களின் கருத்துணர்திறன் மேம்பாட்டிற்கும் எழுத்துத்திறன் மேம்பாட்டிற்கும் உதவும்.

### 2.2.1 தமது தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துதல்

எளிய வாக்கியங்களில் தங்களின் தேவைகளையும் (எ-டு: “எனக்குப் பென்சில் வேண்டும்.”) விருப்பங்களையும் (எ-டு: “எனக்கு ஆப்பிள் சாப்பிடப் பிடிக்கும்.”) ஆசிரியரிடமும் சக மாணவர்களிடமும் வெளிப்படுத்துமாறு பிள்ளைகளை ஊக்கப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்யும்போது பிள்ளைகள் பயனாக்கமிக்க கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவார்கள்.

### 2.2.2 எளிய வினாக்களை வினவுதலும் விடையளித்தலும்

ஆசிரியரிடமும் சக மாணவர்களிடமும் எளிய வினாக்களைக் கேட்டுத் தங்களின் புரிந்துணர்வை மேம்படுத்திக்கொள்ளப் பிள்ளைகளை ஊக்கப்படுத்த வேண்டும். அது அவர்களின் கற்றலை மேம்படுத்தும். மேலும், ஆசிரியரும் வகுப்பினரும் கேட்கும் எளிய வினாக்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாக விடையளிப்பதால் பிள்ளைகள் தங்களின் தாய்மொழி ஆற்றலை மேம்படுத்திக்கொள்வார்கள்.

### 2.2.3 தமது அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுதல்

பிள்ளைகள் தங்களின் அனுபவங்களைத் தாமாகவே ஆசிரியருடனும் சக வகுப்பினர்களுடனும் பகிர்ந்துகொள்வதால் தாம்செய்யும் வேலையைப்பற்றிப் பெருமிதம் கொள்வார்கள். மேலும், தாம்சொல்வதைப் பிறர் கூர்ந்து கேட்பதால் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் தாய்மொழியில் பேச முயல்வார்கள்.

#### எடுத்துக்காட்டு 4:

**நோக்கம்**

பிள்ளைகள் ஈடுபட்டுள்ள கைவினை நடவடிக்கை தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்

**நடவடிக்கை**

நடவடிக்கையைச் செய்துகாட்டிப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள். ஒவ்வொரு செயலுக்கும் விளக்கம் அளியுங்கள்.

- காலாவதியான பாலைத் தட்டில் ஊற்றவும்.
- சில துளி வண்ணக்கலவையை (water colour) பாலில் விடவும்.
- நுனியில் பஞ்சு இணைக்கப்பெற்ற குச்சி (cotton bud) ஒன்றைச் சோப்பு நீரில் தொட்டு, அதை வண்ணக்கலவை கலந்த பாலில் விட்டுச் சுழற்றவும்.
- காகிதம் ஒன்றைப் பாலின் மேற்பகுதியில் வைக்கவும்.
- தாளை எடுத்துக் காய வைக்கவும்.

பின்வரும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடலாம்.

- பாலுக்குப் பதிலாக நீரைப் பயன்படுத்தினால் என்னவாகும்?
- சோப்புநீரைப் பயன்படுத்தாவிட்டால் என்னவாகும்?
- வண்ணங்களைச் சுழலச் செய்யாவிட்டால் என்ன நடக்கும்?
- அதிகமான தாள்களைத் தட்டில் வைத்தால் என்னவாகும்? அதே போன்ற விளைவு ஏற்படுமா?
- ஈரத்தாள்களை ஒன்றின்மேல் ஒன்று வைத்தால் என்னவாகும்?

**உங்களுக்குத் தெரியுமா?**

பிள்ளைகளிடம் மற்றப் பிள்ளைகள் செய்த ஓவியத்தைப் பார்க்கச் சொல்லவும். தங்கள் நண்பருடைய ஓவியத்தில் பிடித்த ஏதேனும் ஒன்றைக் கூறச் சொல்லவும். கற்றல் இயல்புகளில் ஒன்றான பாராட்டும் பண்பை வளர்த்துக்கொள்ள இது நல்வாய்ப்பாக அமையும்.

**பல்வேறு திறன்கொண்ட பிள்ளைகளுக்குரிய கற்றல் குறிப்புகள்**

செயல்விளக்கத்துக்குமுன் ஒவ்வொரு பொருளையும் காட்டி அதன் பெயரைச் சொல்லவும். பிள்ளைகளிடம் உங்களைப் பின்தொடர்ந்து அப்பொருள்களின் பெயர்களைக் கூறச்சொல்லவும்.

(எ-டு: பால், தண்ணீர், வண்ணம்)

## கேட்டல், பேசுதல் திறன்களை வளர்ப்பதற்கான உத்திகள்

### போலச் செய்தல்

பிள்ளைகள் தங்களைச் சுற்றியுள்ளோர் பேசுவதைக் கேட்டு மொழியைக் கற்றுக்கொள்வதால் ஆசிரியர்கள் நல்ல முன்மாதிரிகளாகத் திகழ்வது முக்கியமாகும். ஆசிரியர்கள் கலந்துரையாடல்களின்போது உற்றுக்கேட்டும் வினாக்கள் எழுப்பியும் ஈடுபாட்டுடன் கேட்டலை எவ்வாறு மேற்கொள்வது என்பதைப் போலச் செய்து காட்டலாம்.

ஈடுபாட்டுடன் கேட்டலை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப் போலச் செய்து காட்ட ஆசிரியர்கள் பின்வருவனவற்றைச் செய்யலாம்:

- பிள்ளை பேசும்போது ஆர்வத்தோடு அவரைக் கவனித்தல்
- பிள்ளையுடன் கண்தொடர்புகொள்ளுதல்
- பிள்ளை சொல்வதைக் குறுக்கிடாமல் கூர்ந்துகேட்டல்
- பிள்ளை சொன்னதைத் திரும்பச் சொல்லியோ பொழிப்புரை வழங்கியோ புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### வெளிப்படையான கற்பித்தல்

பிள்ளைகள் சொற்களை அறிந்திருந்தால்தான் மொழியைப் புரிந்துகொள்ள முடியும். பிள்ளைகள் வெவ்வேறு சூழல்களில் அமைந்த சொற்களைக் கற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு அதற்கான தக்க அறிமுகமும் அவற்றைக் கற்றுக்கொள்ளக் கால அவகாசமும் தேவை. பிள்ளைகளின் சொல்வளத்தை மேம்படுத்த ஆசிரியர்கள் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் குவிநோக்கத்தோடு கற்பிக்க வேண்டும்.

சொல்வளப் பெருக்கத்திற்கான சொற்களைத் தேர்ந்தெடுக்கும்போது பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்:

- பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்தல்
- வெளிப்படையான கற்றலையும் உள்ளார்ந்த கற்றலையும் வழங்குதல் (எ-டு: கதையின்மூலம் ஒரு சொல்லின் பொருளையும் அதன் பயன்பாட்டையும் காட்டுதல்)
- பிள்ளைகளுக்குப் புதிய சொற்களைப் பற்றிய புரிந்துணர்வை வலுப்படுத்த அவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்த வாய்ப்பளித்தல்

### ‘சொல்—கூறு—செய்—விளையாடு’ உத்தி (ரொஸ்கொஸ், டெபர்ஸ் லென்ஹர்டு, 2009, பக்.58-59):

- சொற்களைக் கூறிப் பிள்ளைகளை மீண்டும் சொல்ல வைத்தல்
- பிள்ளைகளுக்குப் புரியும்வகையில் ஒவ்வொரு சொல்லிற்கான பொருளையும் ஏற்ற வகையில் விளக்குதல்
- செய்து காட்டியோ சைகைகள் செய்தோ சொற்களின் பொருளை விளக்குதல்
- பிள்ளைகள் புதிய சொற்களைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அவர்களை விளையாட்டு, பாத்திரமேற்று நடித்தல் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்தல்

### எடுத்துக்காட்டு:

| சொல்லைச் சொல்லுதல் | பொருளைக் கூறுதல் | செய்து காட்டுதல் | விளையாடுதல் |
|---|---|---|---|
| உரித்தல் | தோலை நீக்குதல் | ஆரஞ்சுப் பழத்தின் தோலை உரித்துக் காட்டுதல் | பிள்ளைகள் இந்தச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர்; நடித்துக் காட்டுவர். |
| பிழிதல் | பழத்தின் சாற்றைப் பிரித்து எடுத்தல் | ஆரஞ்சுப் பழத்தைப் பிழிந்து காட்டுதல் | |

## 2.3 சொற்களை அடையாளங்காணுதலும் ஆசிரியரின் வழிகாட்டுதலோடு படித்தலும்

பிள்ளைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை அறிமுகப்படுத்தி வளர்ப்பதால் தாய்மொழியில் பலவகையான கதைநூல்களையும் ஆர்வத்தைத் தூண்டும் வாசிப்பு வளங்களையும் அவர்களாகவே தேடிப்பெறுகின்ற நிலை ஏற்படும். பிள்ளைகள் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக்கொண்டால், வாழ்நாள் முழுவதும் மொழியைக் கற்றுக்கொள்ள அது வழியமைக்கும் (டன்கன், 2010). பிள்ளைகள் படப்புத்தகங்களைப் படிக்கும்போது, தாங்கள் படித்தவற்றின் பொருளை ஆசிரியர்களின் அல்லது தங்களது வகுப்பினரின் உதவியுடன் புரிந்துகொள்ள முயல்வார்கள்.

### 2.3.1 அறிமுகமான சொற்களை அடையாளங்காணுதல்

பிள்ளைகள் படப்புத்தகங்களைப் படிக்கும்போது, அவற்றில் இடம்பெற்றிருக்கும் தமிழ் எழுத்துகளையும் எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் அடையாளங்காண அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். அவ்வாறு எளிய படப்புத்தகத்திலுள்ள எழுத்துகளையும் சொற்களையும் படிக்க முனையும்போது பிள்ளைகளுக்குத் தன்னம்பிக்கை பிறக்கும். இதுவே மொழியை மேலும் கற்றுக்கொள்ள அவர்களை ஊக்குவிக்கும் (பாயர், 2001). மேலும், தமிழ்மொழியின் சில அடிப்படைக் கூறுகளைப் பற்றிய விழிப்புணர்வும் அவர்களுக்கு ஏற்படும்.

### 2.3.2 அச்சிடப்பட்டவை, நூல்கள் முதலியவற்றில் காணப்பெறும் செய்திகள் குறித்த விழிப்புணர்வைப் பெற்றிருத்தல்

அச்சு வடிவிலுள்ள அறிமுகமான தமிழ் எழுத்துகளையும் சொற்களையும் அடையாளங்காணும் திறனைப் பயன்படுத்தி வீடு, வகுப்பறை, அக்கம்பக்கம் முதலிய சுற்றுச்சூழல்களில் அடிக்கடி தாம் பார்க்கும் எழுத்துகளையும் சொற்களையும் பிள்ளைகள் படிக்க முயல்வார்கள். இதனால், தமிழ்மொழி தமது அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடைய ஒன்றே என்னும் விழிப்புணர்வும் அவர்களுக்கு ஏற்படும்.

### 2.3.3 கதை அல்லது பாடல் பற்றிய புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

பிள்ளைகள் படப்புத்தகங்களைப் படிக்கும்போதும் பாடல்களைப் பாடும்போதும் தொடக்கத்தில் அவற்றின் கூறுகளை ஆசிரியர்களின் அல்லது வகுப்பினரின் உதவியுடன் புரிந்துகொள்ள முயல்வார்கள். எளிய கதைகளையும் பாடல்களையும் தொடர்ந்து கற்றுக்கொள்ளும்போது தடுமாற்றம் குறைந்து மொழியில் அவர்களின் தன்னம்பிக்கை மேம்படும்; தடுமாற்றம் நீங்கும். நாளடைவில் அவர்கள் கதை, பாடல் ஆகியவற்றைத் தாங்களாகவே புரிந்துகொண்டு தங்களின் புரிந்துணர்வை வெளிக்காட்ட முயல்வார்கள்.

## எடுத்துக்காட்டு 5:

### நோக்கம்

பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த உணவோடு தொடர்புடைய சொற்களை அடையாளங்காணுதல்

### நடவடிக்கை

வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுப்பயணிகள் சிலர் நாம் உண்ணும் உணவைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகின்றனர் என்பதைப் பிள்ளைகளிடம் சொல்லவும். பிள்ளைகளிடம் அவர்களுக்குப் பிடித்த உணவுவகைகளுள் எவற்றைச் சுற்றுப்பயணிகளுக்கு அறிமுகப்படுத்தலாம் என்பதைச் சொல்லச் சொல்லவும். அந்த உணவுவகைகளின் பெயர்களை ஒட்டுத்தாள்களில் எழுதிக்கொள்ளவும். பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து உணவுப்பட்டியல் ஒன்றைத் தயாரிக்கச் சொல்லவும். பிள்ளைகள் ஒட்டுத்தாள்களில் உள்ள உணவுவகைகளின் பெயர்களைப் பயன்படுத்தி அந்தப் பட்டியலைத் தயாரிக்கலாம்.

பின்னர், கைப்பாவை ஒன்றைப் பயன்படுத்திப் பிள்ளைகளிடம் சிங்கப்பூர் உணவுவகைகளைப்பற்றிக் கேட்கவும். பிள்ளைகளைக் கைப்பாவையிடம் உணவுப்பட்டியலைப் படித்துக் காட்டச் சொல்லவும்.

#### உங்களுக்குத் தெரியுமா?

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பிள்ளைகள் அறிந்திராத ஓரிரு சிங்கப்பூர் உணவுவகைகளை அறிமுகப்படுத்தவும். இந்த நடவடிக்கை, பிள்ளைகள் நம் நாட்டின் பல்வேறு பண்பாடுகளையும் உணவுப்பழக்கவழக்கங்களைப் பற்றிய விழிப்புணர்வைப் பெறவும் மற்ற இனத்தவரை மதிக்கவும் உதவும்.

#### பல்வேறு திறன்கொண்ட பிள்ளைகளுக்குரிய கற்றல் குறிப்புகள்

ஒவ்வொரு பிள்ளையும் நடவடிக்கையில் ஈடுபடுவதை உறுதிசெய்யுங்கள். உணவின் பெயரைக் கொண்ட ஒட்டுத்தாள்களைக் காட்டிப் பிள்ளைகளுக்கு அறிமுகமான எழுத்துகளை அடையாளங்காண உதவவும்.

## 2.4 சிந்தனைகளைப் பிரதிபலிக்க அடையாளமிடுதல், குறியீடுகளை வரைதலும் எழுத்துகளை எழுதுதலும்

பிள்ளைகள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குக் கிறுக்குதல், அடையாளமிடுதல், வரைதல், குறியிடுதல் முதலான நடவடிக்கைகளில் விரும்பி ஈடுபடுவார்கள். எழுத்துகளை மணலில் எழுதியோ களிமண்ணில் வடிவமைத்தோ பார்ப்பார்கள். படிப்படியாகப் பிள்ளைகள் தங்களின் தசைநார் இயக்கத் திறன்களையும், கண்-கை ஒருங்கிணைப்பையும் எழுதுவதற்குரிய சரியான உடற்பாங்கையும் வளர்த்துக்கொள்வார்கள்.

### 2.4.1 தமிழ் எழுத்துகளையும் சொற்களையும் எழுதும் முறையைப் பற்றிய அடிப்படைப் புரிந்துணர்வுடன் பார்த்தெழுதுதல்

கோடுகளும் வடிவங்களும் எழுத்துகளை உருவாக்குகின்றன என்பதையும் எழுத்துகளை ஒன்றுசேர்த்தால் சொற்கள் உருவாகும் என்பதையும் பிள்ளைகள் புரிந்துகொள்வார்கள் (நியூமன், 1999). பிள்ளைகளின் தசைநார் இயக்கத்திறன்கள் நன்கு வளர்ச்சி அடையாதிருந்தால் அவர்கள் எழுத்தின் கோடுகளை முறையாக எழுதச் சிரமத்தை எதிர்நோக்குவார்கள். இருந்தாலும், அவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டுதலால் படிப்படியாக எழுதக் கற்றுக்கொள்வார்கள். எழுதுகோலை எப்படிச் சரியாகப் பிடித்து முறையாக எப்படி எழுதுவது என்பதைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் மிகுந்த கவனத்தையும் நிதானத்தையும் கையாள வேண்டியது அவசியமாகும்.

### 2.4.2 குறியீடுகளை வரைந்தோ எழுதியோ ஒரு தலைப்பைப்பற்றி விளக்கலாம் என்னும் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

பிள்ளைகள் தாங்கள் கிறுக்கியவற்றையும் வரைந்தவற்றையும் தங்கள் ஆசிரியர்களோடும் நண்பர்களோடும் பகிர்ந்துகொள்ள விரும்புவார்கள். இது அவர்களிடையே கருத்துப்பரிமாற்றத்தையும் தொடர்பிணைப்பையும் வளர்த்துக்கொள்ளத் துணைபுரியும். தங்களது எண்ணங்களைக் கிறுக்கியும் வரைந்தும் விளக்கியுரைக்க முடியும் என்னும் புரிந்துணர்வு பிள்ளைகளுக்கு ஏற்படும்.

## எடுத்துக்காட்டு 6:

### நோக்கம்

வெளிநாட்டு ஊழியர்கள் சிங்கப்பூருக்கு ஆற்றும் பங்கைப் பாராட்டும் வகையில் பிள்ளைகள் சில வாசகங்களைப் பார்த்து எழுதுதல்

### நடவடிக்கை

வெளிநாட்டு ஊழியர்கள் சிங்கப்பூருக்கு ஆற்றும் சேவைகளைக் காட்டும் புகைப்படங்களைக் காட்டவும் (எ-டு: தெருக்களைச் சுத்தப்படுத்துதல், கட்டடப்பணிகளில் ஈடுபட்டிருத்தல், உணவகங்களில் உணவு தயாரித்தல், பரிமாறுதல்). பிறருக்கு நன்றிகூறுதல் மிகவும் முக்கியம் என்பதை விளக்குவதோடு பிள்ளைகள் எவ்வாறு இந்த ஊழியர்களுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிப்பர் என்பதைக் கூறச் சொல்லவும். பிள்ளைகள் கூறியவற்றை அட்டைகளிலோ அஞ்சல் அட்டைகளிலோ எழுதிக்கொள்ளவும். அவற்றைப் பிள்ளைகளிடம் கொடுத்து அந்தக் குறிப்புகளைப் பார்த்து, வண்ண அட்டை ஒன்றில் எழுதவும் அழகாக அலங்கரிக்கவும் சொல்லுங்கள்.

#### உங்களுக்குத் தெரியுமா?

வாய்ப்பு இருக்குமாயின் பிள்ளைகள் தயாரித்த அட்டைகளை வெளிநாட்டு ஊழியர்களிடம் கொடுத்து அவர்களுடைய சேவைக்காக நன்றி கூறச் சொல்லவும். இதன் வாயிலாகப் பிள்ளைகள் பிறரிடம் அக்கறை காட்டும் பண்பை வெளிப்படுத்த அறிந்துகொள்வர்.

### பல்வேறு திறன்கொண்ட பிள்ளைகளுக்குரிய கற்றல் குறிப்புகள்

நுண்ணியக்கத்திறன் முழுமையாக வளர்ச்சி பெறாத பிள்ளைகளைச் சொற்றொடர், வாக்கியத்திற்குப் பதில் பொருத்தமான சொற்களைப் பார்த்து எழுதச் சொல்லவும். (எ-டு: நன்றி)

## படித்தல், எழுதுதல் திறன்களை வளர்ப்பதற்கான உத்திகள்

### பொறுப்பினைப் படிப்படியாக விடுவித்தல்

‘பொறுப்பினைப் படிப்படியாக விடுவித்தல்’ என்னும் வடிவமாதிரி (வென் டி பொல், வொல்மென், பெஷுவிசென், 2010) ஆசிரியர்கள் ஒரு திறனைக் கற்பிக்கப் போலச் செய்து காட்டித் தக்க ஆதரவு அளிக்கும்வண்ணம் அமைந்துள்ளது. பிள்ளைகள் கற்றுக்கொண்ட திறனை நாளடைவில் தாமாகவே பயன்படுத்திப் பார்ப்பர்.

இந்த வடிவமாதிரியைப் பிள்ளைகளின் படித்தல், எழுதுதல் திறன்களை வளர்க்கப் பயன்படுத்தலாம். சுருங்கக்கூறின், இதற்கான மூன்று படிகள் இவ்வாறு அமைந்துள்ளன: “நான் செய்கிறேன்”, “நாம் செய்வோம்”, “நீ செய்யவும்”.

| | |
|---|---|
| **படிநிலை 1**<br>“நான் செய்கிறேன்.” | பிள்ளைகள் கவனிப்பதற்காக ஆசிரியர் போலச் செய்து காட்டுவார். |
| **படிநிலை 2**<br>“நாம் செய்வோம்.” | பிள்ளைகள் ஆசிரியரின் வழிநடத்தலோடு தங்கள் திறனை வெளிப்படுத்துவர். ஆசிரியர் மீண்டும் ஒரு குறிப்பிட்ட திறனைப் போலச் செய்து காட்டும் தேவை ஏற்படலாம். |
| **படிநிலை 3**<br>“நீ செய்யவும்.” | பிள்ளைகள் அடிப்படைத் திறன்களைக் கைவரப்பெற்று, வெவ்வேறு சூழல்களிலும் சூழ்நிலைகளிலும் செயற்பட அறிந்திருப்பர். ஆசிரியர் பிள்ளைகளுக்கு நினைவுறுத்தியும் ஆலோசனைகளை வழங்கியும் அவர்களது வளர்ச்சிக்கு மேலும் ஆதரவு அளிக்கலாம். |

பிள்ளைகள் மூன்றாவது கட்டத்தை அடையும்போது, மற்றவர்களோடு கருத்துப்பரிமாற்றம் செய்வதற்குரிய தன்னம்பிக்கையைப் பெறுகின்றனர். மேலும், இந்நிலையில் பிள்ளைகளின் கற்றலுக்கான ஊக்கமும் மேம்படுகிறது.




பிள்ளை ஏற்கெனவே படித்த எழுத்துகளை அடையாளங்காணுதல்

## அடிக்கடி எழுப்பப்படும் வினாக்கள்:

**பாலர் பள்ளியில் கையெழுத்துப் பயிற்சிக்கு ஏன் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை?**

இளம் பிள்ளைகளின் தசைநார் இயக்கம் முழு வளர்ச்சி பெற்றிருக்காது. இதனால், பிள்ளைக்குக் கையெழுத்துப் பயிற்சி நடவடிக்கை சிரமமானதாகவும் சவால்மிக்கதாகவும் இருக்கும். மாறாகப் பிள்ளைகள் தமிழ் எழுத்துகளை விளையாட்டுகள் வாயிலாகவோ கற்றல் நிலையங்களிலோ எழுதிப் பழகச் செய்யலாம். இதனால், பிள்ளைகள் தமிழை ஆர்வத்துடன் கற்றுக்கொள்வார்கள்.

**பாலர் பள்ளிகளில் சொல்வதெழுதுதல் பயிற்சி ஏன் இடம்பெறவில்லை?**

சொல்வதெழுதுதல் பயிற்சியின் நோக்கம் நினைவாற்றலைச் சோதித்தலாகும். நினைவாற்றலைச் சோதிக்கும் பயிற்சிகள் பிள்ளைகளுக்குச் சுமையாக அமைந்துவிடக்கூடும். பாலர் பள்ளியில் தமிழ்மொழி கற்பித்தலின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களின் வளர்ச்சியேயாகும். இருந்தாலும், அர்த்தமுள்ள நடவடிக்கைகளின் வாயிலாகப் பிள்ளைகளை எழுத்துகளையும் சொற்களையும் எழுதச் செய்யலாம்.

**பிள்ளைகளுக்குத் தங்களின் பெயரைத் தமிழில் எழுதத் தெரிந்திருக்க வேண்டுமா?**

பாலர் பள்ளியில் பிள்ளைகள் உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் ஆகியவற்றோடு சில உயிர்மெய் எழுத்துகளை மட்டுமே எழுதக் கற்றிருப்பார்கள். இதனால், தங்கள் பெயரில் உள்ள எல்லா எழுத்துகளையும் அவர்களால் எழுத இயலாமல் போகலாம். இதன் காரணமாகப் பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டின் இறுதியிலும்கூடப் பிள்ளைகள் தங்களின் பெயரைத் தமிழில் எழுத வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லை. இருப்பினும், பெயர் என்பது ஒரு பிள்ளையின் அடையாளம். எனவே, ஆசிரியர்கள் பிள்ளையின் பெயர்களை எழுத்து வடிவில் காட்சிப்படுத்தலாம்.




பிள்ளை தாம் எழுதியவற்றை மற்றப் பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ளுதல்

## கற்றல் குறிக்கோள் 3

## இனஞ்சார்ந்த உள்ளூர்ப் பண்பாடு குறித்த விழிப்புணர்வை வளர்த்தல்

| முக்கிய அறிவாற்றல் / திறன்கள் / இயல்புகள் | பிள்ளைகள் பின்வருவனவற்றைச் செய்யும்போது அவர்களின் கற்றலை எவ்வாறு கண்காணிக்கலாம் என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள்: |
|---|---|
| 3.1 உள்ளூர்ப் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும்பற்றி விழிப்புணர்வுகொள்ளுதல் | • பண்பாட்டுக் கொண்டாட்டங்களையும் விழாக்களையும்பற்றி வினவுதல் (எ-டு: பாரம்பரிய உணவுகள் அல்லது பலகாரங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன, இன்ன பிற)<br>• மரபுவழிக் கதைகளை அல்லது அவற்றிலுள்ள கதாபாத்திரங்களைப்பற்றி எடுத்துரைத்தல், பாத்திரமேற்று நடித்துக்காட்டுதல், காட்சிகளை அல்லது கதாபாத்திரங்களை வரைதல்<br>• கதை, பாடல் அல்லது பழமொழி எடுத்துரைக்கும் பண்பாட்டுச் செய்தி, பாரம்பரியம், அறநெறிப் பண்புகள் குறித்த தமது எண்ணங்களையோ சிந்தனைகளையோ வெளிப்படுத்துதல்<br>• சிங்கப்பூர்ச் சூழலுக்கு ஏற்ற பழக்கவழக்கங்கள் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றன என்னும் விவரங்களைக் கூறுதல் (எ-டு: இனக் கொண்டாட்டங்களின்போது மேற்கொள்ளும் பழக்கவழக்கங்களும் நடவடிக்கைகளும்)<br>• பண்பாட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், கற்றல் பயணங்கள், கலைப்பொருள்கள் போன்றவற்றின்வழியே உள்ளூர் இனரீதியிலான பண்பாட்டை ஆராய்தல் |
| 3.2 குடும்பத்தினர், நண்பர்கள், சமூகத்தினர் ஆகியோருடன் கருத்துப்பரிமாற்றம் செய்தல் | • வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் பண்பாட்டுக்கு ஏற்ற முறையில் நடந்துகொள்ளுதல் (எ-டு: பிறருடன் பொருத்தமான முறையில் பேசுதல், முகமன் கூறுதல், பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துதல்)<br>• தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பின்னணி, ஆர்வங்கள்பற்றி மேலும் தெரிந்துகொள்ள வினவுதல்<br>• மற்றவர்களிடம் எளிய தொடர்களின் வாயிலாகத் தங்கள் அனுபவங்களைக் கூறுதல் (எ-டு: கொண்டாட்டங்களின்போது பாடிய பாடல் அல்லது உண்ட உணவு, குடும்ப ஒன்றுகூடல்)<br>• தங்கள் இனஞ்சார்ந்த உள்ளூர்ப் பண்பாட்டை வளர்க்கச் சமூகம் ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகளில் பங்குபெறுதல் (எ-டு: சமூக நிலையங்கள் அல்லது மன்றங்கள், தேசிய நூலக வாரியம், தேசிய மரபுடைமைக் கழகம் போன்றவை ஏற்பாடு செய்யும் விழாக் கொண்டாட்டங்கள், பொருத்தமான பண்பாட்டு நிகழ்வுகள்) |

தாய்மொழி கற்றலைப் பொறுத்தமட்டில் அதற்கும் பண்பாடு சார்ந்த பழக்கவழக்கங்களுக்கும் மரபுகளுக்கும் நெருக்கமான தொடர்புண்டு. மரபுக் கதைகளைக் கற்றுக்கொள்ளவும் பண்பாடு சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்குபெறவும் பிள்ளைகளுக்கு வாய்ப்பளிக்கப்படும்போது குறிப்பிட்ட அறநெறிகளை அவர்கள் அறிந்துகொள்வார்கள். மேலும், பண்பாடு சார்ந்த பல்வேறு கூறுகளையும் அறிந்துகொள்வார்கள்.

பிள்ளைகளுக்கு உள்ளூர்ப் பண்பாடு (**Local Culture**), இனஞ்சார்ந்த பண்பாடு (**Ethnic Culture**), இனஞ்சார்ந்த உள்ளூர்ப் பண்பாடு (**Local Ethnic Culture**) ஆகியவற்றைப்பற்றிக் கற்றுக்கொடுக்க வேண்டும். சிங்கப்பூர்ச் சூழலுக்குப் பொருத்தமான விழாக்களைப்பற்றியும் அவற்றை நாம் எவ்வாறு கொண்டாடுகிறோம் என்பதைப்பற்றியும் அவர்களுக்கு விளக்கலாம். பண்பாடு சார்ந்த கதைகளிலும் நடைமுறைகளிலும் எடுத்துரைக்கப்படும் அறநெறிப் பண்புகள் பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையவை என்பதைப் பிள்ளைகளுக்குப் புரியவைக்க வேண்டும். அவற்றை மீண்டும் மீண்டும் சொல்லவும் அவற்றைப்பற்றிப் பேசவும் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பார்க்கவும் பிள்ளைகளுக்கு வாய்ப்பளிப்பது இதற்குத் துணைபுரியும்.

**எடுத்துக்காட்டு:**

இரவுச்சந்தை ('பசார் மாலாம்'), கிறிஸ்துமஸ் ஒளியூட்டு நிகழ்ச்சி, சீனப்புத்தாண்டு ஒளியூட்டு நிகழ்ச்சி, சிங்கே ஊர்வலம், லோ ஹே ('Lo Hei'), நோன்புப் பெருநாள் ஒளியூட்டு நிகழ்ச்சி, நோன்புப் பெருநாள் சந்தை, தீபாவளி ஒளியூட்டு நிகழ்ச்சி, தீபாவளிச் சந்தை, பொங்கல் சந்தை, பொங்கல் ஒளியூட்டு நிகழ்ச்சி.

## 3.1 உள்ளூர்ப் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும்பற்றி விழிப்புணர்வுகொள்ளுதல்

ஒருவர் தம் இனத்தவரின் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் அறிந்திருப்பது அவர்தம் அடையாள உணர்வின் ஆக்கபூர்வ வளர்ச்சிக்கு முதற்படியாகும். பிள்ளைகளுக்கு இளம் வயதில் தங்கள் பண்பாட்டு அடையாளம் குறித்தும் இனம் குறித்தும் அனுபவ ரீதியிலான விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கும் (வெண்டன்புரோக், 2000). இளம் வயதுமுதல் பிள்ளைகள் தங்கள் இனத்தின் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் அறிந்திருந்தால், அவர்களால் தங்கள் தனித்தன்மையையும் சமூகத்துடனான உறவையும் புரிந்துகொள்ள

முடியும். வலுவான அடையாள உணர்வைப் பெற்றிருக்கும் பிள்ளை மீளுந்தன்மையுடன் வளர்பருவத்தின் சவால்களை எதிர்கொள்வார் (புரூக்கர் & ஊட்ஹெட், 2008). பிள்ளைகள் நடைமுறை சார்ந்த பொருத்தமான சூழல்களில் இத்தகைய பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் ஈடுபாட்டுடன் மேற்கொள்ள வாய்ப்புகள் அளிக்க வேண்டும்.

தாய்மொழி கற்றலின்போது இளம்பருவப் பிள்ளைகள் பண்பாடு, மரபு, கதைகள் ஆகியவற்றோடு தம் நாட்டு வரலாற்றையும் கற்றுக்கொள்வார்கள். இவற்றைத் தாம் கொண்டாடும் விழாக்கள், பழக்கவழக்கங்கள், இலக்கியக் கதைகள், நாட்டுப்புறக் கதைகள், பிற கதைகள் மூலமாக அறிந்துகொள்வார்கள். மேலும், சிங்கப்பூரின் பல்லினப் பண்பாடு, பல்லின மரபுகள், பல்லினக் கதைகள் ஆகியவற்றைப் பிற இனத்தவர் கொண்டாடும் விழாக்கள், பிற இனத்தவரின் பழக்கவழக்கங்கள், பிற இனத்தவரின் இலக்கிய, நாட்டுப்புறக் கதைகள்மூலம் அறிந்துகொள்வார்கள். பிள்ளைகள் இவற்றைப் புரிந்துகொண்டு போற்றுவதன் வாயிலாகத் தாம் யார் என்பதையும் தம்மைச் சுற்றியுள்ளவர்கள் யார் என்பதையும் அறிந்துகொள்வார்கள். இவற்றின்வழியே தம்முடைய தனித்தன்மையை வளர்த்துக்கொள்வார்கள். இது தாய்மொழியோடு தொடர்புடைய பண்பாடு, விழுமியங்கள், மரபுகள் முதலியவற்றைத் தொடர்ந்து போற்றிக் காப்பதற்கும் அவசியமாகும்.

## 3.2 குடும்பத்தினர், நண்பர்கள், சமூகத்தினர் ஆகியோருடன் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

தாய்மொழி கற்றலில் பிள்ளைகள் பெரும்பாலும் தங்களின் ஆசிரியர்களை மட்டுமன்றிக் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சமூகத்திலுள்ள நம்பிக்கைக்குரிய தனிமனிதர்கள் ஆகியோரையும் வழிகாட்டிகளாகக்கொள்வர் (ரொகொஃப், 1990). மொழி கற்றல் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு அப்பாலும் எந்நேரத்திலும் நிகழும் (ஹைலாண்ட், 2004). அதனைப்போலப் பிள்ளைகள் தங்கள் நண்பர்கள், குடும்பத்தினர், சமூகத்தினர் ஆகியோரிடமிருந்தும் தம் மரபையும் பல்லினப் பண்பாட்டையும் கூடுதலாகக் கற்றுக்கொள்ள முடியும். குறிப்பாகப் பழக்கவழக்கங்கள், மரபுகள் ஆகியவை சார்ந்த நடவடிக்கைகளில் பிள்ளைகள் அவர்களோடு ஈடுபாட்டுடன் பங்குபெறும்போது தங்கள் அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்வார்கள். இந்நடவடிக்கைகள் பிள்ளைகள் தாங்கள் கற்றுக்கொண்டவற்றை மேலும் வலுப்படுத்திக்கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய கருத்துப்பரிமாற்றங்களின்மூலம் தாய்மொழி கற்றலில் பிள்ளைகளை முழுமையாக ஈடுபடுத்த முடியும். இவ்வாறு மொழியைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும்போது பிள்ளைகள் தம் தாய்மொழியைத் தாம் அன்றாடம் பயன்படுத்தும் மொழியாக உணரத் தொடங்குவார்கள்.

## எடுத்துக்காட்டு 7:

### நோக்கம்

பிள்ளைகள் தங்கள் தாத்தா, பாட்டி, முன்னோர் ஆகியோர் விழா அல்லது பண்டிகை ஒன்றை அவர்களுடைய இளம்பருவத்தில் எவ்வாறு கொண்டாடினர் என்பதை அறிந்துகொள்ளுதல்

### நடவடிக்கை

விழாக்கள், பண்டிகைகள்பற்றிப் பிள்ளைகள் அறிந்துகொண்டபின், அவர்களுடைய தாத்தா, பாட்டி அல்லது உறவினர் ஒருவரிடம் இன்றைய காலக்கட்டத்திற்கும் அன்றைய காலக்கட்டத்திற்கும் பண்டிகைகள் கொண்டாடும் விதத்தில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கேட்டறியச் சொல்லவும். எத்தகைய வினாக்களைக் கேட்டுத் தங்கள் தாத்தா, பாட்டியிடம் அவர்களது இளம்பருவத்தில் பண்டிகைகள் கொண்டாடப்பட்ட விதத்தை அறிந்துகொள்ள முடியும் என்பதையும் கூறச் சொல்லவும்.

### பல்வேறு திறன்கொண்ட பிள்ளைகளுக்குரிய கற்றல் குறிப்புகள்

தாத்தா பாட்டியிடம் கேட்பதற்காக வகுப்பில் கலந்துரையாடிய வினாக்களை ஒலிப்பதிவு செய்யவும். அந்த ஒலிப்பதிவைப் பெற்றோர்களுக்கு அனுப்பி வைக்கவும். அவற்றைத் தாத்தா பாட்டியிடம் கேட்கப் பிள்ளைகளை ஊக்கப்படுத்துமாறு பெற்றோருக்குக் குறிப்பு ஒன்றையும் எழுதி அனுப்பவும்.

பொருளடக்கப் பக்கத்திற்குச் செல்லவும்

# இயல் 3

## தாய்மொழி கற்றல்
## கற்பித்தல்

# தாய்மொழி கற்றல் கற்பித்தல்

பயன்முனைப்புமிக்க கற்பித்தல் முறைகள் பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும். பிள்ளைகளின் விருப்பங்களுக்கும் கற்றல் தேவைகளுக்கும் திறன்களுக்கும் ஏற்பக் கற்பித்தல் முறைகள் அமைய வேண்டும். அப்போதுதான், பிள்ளைகள் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்; அவர்களின் கற்றலும் அர்த்தமுள்ளதாகும். மேலும், அவர்களின் அறிவாற்றலும் விரிவடையும்.

## பிள்ளைகளின் பின்புலத்தை அறிந்துகொள்ளுதல்

பாட நடவடிக்கைகளைத் திட்டமிடும்போது ஆசிரியர்கள் வகுப்பிலுள்ள பிள்ளைகளின் முன்னறிவு, அனுபவங்கள், விருப்பங்கள், திறன்கள், கற்றல் தேவைகள் ஆகியவை குறித்துச் சிந்தித்தல் அவசியமாகும். இந்தச் சிந்தனைகள் பிள்ளைகளுக்குப் பொருத்தமானதும் பயன்மிக்கதுமான பாட நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடத்தத் துணைபுரியும். பிள்ளைகளின் குடும்பப் பின்னணி, மொழியாற்றல், வளர்ச்சிநிலை, விருப்பு வெறுப்புகள், கற்றல் தெரிவுகள் ஆகிய தகவல்களைக் குடும்ப உறுப்பினர்களிடம் கேட்டறிதல் அவசியமாகும்.

## கற்றல் கற்பித்தலுக்குரிய ஒருங்கிணைந்த அணுகுமுறை

பிள்ளைகள் தாங்கள் பெறும் அனுபவங்களின்வழியே கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தாங்கள் கற்றுக்கொள்வதைத் தனித்தனிக் கூறுகளாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. எனவே, கற்றல் நடவடிக்கைகள் முழுமையான, அர்த்தமுள்ள சூழ்நிலைகளில் திட்டமிடப்படுதல் வேண்டும்.

கற்றல் கற்பித்தலுக்கான இத்தகைய ஒருங்கிணைந்த அணுகுமுறை, பிள்ளைகள் தங்களின் அறிவாற்றலும் திறன்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதைப் புரிந்துகொள்ள உதவும். அந்த நடவடிக்கைகளின்வழியே பெறும் அனுபவங்களைப் பிள்ளைகள் பல்வேறு சூழல்களுக்குத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளவும் இயலும்.

பிள்ளைகள் அர்த்தமுள்ள தொடர்புகளை உருவாக்கிக்கொள்வதற்கு ஆசிரியர்கள் பின்வரும் வழிகளில் கற்றல் அனுபவங்களை ஒருங்கிணைத்து வழங்கலாம்.

**பல்வேறு அனுபவங்களை ஒருங்கிணைத்தல்**

பல்வேறு கற்றல் பகுதிகள், வெவ்வேறு வயதினரின் (வெவ்வேறு வகுப்புகள், நிலைகள்) கற்றல் அனுபவங்கள்

புதிய கற்றல் அனுபவங்கள், ஏற்கெனவே பெற்ற அனுபவங்கள்

விருப்பம், அன்றாட அனுபவம், புதிய கற்றல் அனுபவம்

பல்வேறு சூழல்கள் (வகுப்பறை - வெளிப்புறம், வீடு - பள்ளி, ஆங்கில வகுப்பு - தாய்மொழி வகுப்பு)

## அர்த்தமுள்ள விளையாட்டின் வாயிலாகப் பிள்ளைகளைக் கற்றலில் ஈடுபடுத்துதல்

பிள்ளைகள் தங்களைப்பற்றியும் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப்பற்றியும் கற்றுக்கொள்ளத் தூண்டுவதற்கு விளையாட்டு இயல்பான வழிமுறையாகும். அது இன்றியமையாத நடவடிக்கையும் ஆகும். பிள்ளைகள் வெவ்வேறு வகையான விளையாட்டுகளில் ஈடுபடும்போது (எ-டு: கற்பனை விளையாட்டு, தனிநிலை விளையாட்டு, கூடி விளையாடும் விளையாட்டு, ஓடியாடும் விளையாட்டு) அவர்களின் சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், அறிவாற்றல், இயக்கத்திறன்கள் உள்ளிட்ட அனைத்துத் திறன்களும் மேம்படுகின்றன. கூடிக்கற்றல், சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், முடிவெடுத்தல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை விளையாட்டு வழங்குகிறது. பிள்ளைகள் விளையாடும்போது விளைவுகளை எதிர்கொள்ளவும், தவறுகளைச் சரிசெய்யவும், தோல்விகளைச் சமாளிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள். விளையாட்டுவழிக் கற்றல் என்பது பாலர் பள்ளிக் கல்விக்கு இன்றியமையாதது. அது கற்றலில் மகிழ்ச்சியைக் கூட்டவல்லது. அதுவே பிள்ளைகளின் கற்பனையையும் படைப்பாற்றலையும் மேம்படுத்துகிறது.

## படம் 2: அர்த்தமுள்ள விளையாட்டின் தொடர்பம்

| பிள்ளைகள் தாமே முன்னெடுக்கும் விளையாட்டு | பிள்ளையும் ஆசிரியரும் இணைந்து முன்னெடுக்கும் விளையாட்டு | ஆசிரியர் முன்னெடுக்கும் விளையாட்டு |
|---|---|---|
| • **பிள்ளைகளின் பங்கு:** தங்களது விளையாட்டைத் தாங்களே இயக்குதல்<br>• **ஆசிரியரின் பங்கு:** நேரம், இடம், வளங்கள் முதலியவற்றை அமைத்துத் தருதல்; விளையாடும் பிள்ளைகளை உற்றுநோக்குதல் | • **பிள்ளையும் ஆசிரியரும் இணைந்து விளையாட்டை இயக்குதல்** (எ-டு: விளையாட்டைப் பிள்ளை தொடங்கலாம், ஆசிரியர் தூண்டுதல் வினாக்களின்மூலம் விளையாட்டைத் தொடரலாம்.)<br>• **ஆசிரியரின் பங்கு:** பிள்ளைகளை உற்றுநோக்குதல் | • **ஆசிரியரின் பங்கு:** பிள்ளைகளின் அறிவு, திறன்கள், இயல்புகள் ஆகியவற்றை வலுப்படுத்த வழிவகுக்கும் மகிழ்வூட்டும் விளையாட்டுகளைத் திட்டமிட்டு வழிநடத்துதல்<br>• **பிள்ளைகளின் பங்கு:** தங்களுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகளில் அல்லது விளையாட்டுகளில் பங்கேற்று மகிழ்தல் |

## அர்த்தமுள்ள விளையாட்டை வழிநடத்துதல்

பிள்ளைகளின் விருப்பங்களுக்கு மதிப்பளித்து, நெகிழ்வுத்தன்மையோடு அவர்களின் விருப்பங்களையும் எண்ணங்களையும் கற்றல் செயற்பாடுகளில் இணைத்து, அவர்களது சுதந்திரத்திற்கும் விருப்பத்தெரிவுக்கும் ஆதரவளிப்பது அவசியமாகும்.

### *பிள்ளைகள் தாமே முன்னெடுக்கும் விளையாட்டு*

பிள்ளைகளால் முன்னெடுக்கப்படும் விளையாட்டின்போது பிள்ளைகள் ஆராய்வதற்கும் விளையாடுவதற்கும் நேரம், இடம், வளங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு ஆசிரியர்கள் உதவுவார்கள். இவ்விளையாட்டுகளின்வழியே பிள்ளைகள் அறிவார்வத் தூண்டுதலோடு கற்பார்கள். இவ்விளையாட்டுகளின்போது ஆசிரியர்கள் பிள்ளைகளின் கற்றலுக்கு ஆதரவு வழங்குவதோடு அவர்களின் விருப்பங்களை மதித்து அவற்றிற்கு ஏற்றவாறு செயற்படுவார்கள்; பிள்ளைகள் சுயமாகச் செயற்படுவதற்கு ஏற்றவாறு வசதிசெய்து தருவார்கள். இத்தருணங்களில் ஆசிரியர்கள் பார்வையாளர்களாக இருந்து, பிள்ளைகள் விளையாடும்போது அவர்களின் பேச்சு, நடத்தை, பண்புநலன் வளர்ச்சி போன்றவற்றைக் கவனித்துக் குறிப்பெடுத்துக்கொள்ளலாம். மேலும், அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதையும் கண்டறியலாம்.

### *பிள்ளையும் ஆசிரியரும் இணைந்து முன்னெடுக்கும் விளையாட்டு*

பிள்ளையும் ஆசிரியரும் இணைந்து ஈடுபடும் விளையாட்டின்போது பிள்ளைகள் விளையாட்டைத் தொடங்க ஆசிரியர் ஊக்கப்படுத்துவதோடு விளையாட்டைத் தொடர்வதற்குத் தூண்டுதல் அளித்தும் வழிகாட்டுவார். பிள்ளைகள் விளையாடும்போது பொருத்தமான வளங்களை வழங்குவார். ஆசிரியரும் சில சமயங்களில் விளையாட்டை முன்னெடுப்பவராக இருப்பார். அப்போது பிள்ளைகளின் யோசனைகளையும் அவர் செவிமடுத்து விளையாட்டில் இணைத்துக்கொள்வார்.

### *ஆசிரியர் முன்னெடுக்கும் விளையாட்டு*

பிள்ளைகள் குறிப்பிட்ட அறிவாற்றலையும் திறன்களையும் கற்றல் இயல்புகளையும் பெறுவதற்காக ஆசிரியர்கள் விளையாட்டுகளைத் திட்டமிட்டு வழிநடத்துவார்கள்.

**அர்த்தமுள்ள விளையாட்டை வழிநடத்துவதில் ஆசிரியர்களுடைய பொறுப்புகள் பின்வருமாறு அமையும்.**

**ஆசிரியர்களுடைய பொறுப்பு**

**திட்டமிடுபவர்**
கற்றல் நோக்கத்தைக் கவனமாகச் சிந்தித்துக் கற்றல் குறிக்கோளை அடைவதற்கு மிகவும் பொருத்தமான, அர்த்தமுள்ள விளையாட்டு அனுபவத்தைத் தீர்மானித்தல்

**இணை விளையாட்டாளர்**
பிள்ளைகளின் பங்கேற்பை அதிகப்படுத்தவும் அவர்களின் கற்றலையும் புரிந்துணர்வையும் விரிவுபடுத்தவும் விளையாட்டில் பிள்ளையுடன் பங்கேற்றல்

**திறனாய்வாளர்**
பிள்ளைகளை உற்றுநோக்கி அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் அடையாளங்காணுதல்

**எடுத்துரைப்பவர்**
விளையாட்டின் முக்கியத்துவத்தையும் பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடுத்துவதற்கான பயன்மிகு உத்திகளையும் பங்கேற்பாளர்களுக்கு எடுத்துரைத்தல்

# தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றத்தின் வாயிலாக நடைமுறைக்கு ஏற்ற கற்றலை வழிநடத்துதல்

நடைமுறைக்கு ஏற்றவாறு பொருத்தமான, அர்த்தமுள்ள சூழ்நிலைகளில் மக்கள், பொருள்கள், சூழல்கள் ஆகியவற்றுடன் பிள்ளைகள் தொடர்புகொள்வதற்குப் போதுமான வாய்ப்புகள் வழங்கப்படும்போது அவர்கள் சிறப்பாகக் கற்றுக்கொள்வார்கள்.

தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம் என்பது ஆசிரியரும் பிள்ளைகளும் தலைப்பை ஆராயும்போதும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்போதும் ஒன்றாகக் கதையைப் படிக்கும்போதும் நிகழக்கூடிய நீடித்த உரையாடல்களைக் குறிக்கிறது. ஆசிரியர் வினாக்களைக் கேட்பதிலும் பிள்ளைகளுடன் உரையாடல்களிலும் கலந்துரையாடல்களிலும் ஈடுபடத் தூண்டுதல், துருவுதல் வினாக்களைப் பயன்படுத்துவதிலும் திறம்பெற்றவராக இருத்தல் வேண்டும்.

### *பராமரித்துப் பேணி வளர்க்கும் ஆதரவான சூழலை வழங்குதல்*

பிள்ளைகளின் உணர்வு, வளர்ச்சி, கற்றல் தேவைகள், விருப்பங்கள், உள்ளார்ந்த ஊக்கங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டு ஆசிரியர் தக்கவாறு பதிலளிக்க வேண்டும். இத்தகைய ஆதரவான சூழலில் பிள்ளைகள் கற்றலில் துடிப்புடன் பங்கேற்பார்கள்.

### *பல்வேறு உத்திகள், பொருள்கள், பன்முனைப்பாங்குகள் (multimodalities) ஆகியவற்றைப் பயன்படுத்துதல்*

பிள்ளைகளை நடைமுறைக்கேற்ற ஆழ்ந்த கற்றலில் ஈடுபடுத்தவும் நுண்சிந்தனைத் திறன், மொழிவளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தவும் ஆசிரியர் பல்வேறு உத்திகளையும் பொருள்களையும் பன்முனைப்பாங்கையும் பயன்படுத்த வேண்டும். (எ-டு: வினவுதல், கதை கேட்டல், பாத்திரமேற்று நடித்தல், பொருள்களைத் தொட்டுணர்ந்து கற்றல்)

### *பயன்முனைப்புமிக்க வினாக்களைக் கேட்டல்*

பயன்முனைப்புமிக்க வினாக்களைக் கேட்பதால் ஆசிரியரும் பிள்ளைகளும் மாறிமாறிப் பேசுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். திட்டமிட்ட வினாக்களைக் கேட்பதால் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டி அதனைத் தக்கவைக்கலாம். சுயவிடை வினாக்களைக் கேட்பது பிள்ளைகளின் சிந்தனையைத் தூண்டுவதற்கும் நீட்டிப்பதற்கும் உதவுவதோடு பிரச்சினைகளைத் தீர்க்க அவர்களை ஊக்குவிக்கும். எளிமையானதும், குறுகியதும், நேரடியானதுமான பதில்களைக்கொண்ட வினாக்கள் (closed-ended) பிள்ளைகள் தகவல்களை நினைவுகூர்ந்து அவர்களின் கவனத்தை ஒருமுகப்படுத்த உதவும். வினாக்கள் கேட்கப்படும்போது பிள்ளைகள் சிந்தித்துப் பதிலுரைப்பதற்குப் போதுமான நேரம் கொடுப்பது முக்கியம். ஆய்ந்தறிதல் திறனுக்கும் அறிவாற்றல் வளர்ச்சிக்கும் ஆதரவளிக்க ஆசிரியர்கள் கேட்கக்கூடிய வினாக்களின் எடுத்துக்காட்டுகளையொட்டிய கூடுதல் தகவல்கள் Nurturing Early Learners: A Curriculum Framework for Preschool Education in Singapore என்னும் கையேட்டில் பக்கம் 107-109-இல் உள்ளன.


### *வினாக்களுக்குப் பதிலளிக்கப் பிள்ளைகளுக்குப் போதுமான நேரம் வழங்குதல்*

ஆசிரியர்கள் இளம் பிள்ளைகளுடன் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடும்போது ஆசிரியர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடையளிக்க இளம் பிள்ளைகளுக்குப் போதுமான நேரம் வழங்க வேண்டும். அதே போல, பிள்ளைகள் கேட்கும் வினாக்களுக்கு ஆசிரியர் நிதானமாகவும் தெளிவாகவும் விளக்கமளிக்க வேண்டும். இளம் பிள்ளைகள் சிந்திப்பதற்கும் தங்களது எண்ணங்களைத் தொகுத்து வாய்மொழியாகக் கூறுவதற்கும் போதுமான கால அவகாசம் வழங்குவது முக்கியம். இது இளம் பிள்ளைகள் தங்கள் பதில்களை விரிவாகக் கூறுவதற்கு ஊக்கம் அளிப்பதோடு அவர்களது மொழித்திறன்களையும் வளர்க்கும்.

### *உரையாடல்வழிப் படித்தல் (Dialogic Reading)*

வகுப்பில் தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம் நிகழும்வண்ணம் கதைப்புத்தகங்களைப் படிக்கும்போது பொருத்தமான இடங்களில் நிறுத்தி வினாக்கள் கேட்க வேண்டும். இதற்கு உரையாடல்வழிப் படித்தல் என்னும் உத்திமுறை பெரிதும் உதவுகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள CROWD-இன் அடிப்படையில் அமைந்த தூண்டுதல் வினாக்களைப் பயன்படுத்தி PEER-இல் குறிப்பிட்டுள்ள கற்பித்தல் செயற்பாடுகளைக் கவனத்திற்கொள்ள வேண்டும். இதற்குக் கதைப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள படங்களைப் பயன்படுத்தி, அவற்றைச் சுட்டிக்காட்டி வினாக்கள் கேட்டுக் கலந்துரையாடுதல் வேண்டும்.

## படம் 3: உரையாடல்வழிப் படித்தல்




## எடுத்துக்காட்டு:

| PEER | CROWD உத்தியைப் பயன்படுத்தித் தூண்டுதல் | CROWD |
|---|---|---|
| **P - Prompt** (தூண்டுதல்) | **ஆசிரியர்:** இன்று கயலின் ___________. | **C - Completion** (நிறைவுசெய்தல்) |
| | **பிள்ளைகள்:** பிறந்தநாள். | |
| | **ஆசிரியர்:** ஆம். இன்று கயலின் பிறந்தநாள். | |
| **E - Evaluate** (மதிப்பிடுதல்) | **ஆசிரியர்:** அப்பா கயலிடம் தாம் எங்குப் போவதாகக் கூறினார்? | **R - Recall** (நினைவுகூர்தல்) |
| **E - Expand** (விரிவாக்குதல்) | **ஆசிரியர்:** கயலுக்கு யாரும் பிறந்தநாள் வாழ்த்துச் சொல்லாததால் அவளின் மனநிலை எப்படி இருந்தது? | **O - Open-ended** (சுயவிடை வினா எழுப்புதல்) |
| **R - Repeat** (திரும்பச் சொல்லுதல்) | **ஆசிரியர்:** ஏன்? | **W - Wh** (வினவுதல்) |
| | **ஆசிரியர்:** உங்கள் பிறந்தநாளன்று யாரும் வாழ்த்துச் சொல்லவில்லை என்றால் உங்களுடைய மனநிலை எப்படி இருக்கும்? | **D - Distancing** (தொடர்புபடுத்துதல்) |
| | **ஆசிரியர்:** ஏன்? | |

**எடுத்துக்காட்டு, 'இன்பமான பிறந்தநாள்' என்னும் பெரிய புத்தகக்கதையின் அடிப்படையில் அமைந்துள்ளது.*

## கூடிக்கற்றல் அமைப்புகள்

பிள்ளைகள் பல்வேறு கற்றல் பணிகளை மேற்கொள்ளக் குழுக்களாகவோ இணையாகவோ செயற்பட உதவுவதே கூடிக்கற்றல் அமைப்பாகும். பிள்ளைகள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வதற்கும் பல்வேறு சூழல்களில் பொருத்தமாகச் செயற்படுவதற்கும் கூடிக்கற்றல் அமைப்புகள் உதவுகின்றன. மேலும், கவனத்துடன் கேட்டல், புரிந்துகொள்ளுதல், பதிலுரை வழங்குதல், ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபடுதல், சிந்தனைத் திறன்களை வளர்த்தல் ஆகியவை பிள்ளைகள் பெறக்கூடிய நன்மைகளாகும். இவற்றின்வழி மற்றவர்களோடு இணக்கமாகப் பழகும் மனப்போக்கைப் பிள்ளைகள் வளர்த்துக்கொள்வதுடன் தலைமைத்துவத் திறனையும் பெறுகிறார்கள்.

<table>
<tr><th colspan="2">பிள்ளைகள் தாமாகச் சிந்திப்பதற்கும் தன்னம்பிக்கையோடு பேசுவதற்கும் கருத்துப்பரிமாற்றம் செய்வதற்கும் உதவும் கூடிக்கற்றல் அமைப்புகள்</th></tr>
<tr><td>சிந்தி-இணை-பகிர்<ul><li>பிள்ளைகளிடம் வினா கேட்க வேண்டும்.</li><li>பிள்ளைகள் ஒவ்வொருவரும் அதனையொட்டிச் சிந்தித்துத் தங்களின் கருத்துகளைத் தங்கள் இணையாளருடன் பகிர்ந்துகொள்வார்கள்.</li><li>இணையாளருள் ஒருவர் தமது கருத்துகளைத் தொகுத்து வகுப்பிலுள்ள மற்றப் பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்வார்.</li></ul></td><td>வரிசை வட்டக் கருத்துப்பரிமாற்றம்<ul><li>பிள்ளைகளை 3 முதல் 5 பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.</li><li>ஆசிரியர் ஒரு தலைப்பை அல்லது கருத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.</li><li>கொடுக்கப்பட்ட தலைப்பைப்பற்றி முதல் பிள்ளை தம் கருத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.</li><li>அவரைத் தொடர்ந்து குழுவிலுள்ள பிள்ளைகள் ஒவ்வொருவரும் தம் கருத்தினைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.</li></ul></td></tr>
<tr><td>எண்களைக் கூறி அழைத்தல்<ul><li>பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு பிள்ளைக்கும் ஓர் எண் கொடுக்க வேண்டும்.</li><li>ஆசிரியர் வினா எழுப்பியவுடன் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தாமாகச் சிந்திக்க வேண்டும்.</li><li>பிறகு, குழுவினரோடு ஒன்றுசேர்ந்து விடையைச் சரிபார்க்க வேண்டும்.</li><li>விடை தெரிந்தவர்கள், விடை தெரியாதவர்களுக்கு எடுத்துரைப்பார்கள்.</li><li>இதற்கெனக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்ததும் ஆசிரியர் ஏதாவது ஓர் எண்ணைக் குறிப்பிடுவார்.</li><li>அந்த எண்ணுக்குரிய பிள்ளை விடையளிப்பார்.</li></ul></td><td>சேர் – அசையாமல் நில் – இணை<ul><li>பொருத்தமான இசையை ஒலிபரப்ப வேண்டும். இசை தொடங்கியதும் பிள்ளைகள் வகுப்பறையைச் சுற்றி நடக்க வேண்டும்.</li><li>இசையை நிறுத்தியதும் பிள்ளைகளை அப்படியே அசையாமல் நிற்கச் சொல்ல வேண்டும்.</li><li>ஆசிரியர் “இணை” என்று சொன்னதும் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தனக்கு மிக அருகில் இருப்பவரோடு இணைந்து நிற்கச் சொல்ல வேண்டும்.</li><li>பிள்ளைகள் ஆசிரியர் கொடுத்த தலைப்பைப்பற்றி அல்லது வினாவைப்பற்றிச் சிந்திப்பதற்கு நேரக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும்.</li><li>நேரக் கட்டுப்பாடு முடிந்ததும் பிள்ளைகள் தங்கள் கருத்துகளை இணையாளரிடம் கூற வேண்டும்.</li></ul></td></tr>
</table>

# பல்வேறு நிலையில் கற்போருக்கு ஆதரவளித்தல்

இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தில் பிள்ளையே மையமாக விளங்குகிறார். பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனித்தன்மை கொண்டவர்; தனித்துவமான இயல்புகளை உடையவர் என்பதை ஆசிரியர்கள் கருத்திற்கொள்ள வேண்டும். அவர்களை ஆசிரியர்கள் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். மேலும், பிள்ளைகள் அனைவரையும் மரியாதையுடனும் சமமாகவும் நடத்த வேண்டும்.

## வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறை

பிள்ளைகளின் பின்புலம், கற்றல் தேவைகள், தயார்நிலை ஆகியவை வேறுபடுகின்றன. அவற்றின் அடிப்படையில் பிள்ளைகளின் திறனுக்கும் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்பப் பாடங்களைத் திட்டமிட்டு நடத்துவதே வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறையாகும்.

பிள்ளைகள் ஒத்த வயதுடையவர்களாக இருப்பினும் அவர்கள் வேறுபட்ட அறிவாற்றல், பின்புலம், விருப்பு வெறுப்புகள், கற்றல் தெரிவுகள் ஆகியவற்றைக் கொண்டவர்களாவர். ஆகவே, பிள்ளைகளின் தேவைக்கேற்ப வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறையைப் பின்பற்றி ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்வது அவசியமாகும்.

### வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலின் அடிப்படைக் கோட்பாடுகள்

**5 பொதுவான கோட்பாடுகள்**

| தரமிக்க பாடக்கலைத்திட்டம் | குழு அமைப்பில் நெகிழ்வுத்தன்மை | மதிக்கத்தக்க நடவடிக்கைகள் | கற்றல் சமூகம் | வெளிப்பாடு/ மதிப்பீடு |
|---|---|---|---|---|

| எவற்றை வேறுபடுத்தலாம்? | எவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தலாம்? |
|---|---|
| பாடப்பொருள் | மாணவரின் தயார்நிலை |
| செயற்பாடு | மாணவரின் திறன் |
| வெளிப்பாடு | மாணவரின் கற்றல் பின்புலம் |
| கற்றல் சூழல் | |

பிள்ளைகளின் தயார்நிலை அடிப்படையில் நடவடிக்கைகளைச் செய்வதற்கான எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நடவடிக்கை | பிள்ளைகளின் தயார்நிலை | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| பாடல் பாடுதல் |  | • பிள்ளைகளைப் பாடலின் இசைக்கேற்ப இசைக்கருவிகளை இசைத்தோ பாடலுக்கேற்ப அசைவுகள் செய்தோ நடவடிக்கையில் ஈடுபடச் செய்யலாம். |
| |  | • பிள்ளைகளைப் பாடல் அடிகளிலுள்ள ஓரிரு சொற்களை மாற்றியோ, பாடலின் மெட்டை மாற்றியோ, வெவ்வேறு பாவனைகளைச் செய்தோ பாடச் சொல்லலாம். (எ-டு: தோசையம்மா தோசை → இட்லியம்மா இட்லி...) |
| பேசுதல் |  | • ஆசிரியர் அடிக்கடி பயன்படுத்தும் கட்டளைகளைப் பட அட்டைகளாகத் தயாரித்து வைத்துக்கொண்டு, அவற்றைப் பிள்ளைகளிடம் காட்டிக் கட்டளைகளைப் பின்பற்றுமாறு செய்யலாம். (எ-டு: வரிசையில் நில்லுங்கள், தரையில் உட்காருங்கள்.) |
| |  | • பிள்ளைகளிடம் நடவடிக்கைகளின்போது பெற்ற அனுபவங்களை மற்றப் பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ளச் சொல்லலாம். |
| பாத்திரமேற்று நடித்தல் |  | • பிள்ளைகளை ஓரிரு வரிகளை மட்டும் பேசும் கதாபாத்திரங்களையோ ஒரே வரியை மீண்டும் மீண்டும் சொல்லும் கதாபாத்திரங்களையோ ஏற்கச் செய்யலாம். (எ-டு: உணவு பரிமாறுபவர்: வணக்கம், என்ன சாப்பிடுகிறீர்கள்?) |
| |  | • பிள்ளைகளை நிறைய வசனங்களைப் பேசி நடிக்க வாய்ப்பளிக்கக்கூடிய கதாபாத்திரங்களை ஏற்கச் செய்யலாம். |
| கற்றல் நிலையம் |  | • பிள்ளைகளுக்கு இணை வேலையோ குழு வேலையோ கொடுக்கலாம்.<br>• பிள்ளைகளுக்கு ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் செய்யும் வேலைகளைக் கொடுக்கலாம். |
| |  | • பிள்ளைகளுக்குத் தனி வேலைகளைக் கொடுக்கலாம். |

**குறியீடுகளுக்குரிய விளக்கம்:**

 பையப்பயிலும் பிள்ளை

 மீத்திறன் மிக்க பிள்ளை

## திட்டப்பணியின் வாயிலாக ஆழ்ந்து கற்றல்

திட்டப்பணி என்பது பிள்ளைகள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தாங்களே தேர்ந்தெடுத்த தலைப்பையொட்டி ஆழ்ந்து அறிந்துகொள்ள வழிசெய்யும் செயலாகும். ஆசிரியர்கள் பிள்ளைகளின் திறனுக்கு ஏற்றவாறு திட்டப்பணியை அமைத்துக்கொள்ள வேண்டும்.

1. பிள்ளைகளின் தயார்நிலைக்கு ஏற்ப நெகிழ்வுத்தன்மையோடு பாடப்பொருளின் தன்மையை அமைத்துக்கொள்ளுதல்

2. பல்வேறுபட்ட கற்பித்தல் உத்திகள் (எ-டு: வேறுபட்ட குழுக்கள்: பெரிய குழு, சிறிய குழு, தனிப்பட்ட முறையில் கற்பித்தல்), வளங்கள், கற்றல் நடவடிக்கைகள், கற்கும் இடங்கள் முதலியவற்றைப் பயன்படுத்துதல்

3. பிள்ளைகளின் பங்கேற்பு, செயல் திறன் ஆகியவை குறித்து நியாயமான எதிர்பார்ப்புகளைக்கொள்ளுதல்

4. வெவ்வேறு மொழி, பண்பாட்டுப் பின்னணி, ஆர்வநிலை, திறன் ஆகியவற்றைக்கொண்ட சக வயதினருடன் சேர்ந்து விளையாடுவதற்கும் பணியாற்றுவதற்கும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துதல். இதனால், ஒன்றிணைந்த கற்றலும் கூடிக்கற்றலும் நிகழும். பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்கும் பண்பையும் பிறரை மதிக்கும் பண்பையும் வளர்த்துக்கொள்வார்கள்.

5. குடும்பத்தினருடன் நெருக்கமாகப் பணியாற்றிப் பிள்ளையின் தேவைகளையும் விருப்பங்களையும் அவர்கள் புரிந்துகொள்ள உதவுதல். இதனால், பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் தம் வீட்டில் பிள்ளையின் கற்றலுக்கு ஆதரவளிக்க இயலும்.

6. சரியான நேரத்தில் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் உதவியை வழங்கச் சமூகத்திலுள்ள வளங்களையும் பணித்திறன் சார்ந்த (Professional) உதவியையும் நாடுதல்

## திட்டப்பணி ஏன் முக்கியம் என்று கருதப்படுகிறது?

திட்டப்பணியின்போது நடத்தப்படும் நடவடிக்கைகள் பிள்ளைகள் தங்களுக்கு எழும் வினாக்களுக்கு விடை கண்டறியவும் தெரிவுகளைத் தேர்ந்தெடுக்கவும் தாமாக முடிவெடுக்கவும் வாய்ப்பளிக்கின்றன. இந்நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பிள்ளைகள் தங்கள் வகுப்பினரின் ஒத்துழைப்பையும் ஆசிரியர்களின் ஆலோசனையையும் பெறுகிறார்கள். சுயமுனைப்பு, துருவி ஆராய்தல், சிக்கலுக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றின்வழியே பிள்ளைகள் மகிழ்ச்சியான சுயகற்றல் அனுபவத்தைப் பெறுகிறார்கள். இவை பிள்ளைகளின் தன்னம்பிக்கையை வளர்ப்பதோடு கற்றலையும் மேம்படுத்துகின்றன.

## திட்டப்பணிக்குரிய நடவடிக்கைகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்?

பிள்ளைகள் தெரிந்துகொள்ள விரும்புவனவற்றையும் தெரிந்துகொண்டவற்றையும் கண்டறிந்தவைகளையும் எவ்வாறு முறைப்படுத்தித் திட்டப்பணிகளை மேற்கொள்ளலாம் என்பதற்கான குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**1. நான் தெரிந்துகொள்ள விரும்புவது ...**

- பிள்ளைகள் தெரிந்துகொள்ள விரும்பும் ஒன்றை அடையாளங்காண வேண்டும்.
- அதனைப்பற்றிப் பிள்ளைகள் அறிந்தவற்றை அவர்களுடன் கலந்துரையாட வேண்டும்.
- அதனைப்பற்றி வேறு என்ன தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள் என்பதைப் பிள்ளைகளுடன் கருத்துதிர்ப்புச் செய்ய வேண்டும்.
- வலைப்பின்னல் முதலான வரைபடங்களைப் பயன்படுத்திப் பிள்ளைகளின் கருத்துகள் அல்லது வினாக்கள் ஆகியவற்றைப் பதிவுசெய்ய வேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

ஆமையும் முயலும் என்னும் கதையைக் கேட்டு மகிழ்ந்த பின்னர், பிள்ளைகள் ஆமையைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பலாம். அதனால், ஆசிரியர் முதலில் ஆமையைப் பற்றிய பிள்ளைகளின் முன்னறிவைக் கேட்டறிந்து அவர்களுடன் அது குறித்துக் கலந்துரையாட வேண்டும். பிள்ளைகள் கூறியவற்றை வலைப்பின்னலிலோ வரைபடத்திலோ குறிப்பெடுத்துக்கொள்ளலாம்.

**2. நான் கண்டுபிடித்தவை...**

- பிள்ளைகள் எவ்வாறு தகவல்களைச் சேகரிக்கலாம் அல்லது வினாக்களுக்குப் பதில்களைக் கண்டறியலாம் என்பதை அவர்களுடன் கலந்துரையாடித் திட்டமிடுதல் வேண்டும்.
- பிள்ளைகள் தகவல்களைச் சேகரிக்கப் பரிந்துரைக்கப்படும் சில வழிமுறைகள்:
    - பிள்ளைகளின் வினாக்களுக்கு விடையளிக்கக்கூடிய வல்லுநர்களுக்கு அழைப்பு விடுத்தல் அல்லது அவர்களைச் சென்று சந்தித்தல்
    - உற்றுநோக்கவும் மற்றவர்களுடன் கலந்துரையாடவும் பொருத்தமான இடங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல்
    - பிள்ளைகள் பொருத்தமான சஞ்சிகைகள், கையேடுகள், புத்தகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்
    - பிள்ளைகள் இணையத் தேடலில் ஈடுபடுதல்*
    - பிள்ளைகள் குடும்பத்தாருடன் இணைந்து தகவல்களைத் திரட்டுதல்*

*** இவற்றைப்பற்றிக் குடும்பத்தாருக்குக் குறிப்புப் புத்தகத்தில் எழுதித் தெரியப்படுத்துங்கள்.**

- பிள்ளைகள் தெரிந்துகொண்டவற்றைப் படங்களாக வரைதல், நிழற்படங்கள் எடுத்தல், வடிவமைத்தல், வரைபடமாக உருவாக்குதல் முதலியவற்றின்மூலம் பதிவுசெய்ய வேண்டும்.
- பிள்ளைகள் தெரிந்துகொண்டவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டும் (ஆரம்பநிலைக் கண்டுபிடிப்புகள்).

**எடுத்துக்காட்டு:**

பிள்ளைகள் ஆமையைப்பற்றித் தங்கள் குடும்பத்தாருடன் தகவல்களைச் சேகரிக்க வேண்டும். (எ-டு:) ஆமையின் ஓடு எப்படி இருக்கும், ஆமையின் முட்டை எப்படி இருக்கும், ஆமை என்ன சாப்பிடும் என்பனவற்றைத் தெளிவாகக் கூற வேண்டும். பிள்ளைகளை அவர்களுடைய குடும்பத்தாரின் உதவியுடன் புத்தகங்கள் வாயிலாகவோ இணையப்பக்கம் வாயிலாகவோ தகவல்களைத் திரட்டச் சொல்லலாம். பிள்ளைகள் சேகரித்த தகவல்களை அவர்களுடைய குடும்ப உறுப்பினரின் உதவியுடன் தரவிறக்கம் செய்து, அச்சிட்டுப் பள்ளிக்குக் கொண்டுவந்து, மற்றப் பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ளச் சொல்லலாம்.

**3. நான் தெரிந்துகொண்டவை...**

- கருத்துத்தெரிவிக்கவும் ஐயங்களைக் கேட்டுத் தெளியவும் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.
- தாம் கண்டுபிடித்தவை தங்கள் வினாக்களுக்கு விடைகள் காண எவ்வாறு துணைபுரிந்தன என்பதைப்பற்றிப் பிள்ளைகள் கலந்துரையாட வாய்ப்பளிக்க வேண்டும்.
- தாம் கண்டுபிடித்தவற்றை எவ்வாறு மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என்பதைப்பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும்.
- தாம் கண்டுபிடிக்க முயன்றபோது எவை சரியாக அமைந்தன, எவை சரியாக அமையவில்லை, அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பனபற்றிப் பிள்ளைகளைச் சிந்திக்கவும் கலந்துரையாடவும் சொல்ல வேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

பிள்ளைகள் தங்களது வகுப்பினருடன் தகவல்களை எவ்வாறு பகிர்ந்துகொள்ள விரும்புகிறார்கள் (படங்களைக் காட்டி, நடித்துக் காட்டி, இன்ன பிற) என்பதையும் அவர்களுடன் கலந்துரையாட வேண்டும். பிள்ளைகள் தங்களுடைய படைப்பின்போது தொடக்கத்திலிருந்த தங்களின் ஐயங்களை எவ்வாறு தீர்த்துக்கொண்டார்கள் என்பதையும் வேறு என்ன புதிய தகவல்களைத் தெரிந்துகொண்டார்கள் என்பதையும் விவரிக்கச் சொல்ல வேண்டும். மேலும், பிள்ளைகள் இந்தத் திட்டப்பணியில் ஈடுபட்டபோது எவை சரியாக நடந்தன, எவை சரியாக அமையவில்லை, அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பனபற்றிச் சிந்தித்துக் கூறச் சொல்ல வேண்டும்.

# தாய்மொழி கற்றலுக்கான சூழலை அமைத்தல்

தாய்மொழி கற்றலுக்கான சூழலை அமைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய 3 முக்கியக் கூறுகள் பின்வருமாறு:

- புறச்சூழல் (Physical environment)
- கருத்துப்பரிமாற்றச் சூழல் (Interactional environment)
- மாற்றத்திற்குரிய நடைமுறைச் சூழல் (Temporal environment)

## புறச்சூழல்

பாலர் பள்ளியில் புறச்சூழல் என்பது உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் குறிக்கும். வகுப்பறையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் அர்த்தமுள்ள விளையாட்டு, தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம், ஆய்ந்தறிதல் ஆகியவற்றை ஊக்குவிக்கும்வண்ணம் பிள்ளைகளின் படைப்பாற்றலையும் கற்பனையையும் மேம்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

## மொழிவளம் மிகுந்த சுற்றுச்சூழல்

ஒரு குறிப்பிட்ட மொழியில் பேசப்படுவதை இளம் பிள்ளைகள் அடிக்கடி கேட்பது அவசியம். இளம் பிள்ளைகள் பலவிதமான சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் முதலியவற்றை மொழிவளம் மிகுந்த சுற்றுச்சூழலில் கேட்பது முக்கியம்.

மொழிவளம் மிகுந்த சுற்றுச்சூழலை இளம் பிள்ளைகளுக்கு உருவாக்கிக் கொடுப்பதற்கான சில வழிமுறைகள்:

- நீங்களோ பிள்ளையோ ஒரு செயலைச் செய்யும்போது அதைப்பற்றிப் பேசுங்கள்.
- பிள்ளைகளுக்கு அடிக்கடி வாசித்துக்காட்டுங்கள்.
- பிள்ளைகள் எதில் ஆர்வம் காட்டுகிறார்களோ அதையொட்டி அவர்களுடன் உரையாடுங்கள்.

## அச்சிடப்பட்ட வளங்கள் நிறைந்த சுற்றுச்சூழல்

அச்சிடப்பட்ட வளங்கள் வெவ்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்க்கக்கூடிய சூழலில் பிள்ளைகள் இருந்தால் அவற்றைப்பற்றி அறிந்துகொள்வதில் பிள்ளைகளுக்கு அறிவார்வம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும், ஆசிரியர்கள் அச்சிடப்பட்ட வளங்களைப்பற்றி வலியுறுத்தவோ அவற்றையொட்டிக் கற்றலை விரிவுபடுத்தவோ இது துணைபுரியும்.

எளிதில் கிடைக்கக்கூடியவற்றைக்கொண்டு அச்சிடப்பட்ட வளங்கள் நிறைந்த சூழலை உருவாக்கச் சில எடுத்துக்காட்டுகள்:

- சுற்றுச்சூழலில் உள்ள அச்சிடப்பட்ட வளங்கள்
- முத்திரைகள்
- பட்டியல்கள், அட்டவணைகள், நாள்காட்டிகள்
- செய்திகள்
- எழுத்துகளும் சொற்களும் கொண்ட சுவரொட்டிகள்

வெளிப்புறம் பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஓர் அங்கம். இது பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சி, சுகாதாரம், நல்வாழ்வு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சூழலுடனான தொடர்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. இவற்றின்வழியே பிள்ளைகள் பயன்மிகு கற்றல் அனுபவங்களைப் பெறுகிறார்கள்.




பிள்ளைகளின் படைப்புகளைக் காட்சிக்கு வைத்தல்

## வெளிப்புற நடவடிக்கைகளின்வழியே தாய்மொழி கற்றல்

> ***வகுப்பறைகள், அவற்றைச்சுற்றி அமைந்துள்ள இடங்கள் இவற்றிற்கு அப்பாலும் கற்றல் நிகழ வேண்டும். அதனால், பிள்ளைகளை அதிகமான வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் அவசியம்.***
>
> மனிதவள அமைச்சர் ஜோசஃபின் தியோ, 'டுடே' நாளேடு (5 நவம்பர் 2018)

## வெளிப்புற நடவடிக்கைகள்

வகுப்பறைகளுக்கு அப்பாலும் அவற்றைச் சுற்றி அமைந்துள்ள இடங்களுக்கு அப்பாலும் கற்றல் நிகழ வேண்டும். வகுப்பறைக்கு அப்பால் நடைபெறும் நடவடிக்கைகள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவும். பிள்ளைகளின் கற்றலையும் திறன் வளர்ச்சியையும் மேம்படுத்த வெளிப்புற நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். வெளிப்புறம் என்பது பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையின் ஒரு முக்கியப் பகுதியாகும். உணர்வுபூர்வமான வெளிப்புறம் சார்ந்த கற்றல் அனுபவங்களை வழங்குவதால் பிள்ளைகள் தங்களின் சுற்றுச்சூழலைப் பற்றிய விழிப்புணர்வைப் பெறுவார்கள். அழகியல், அறிவுசார் வளர்ச்சி, சமூக மனவுணர்வு சார்ந்த வளர்ச்சி, உடலியக்கம் முதலிய முக்கியக் கூறுகள் பிள்ளைகளுடைய வெளிச்சூழல் கற்றல் அனுபவங்களிலும் நடவடிக்கைகளிலும் இடம்பெற்றிருக்க வேண்டும். இவற்றைப் போன்ற நடவடிக்கைகளின்வழியே கற்றலில் ஏட்டுக்கல்வியையும் வெளிச்சூழலையும் ஒருங்கிணைக்க இயலும்.

## வெளிப்புறக் கற்றலுக்குத் திட்டமிடும்போது கருத்திற்கொள்ள வேண்டியவை:

- வெளிப்புறத்தில் அர்த்தமுள்ள விளையாட்டிற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்
- பிள்ளைகளின் சுதந்திரத்திற்கும் விருப்பத்திற்கும் இடமளித்தல்
- பிள்ளைகளின் அறிவாற்றல், திறன்கள் ஆகியவற்றின் வளர்ச்சி
- பிள்ளைகளின் பாதுகாப்பு

## வெளிப்புற நடவடிக்கைகளின்போது பிள்ளைகளுக்கு ஏற்படும் அனுபவங்கள்:

- தனிநிலை அனுபவம் (Personal Experience)
- புலனுணர்வுசார் அனுபவம் (Sensory Experience)

## இவ்விரண்டு அனுபவங்களினாலும் பிள்ளைகள் காணக்கூடிய வளர்ச்சிகள்:

- உணர்வுபூர்வ வளர்ச்சி (Emotional Development)
- அறிவுசார் வளர்ச்சி (Cognitive Development)
- நடத்தைசார்ந்த வளர்ச்சி (Behavioural Development)
- பண்புநலன் வளர்ச்சி (Character Building)



பிள்ளைகள் அர்த்தமிகு வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

### எடுத்துக்காட்டு:

பிள்ளைகளிடம் கடற்கரையைக் களமாகக்கொண்ட கதையைச் சொன்ன பிறகு, அவர்களைக் கடற்கரைக்குக் கற்றல் பயணம் அழைத்துச் செல்லலாம். அங்கு அவர்களை நிழலில் அமரவைத்துக் கடற்கரையில் அவர்கள் காணும் பொருள்களின் பெயர்களைக் கூறச் சொல்லலாம் *(அறிவுசார் வளர்ச்சி)*. பின், பிள்ளைகளை இணைகளாகப் பிரித்து ஒவ்வோர் இணையையும் ஆசிரியரோடு கடல்மணலில் வெறுங்காலில் நடந்துபார்க்கச் சொல்லலாம் *(புலனுணர்வுசார் அனுபவம்)*. அப்போது பிள்ளைகளுக்கு ஏற்படும் உணர்வுகளைக் கேட்டறியலாம் *(தனிநிலை அனுபவம்)*. கடலலையின் ஓசையைக் கேட்கச் சொல்லி அதுபற்றிப் பேசச் சொல்லலாம். கடற்கரையில் கிடக்கும் மக்கிப்போகாத குப்பைகள்பற்றியும் அவற்றால் ஏற்படும் விளைவுகளைப்பற்றியும் கலந்துரையாடலாம் *(நடத்தை சார்ந்த வளர்ச்சி, பண்புநலன் வளர்ச்சி)*. வகுப்பிற்கு வந்த பின்னர்ப் பிள்ளைகளின் அனுபவத்தையொட்டிக் கலந்துரையாடலைத் தொடரலாம் அல்லது பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.







### கருத்துப்பரிமாற்றச் சூழல்

கருத்துப்பரிமாற்றம் நிகழும் சூழல் பிள்ளைகளின் சமூகத் தேவைகளையும் உரையாடல் தேவைகளையும் நிறைவுசெய்கிறது. ஒருவரையொருவர் மதிக்கும்வகையில் வகுப்பறைச் சூழலை நிறுவ வேண்டும். அதனால், ஆசிரியர் - பிள்ளை, பிள்ளை - பிள்ளை, பெற்றோர் - பிள்ளை ஆகியோரிடையே நிகழும் கருத்துப்பரிமாற்றம் மேம்படும். நல்ல வகுப்பறைச் சூழல் பிள்ளைகளுக்குச் சுதந்திர உணர்வை ஏற்படுத்துகிறது. மேலும், பிள்ளைகள் கற்றலில் ஈடுபாடுகொள்வதுடன் பிறருடன் நல்லுறவையும் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இவற்றால் அன்பு, ஆதரவு, நட்பு போன்றவை அடங்கிய இனிய சூழலை அனுபவிக்கிறார்கள். இத்தகைய சூழலில், பிள்ளைகள் சவால்களை எதிர்கொள்ளவும் நம்பிக்கையுடன் ஆராயவும் முடிவெடுக்கவும் ஊக்கங்கொள்வர்.

### மாற்றத்திற்குரிய நடைமுறைச்சூழல்

பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபடுவதற்கும் அமர்ந்து செயல் புரிவதற்கும் தனிநிலையிலும் குழுநிலையிலும் இயங்குவதற்கும் போதுமான நேரம் வழங்கப்பட வேண்டும். மாற்றத்திற்குரிய நடைமுறைச்சூழல் என்பது ஆசிரியர்கள் எவ்வாறு கற்றலுக்கான

நேரத்தை நிர்வகிக்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது. இது தெளிவான அன்றாட நடைமுறைகளை நிறுவுதல், நடவடிக்கைகளுக்கு இடையிலான பயன்முனைப்புமிக்க மாற்றங்களைச் செய்தல், கற்றல் வாய்ப்புகளைச் செவ்வனே பயன்படுத்துதல் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது. பயன்மிகு அன்றாட நடைமுறைகளும் நிலைமாற்றங்களும் பிள்ளைகளின் சவால்மிக்க நடத்தைகளைக் குறைக்க உதவும். இவற்றையொட்டிய ஆசிரியர்களின் பாடத் தயாரிப்பு, நேர விரயத்தையும் பாட நேர இழப்பையும் தவிர்க்க உதவும்.

## தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு



ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துதல்

பாலர் பள்ளிகளில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைக் கற்றல் கற்பித்தலின்போது முறையாகப் பயன்படுத்துவதற்காக மூன்று முக்கியக் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இக்கோட்பாடுகள் பிள்ளைகள் விளையாட்டு வாயிலாகவும் தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றத்தின் வாயிலாகவும் கற்றுக்கொள்கிறார்கள் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளன.

| முக்கியமாகக் கருத்திற்கொள்ள வேண்டியவை | | |
|---|---|---|
| **1** | **2** | **3** |
| **தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களை மேம்படுத்தும்வண்ணமும் அவர்களின் வளர்ச்சிநிலைக்குப் பொருந்தும்வண்ணமும் அமைய வேண்டும்.** | **பிள்ளைகள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை ஆசிரியரின் துணையுடனும் வழிகாட்டுதலுடனும் பயன்படுத்த வேண்டும்.** | **தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது பிள்ளைகளின் பாதுகாப்பையும் நலனையும் கருத்திற்கொள்ள வேண்டும்.** |
| **முக்கியமாகக் கருத்திற்கொள்ள வேண்டியவை குறித்துக் கூடுதல் விளக்கம்** | | |
| பொருள்களைத் தொட்டு உணர்வதாலும் நடவடிக்கைகளைச் செய்வதாலும் நண்பர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோருடன் தரமிக்க கலந்துரையாடல்களில் ஈடுபடுவதாலும் பிள்ளைகள் சிறப்பாகக் கற்றுக்கொள்வார்கள். | பிள்ளைகள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது, அந்த நடவடிக்கையில் விளையாட்டுக்கூறு, தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம், பிள்ளைகள் தாங்களாகவே ஆய்ந்து அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் ஆகியவை இடம்பெறுவதை ஆசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும். | ஆசிரியர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைச் சீரான அளவில் பயன்படுத்த வேண்டும். மிகையான தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயன்பாடு பிள்ளைகளின் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும். |

## எடுத்துக்காட்டு:

பிள்ளைகள் மரத்தின் நிழலை வெவ்வேறு நேரத்தில் நிழற்படம் எடுத்தார்கள். (தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்) பின்னர், அந்தப் படங்களை ஒப்பிட்டுப் பார்த்து, மரத்தின் நிழல் வெவ்வேறு திசையில் வெவ்வேறு அளவில் இருப்பதைச் சுட்டினார்கள். (உலகைக் கண்டறிதல்) பின்னர், ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் காரணத்தைப்பற்றிக் கலந்துரையாடினார்கள். (தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம்) பின்னர், படங்களிலுள்ள நிழலை எவ்வாறு அளவிடலாம் (பல் குத்தும் குச்சிகள், பென்சில்கள், அளவுகோல் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்) என்பதற்கான யோசனைகளை முன்வைத்தார்கள் (ஆய்ந்தறிதல்). வெவ்வேறு பொருளைப் பயன்படுத்தி அளவெடுப்பதால் நிழலின் எண்ணளவு மாறுபடுகிறது என்பதைக் கண்டறிந்தனர் (எண்ணறிவு).

## இளம் பிள்ளைகளுடன் மின்னூல்களை எப்படிச் சரியாகப் பயன்படுத்துவது?

இளம் பிள்ளைகளால் மின்னூல்களைத் தாமாகவே படிக்க முடிந்தாலும் பெரியவருடன் சேர்ந்து அவற்றைப் படிக்கும்போதுதான் அவர்கள் அதிகப் பயன்பெறுகிறார்கள் என்று ஆய்வு காட்டுகிறது. இளம் பிள்ளைகள் தாங்கள் படித்த மின்னூலைப்பற்றிப் பெரியவர்களுடன் உரையாடும்போது அவர்களது கற்றல் வளப்படுவதோடு அவர்கள் வாசித்தலில் காட்டும் வளர்ச்சியும் துரிதப்படும். இளம் பிள்ளைகளுடன் மின்னூல்களைப் பயன்படுத்தும்போது முதலில் அவற்றை வாசியுங்கள். மின்னூல்களில் உள்ள விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு முன்பு பிள்ளைகள் முழுக் கதையையும் முதலில் கேட்பது அவசியம். ஏனெனில், இது கதையை அவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது.

## இல்லம் சார்ந்த கற்றலின்போது தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

பாலர் பள்ளிப் பிள்ளைகள் ஆசிரியரோடும் சக வகுப்பினரோடும் நேருக்குநேர் இருவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடும்போது மொழியைப் பயன்பாட்டுச் சூழலில் எளிதாகவும் சிறப்பாகவும் கற்றுக்கொள்கிறார்கள். இருப்பினும் தவிர்க்கமுடியாத சூழலில் இணையம் வழியாகப் பிள்ளைகளுக்குத் தாய்மொழியைக் கற்பிக்க வேண்டிய சூழல் ஏற்படலாம். அத்தகைய சூழலில் ஆசிரியர்கள் பிள்ளைகளின் ஆர்வம், தேவை, வீட்டுச்சூழல், வீட்டில் பிள்ளைகளுக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவு, பிள்ளைகளின் வீட்டிலுள்ள தகவல் தொழில்நுட்ப வசதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும் கற்றல் நோக்கங்களுக்கு ஏற்பவும் நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும். இந்த நடவடிக்கைகள் பெற்றோருக்கோ பராமரிப்பாளர்களுக்கோ பிள்ளைகளுக்கோ அதிகச் சுமையின்றி இருத்தல் வேண்டும். கூடுதல் தகவல்கள் Nurturing Early Learners: A Curriculum Framework for Preschool Education in Singapore என்னும் கையேட்டில் பக்கம் 66 - 68-இல் உள்ளன.

### எடுத்துக்காட்டு:

| | |
|---|---|
| கேட்டல், பேசுதல் ஆகியவற்றில் திறன் வளர்ச்சி | • கதை சொல்லுதல், கதை படித்தல், பாடல்கள் பாடுதல் – 'ஸூம்' (Zoom) நிகழ்தளத்தின் வாயிலாகவோ ஒளிப்பதிவு செய்தோ இந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.<br>• செயலிகள், வலையொளி (You Tube) முதலியவற்றிலுள்ள பொருத்தமான கதைகளையும் பாடல்களையும் கேட்கச் சொல்லலாம்.<br>• பிறகு, கேட்ட கதையையும் பாடலையும் பிள்ளையைக் குடும்ப உறுப்பினரிடம் சொல்லச் சொல்லலாம். ஆசிரியர் பிள்ளைகளுடன் கதையையும் பாடலையும்யொட்டி 'ஸூம்' நிகழ்தளத்தின் வாயிலாகவோ தொலைபேசி வாயிலாகவோ கலந்துரையாடலாம். |
| படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் திறன் வளர்ச்சி | • ஓரிரு எழுத்துகளையோ சொற்களையோ அறிமுகஞ்செய்தல் – 'ஸூம்' (Zoom) நிகழ்தளத்தின் வாயிலாகவோ ஒளிப்பதிவு செய்வதன் மூலமாகவோ இந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.<br>• செயலிகள், வலையொளி (You Tube) முதலியவற்றிலுள்ள பொருத்தமான பதிவுகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.<br>- வீட்டிலுள்ள சஞ்சிகை அல்லது செய்தித்தாளில் படித்த எழுத்துகளையும் சொற்களையும் குடும்ப உறுப்பினர்களிடம் சுட்டிக் காட்டச் சொல்லலாம்.<br>- அரிசியைச் சிறிய தட்டில் நிரப்பிக் குடும்ப உறுப்பினர்களின் மேற்பார்வையில் பிள்ளைகளை அதில் எழுதிப் பழகச் சொல்லலாம். |

## தமிழ் கற்பிக்கப்படாத பாலர் பள்ளிகளிலுள்ள பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்குதல்

தமிழ் கற்பிக்கப்படாத பாலர் பள்ளிகளிலுள்ள பிள்ளைகளுக்கு இணையம் வழியாகத் தமிழ்மொழியைக் கற்பிக்கும்போது ஆசிரியர்கள் பிள்ளைகளின் ஆர்வம், தேவை, அந்த நிலையம் வழங்கக்கூடிய ஆதரவு (எ-டு: தனி அறை, மேற்பார்வையிட ஆசிரியர், இன்ன பிற), அந்த நிலையத்திலுள்ள தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வசதிகள் (எ-டு: கணினிக்கூடம், ஒலிபெருக்கி, ஒலிவாங்கி, இன்ன பிற) முதலியவற்றைக் கருத்திற்கொண்டும் நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும். பிள்ளைகளுக்குக் கவனச்சிதறல் ஏற்படாதவண்ணம் நடவடிக்கைகள் சுருக்கமாகவும் மனத்தைக் கவர்ந்து ஈடுபாடுகொள்ளத்தக்கதாகவும் இருத்தல் அவசியம். தமிழாசிரியரின் மேற்பார்வையின்றிப் பிள்ளைகள் செயற்பட வேண்டியிருப்பதால் ஆசிரியர்கள் பின்வரும் பரிந்துரைகளைக் கருத்திற்கொள்ளலாம்.

- கற்றல் நோக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கையைத் திட்டமிடுதல்
- கட்டளைகளை வாய்மொழியாக மட்டுமே கூறாமல் போலச் செய்து காட்டுதல்
- பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் பாடத்தை / நடவடிக்கையை மீண்டும் மீண்டும் செய்தல்
- பிள்ளைகள் நடவடிக்கைகளைச் செய்வதற்குப் போதிய அவகாசம் வழங்குதல்



# இயல் 4

## கற்றலையும் வளர்ச்சியையும் உற்றுநோக்குதலும் மதிப்பிடுதலும்

# கற்றலையும் வளர்ச்சியையும் உற்றுநோக்குதலும் மதிப்பிடுதலும்

கல்வி என்பது பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடியதாக அமைதல் வேண்டும். அறிவாற்றல், திறன்கள், பண்புகள், உடலியக்கம், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், அழகியல் கூறுகள் ஆகியவற்றில் பிள்ளைகள் கண்டுவரும் மேம்பாடுகளே அப்பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியை அளவிடத் துணைபுரியும். இவை அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை ஒரே நேரத்தில் வளர்ச்சி பெறுவதால், இவற்றைத் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க இயலா.

இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தலுக்குரிய பணிச்சட்டத்தில் 5 கற்றல் பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிள்ளைகளின் முக்கிய அறிவாற்றல், திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவை வளர்ச்சி காண்பதற்குத் துணைபுரியும் வகையில் ஆசிரியர்கள் இந்த 5 பகுதிகளின் அடிப்படையிலும் பிள்ளைகளுக்குக் கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டும். இந்தக் கற்றல் அனுபவங்கள் பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையின் இயல்பான சூழலில் அமைதல் வேண்டும். இவ்வாறு செய்வதால் பிள்ளைகள், தாம் பெற்ற முக்கிய அறிவாற்றலையும் திறன்களையும் தம்முடைய வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பார்ப்பார்கள்.

### நிர்வாகச் செயற்பாடும் சுய கட்டுப்பாட்டுத் திறன் வளர்ச்சியும்

பிள்ளைகள் பாலர் பள்ளியில் பயிலும்போது நிர்வாகச் செயற்பாடு, சுய கட்டுப்பாட்டுத் திறன்கள் ஆகிய முக்கியத் திறன்கள் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் பல உள்ளன. இந்தத் திறன்கள் அன்றாட நடவடிக்கைகளின்போது பிள்ளைகள் கவனம் செலுத்துவதற்கும் வழிமுறைகளை நினைவிற்கொண்டு அவற்றைப் பின்பற்றுவதற்கும் மற்றப் பிள்ளைகளுக்கு வாய்ப்பளித்துத் தங்கள் முறைக்காகக் காத்திருப்பதற்கும் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்துச் செய்து முடிப்பதற்கும் உறுதுணையாக விளங்குகின்றன. இந்தத் திறன்கள் 3 வயதுமுதல் 7 வயதுவரையுள்ள பிள்ளைகளிடம் துரித வளர்ச்சி காண்கின்றன. நிர்வாகச் செயற்பாடு, சுய கட்டுப்பாட்டுத் திறன்கள் ஆகியவற்றின் மூன்று முக்கியக் கூறுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

| | |
|---|---|
| **பயன்பாட்டுக்குரிய நினைவாற்றல் (Working memory)** | மனத்தில் தகவல்களை வைத்திருந்து தேவைப்படும்போது அவற்றை நினைவுகூர்ந்து பயன்படுத்துதல்<br>(எ-டு): கேட்ட கதையை நினைவுகூர்ந்து சொல்வதால் இந்தத் திறன் மேம்படுகிறது. |
| **அறிவுசார் நெகிழ்வுத்தன்மை (Cognitive flexibility)** | பல்வேறு வழிகளில் சிந்தித்தல்<br>(எ-டு): சிக்கலை வெவ்வேறு வழிகளில் தீர்ப்பதற்காகச் சிந்திக்கும்போது இந்தத் திறன் மேம்படுகிறது. |
| **தடையுணர்வுக் கட்டுப்பாடு (Inhibitory control)** | உணர்ச்சிவயப்படாமல் செயற்படுதலும் பதிலளித்தலும்<br>(எ.டு): ‘சைமன் சேஸ்’ (Simon Says) போன்ற விளையாட்டுகளில் ஈடுபடும்போது இத்திறன் மேம்படுகிறது. |

மேற்கண்ட கூறுகள் பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்குத் துணைபுரியும்.

## முழுமையான மதிப்பீடு

முழுமையான மதிப்பீடு என்பது பிள்ளைகளின் அறிவாற்றல், திறன்கள், பண்புகள், உடலியக்கம், சமூக மனவுணர்வு, அழகியல் கூறுகள் ஆகிய அனைத்தையும் அளவிடுவதோடு அவற்றின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். மேலும், அது கல்வியறிவுக்கும் விழுமியங்களுக்கும் இடையே சமநிலை வளர்ச்சியை ஏற்படுத்த உதவும்.

### மதிப்பீட்டு வகைகள்

பிள்ளைகளின் அன்றாடச் செயற்பாடுகளைக் கண்டறிந்து, அவர்களின் படைப்புகளைப் பார்த்து, அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்குத் தெரிந்தவற்றையும் அவர்களால் செய்யக் கூடியவற்றையும் அறிந்துகொள்ளுதலை மதிப்பீடு எனலாம். பிள்ளைகள் ஒன்றைச் செய்யும்போதோ படைக்கும்போதோ அவர்களிடம் காணப்படும் குறிப்பிட்ட ஆற்றல்களையும் கைவரப்பெற்ற திறன்களையும் அவர்கள் வெளிப்படுத்துவதை ஆசிரியர் உற்றுநோக்க வேண்டும். பாலர் பள்ளியில் பிள்ளைகள் ஒவ்வொருவரின் வளர்ச்சியையும் மதிப்பிடும் நோக்கில் அவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர்களின் செயற்பாடுகளை உற்றுநோக்கி, தகவல்களைத் திரட்டி, அவற்றை ஆவணப்படுத்திக் கருத்துத் தெரிவிக்க வேண்டும்.



**ஆசிரியர் மதிப்பீடு**

ஆசிரியர் வகுப்பறையில் பிள்ளைகளின் செயல்திறனை உற்றுநோக்கி மதிப்பீடு செய்ய வேண்டும். அச்சமயத்தில் பெறப்படும் சான்றுகள் ஆசிரியர் தம் கற்பித்தலை மேம்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்துவதற்கும் உதவும். பிள்ளைகளின் வளர்ச்சிநிலைக்குரிய சான்றுகளைப் பெறுவதற்கும் இது உதவும். மேலும், முக்கிய அறிவாற்றல், திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவற்றில் பிள்ளைகளின் வளர்ச்சிநிலை குறித்துப் பெற்றோர்களிடம் கூறுவதற்கும் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் இது உதவும்.



**சக மாணவர் மதிப்பீடு**

பிள்ளைகள் தங்களின் வகுப்பில் படிக்கும் சக மாணவர் அடைந்திருக்கும் வளர்ச்சிநிலையை உற்றுநோக்கித் தங்களின் கருத்துகளைத் தெரிவிப்பது சக மாணவர் மதிப்பீடாகும். இம்மதிப்பீட்டை ஆசிரியர் போலச் செய்து (Model) காண்பிக்க வேண்டும். பின்னரே, பிள்ளைகளைச் சக மாணவர் மதிப்பீட்டில் ஈடுபடுத்த வேண்டும். இந்த மதிப்பீட்டின்வழியே பிறருடைய படைப்பைப் பொறுப்போடு மதிப்பீடு செய்யும் பண்பைப் பிள்ளைகள் கற்றுக்கொள்வார்கள்.



**சுய மதிப்பீடு**

தாங்கள் அடைந்திருக்கும் வளர்ச்சிநிலையைத் தாங்களாகவே எண்ணிப் பார்த்துத் தங்களைப்பற்றிப் புரிந்துகொள்வார்கள். இதன்வழியே அவர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்வார்கள். ஆனால், தொடக்கத்தில் பிள்ளைகளுக்கு இந்த மதிப்பீட்டைச் செய்வதற்கு ஆசிரியரின் உதவி தேவைப்படுகிறது. ஆசிரியர் தாமே மதிப்பீட்டைப் போலச் செய்து காண்பிக்க வேண்டும். பின்னரே, பிள்ளைகளை மதிப்பீட்டில் ஈடுபடுத்த வேண்டும்.

## பிள்ளைகளின் கற்றலை உற்றுநோக்குதல்

பிள்ளைகளின் கற்றலை உற்றுநோக்கி மதிப்பிடுதல், கற்றல் கற்பித்தல் செயல்முறையின் ஒரு பகுதியாகும். ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கூர்ந்து கவனித்து விவரங்களைக் குறித்துவைத்துக்கொள்ள வேண்டும். கற்றல் குறிக்கோள்களையொட்டிப் பிள்ளைகளுக்கு என்ன தெரியும், அவர்களால் என்ன செய்ய முடியும், அவர்களின் புரிந்துணர்வின் தன்மை என்ன முதலியவற்றைப் பிள்ளைகளை உற்றுநோக்கி அறிந்துகொள்ளலாம். நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்தத்

தேவையானவற்றை அடையாளங்காண்பதற்கும் இந்தத் தகவல்கள் உதவும். மேலும், தாய்மொழி கற்றலில் பிள்ளைகளின் முன்னேற்றம் குறித்துப் பெற்றோர்களிடம் கூறுவதற்கும் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் இதன்வழியே தேவையான விவரங்கள் சான்றுகளுடன் கிடைக்கும்.

ஆசிரியர் பிள்ளைகளை உற்றுநோக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டியவை:

| | |
|---|---|
| **விருப்பங்கள்** | • பிள்ளையின் கவனத்தை எத்தகைய தலைப்புகள் ஈர்த்துள்ளன?<br>• பிள்ளைக்கு எதைப்பற்றிப் பேச விருப்பம் உள்ளது?<br>• பிள்ளைக்குத் தெரிவுகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளிக்கும்போது அவர் எவ்வாறு செயற்படுகிறார்?<br>• பிள்ளை எத்தகைய வினாக்களைக் கேட்கிறார்? |
| **திறன்கள்** | • பிள்ளை எந்தத் திறனில் சிறந்து விளங்குகிறார்?<br>• பிள்ளை எந்தத் திறனைக் கடினம் என்று கருதுகிறார்?<br>• பிள்ளை எவ்வகைத் திறன்களில் தற்போது கவனம் செலுத்தி வருகிறார்? |
| **மெய்ப்பாடுகளின் பயன்பாடு** | • பிள்ளை எவ்வாறு தமது உணர்வுகளை மெய்ப்பாடுகளின்வழி உணர்த்துகிறார்?<br>• பிள்ளை தமது எண்ணங்களையும் உணர்வுகளையும் உணர்த்த அடிக்கடி சைகையைப் பயன்படுத்துகிறாரா?<br>• பிள்ளை மெய்ப்பாடுகளின்வழியே தம் எண்ணத்தை வெளிப்படுத்துகிறாரா? |
| **பெரியவர்களுடனும் சக மாணவர்களுடனும் பழகுதல்** | • பிள்ளை மற்றவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுகிறாரா?<br>• பிள்ளை மற்றவர்களுடன் (பெரியவர்கள் / பிள்ளைகள் / தெரிந்தவர்கள் / வகுப்பிற்கு வருபவர்கள்) பழகுவதில் நாட்டம் காட்டுகிறாரா? பிள்ளை கலந்துரையாடலை எவ்வாறு தொடங்குகிறார்?<br>• பிள்ளை மற்றவர்களுடன் எத்தகைய நடவடிக்கையில் ஈடுபட விரும்புகிறார்?<br>• பிள்ளை பிறருடன் ஏற்படும் கருத்து வேறுபாட்டை எவ்வாறு கையாளுகிறார்?<br>• பிள்ளை எந்தச் சூழ்நிலைகளில் ஆசிரியரின் உதவியை நாடுகிறார்? |

# பிள்ளைகளின் கற்றலை ஆவணப்படுத்துதல்

பிள்ளைகளின் கற்றலைக் கூர்ந்து கவனித்து மதிப்பிடுதல் அவசியம். அதற்குப் பின்வரும் வழிமுறைகள் துணைபுரியும்:

**படம் 4: பிள்ளைகளின் கற்றலையும் வளர்ச்சியையும் உற்றுநோக்குவதற்குரிய படிநிலைகள்:**




## 1. விவரங்களைத் திரட்டி ஆவணப்படுத்துதல்

பிள்ளைகள் தாய்மொழியில் பெற்ற வளர்ச்சியையும் அவர்களின் கற்றல் பற்றிய தகவல்களையும் கண்டறிவதற்கு அவர்களை முறையாக உற்றுக் கவனித்து விவரங்களைச் சேகரித்து ஆவணப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் வளர்ச்சி, கற்றல் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கான முறையைத் தேர்ந்தெடுக்கும்போது ஆசிரியர் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| **உற்றுநோக்குதலுக்கான நோக்கம்** | • எனக்கு ஏன் இந்தத் தகவல் தேவை?<br>• இந்தத் தகவலை நான் எவ்வாறு பயன்படுத்துவேன்?<br>• இந்தத் தகவலை நான் யாருடன் பகிர்ந்துகொள்வேன்? |
| **எத்தகைய தகவல்களைச் சேகரிக்க வேண்டும்** | • இந்த நோக்கத்திற்காக, எவ்வகையான தகவல்களை நான் சேகரிக்க வேண்டும்?<br>• சேகரிக்கப்பட்ட தகவல்கள் எவ்வாறு பயன்தரும்? |
| **சான்று** | • எத்தகைய சான்றுகளின்வழி நான் அர்த்தமுள்ள, ஏற்புடைய தகவல்களைத் திரட்டுவது?<br>• தகவல்களைத் திரட்டுவதற்கான சிறந்த சான்றுகளை நான் எவ்வாறு அடையாளங்காண்பது? |

பிள்ளைகள் கற்றலில் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிய சான்றுகளை ஆசிரியர் பின்வரும் வழிகளில் சேகரிக்கலாம்.

### *நிகழ்வுப்பதிவுகளை எழுதுதல்*

பிள்ளைகள் தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர்கள் செய்வதையும் சொல்வதையும் நிகழ்வுப்பதிவுகளாக எழுதி ஆவணப்படுத்திக்கொள்ளலாம். தாய்மொழி கற்றலில் பிள்ளைகள் அடைய வேண்டிய அறிவாற்றலையும் திறன்களையும் பட்டியலாகத் தயாரித்து, அதனைக்கொண்டு ஆண்டு முழுவதும் பிள்ளைகள் அடைந்துள்ள வளர்ச்சியைக் கண்காணிக்கலாம்; குறிப்புகள் எடுக்கலாம். சேகரித்த குறிப்புகளைப் பிள்ளைகளுடைய செயல்திறன் கோப்பில் சேர்த்துக்கொண்டு பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பின்போது முறையாகப் பகிர்ந்துகொள்ளலாம்.

### *பிள்ளைகள் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது நிழற்படங்கள் எடுத்தல்*

கற்றல் அனுபவங்களின்போது நடைபெறும் நிகழ்வுகளை ஆவணப்படுத்த நிழற்படங்கள் பயன்படும். கற்றல் சூழலையும் கற்றல் நோக்கத்தையும் எழுதியவுடன் நிழற்படங்களை இணைக்க வேண்டும். பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டைக் காண்பிப்பதற்காக நிழற்படம் எடுக்க ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### பிள்ளைகள் உருவாக்கிய படைப்புகளின் மாதிரிகளைச் சேகரித்தல்

பிள்ளை அடையும் அறிவாற்றலையும் திறன்களையும் அவற்றைப் பெறுவதில் காட்டும் முனைப்பையும் முன்னேற்றத்தையும் ஆவணப்படுத்துதல் வேண்டும். அதனுடன் அவற்றைப் பிரதிபலிக்கும் படைப்புகளையும் சேர்த்து மாதிரிகளாகப் பிள்ளைகளின் செயல்திறன் கோப்பில் சேமித்து வைக்கலாம். எளிய சொற்கள் இடம்பெற்றுள்ள பிறந்தநாள் வாழ்த்து அட்டைகள், சுவரொட்டிகள் போன்றவை அவற்றுள் அடங்கும். சேகரிக்கப்படும் மாதிரிப் படைப்பில் அதன் பின்னணிச் சூழலை விளக்கும் ஆசிரியரின் குறிப்பும் இடம்பெற்றிருக்க வேண்டும். அத்துடன், பிள்ளை கைவரப்பெற்ற அறிவாற்றலோ திறனோ முன்னிலைப்படுத்திக் காட்டப்படுதல் வேண்டும் அல்லது அதனைப் பெறுவதில் பிள்ளை காட்டிய முனைப்பு, குறிப்பிடப்படுதல் வேண்டும்.

### தங்களின் கற்றலைப் பற்றிய கருத்துத்தெரிவிப்பைப் பிள்ளைகளிடமிருந்து பெறுதல்

பிள்ளைகள் தங்களைப்பற்றியும் தங்களின் சகவயதினரைப்பற்றியும் அறிந்துகொண்டவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்து கூறச்செய்ய வேண்டும். இது பிள்ளைகளின் கற்றலையும் அதனால் அவர்கள் அடைந்துள்ள கற்றல் மேம்பாடுபற்றியும் அறிய மற்றொரு வாய்ப்பை ஆசிரியர்களுக்கு வழங்கும்.

### பிள்ளையின் குடும்பத்தாரிடமிருந்து தகவல்களைத் திரட்டுதல்

பிள்ளையைப் பற்றிய தகவல்களையும் அவருடைய தனித்தன்மை கொண்ட சுயவிவரங்களையும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து அவர்களின் ஒப்புதலோடு பெற்றுக்கொள்ளலாம். இதன்வழிப் பிள்ளையின் தேவைகள், விருப்பங்கள், அவருக்கு இருக்கக்கூடிய சவால்கள் போன்றவற்றை ஆசிரியர் நன்கு புரிந்துகொள்ளலாம். மேலும், குடும்ப உறுப்பினர்களிடம் பேசிப் பெற்றுக்கொண்ட முக்கியத் தகவல்களை ஆசிரியர்கள் குறித்து வைத்துகொள்ள வேண்டும். இவை மொழிப்பாடக் கலைத்திட்டத்தைத் திட்டமிடவும் பொருத்தமான பாடத்தை நடத்தவும் பெரிதும் உறுதுணையாக அமையும்.

### தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்களின் பயன்பாடு

பாலர் பள்ளியில் பிள்ளைகள் ஈடுபடும் நடவடிக்கைகளையும் கற்றலில் அவர்கள் அடைந்துள்ள மேம்பாட்டையும் ஆவணப்படுத்துவதற்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளங்கள் பெரிதும் துணைபுரியும். இவற்றைப் பயன்படுத்திப் பெற்றோரிடமும்

குடும்பத்தாரிடமும் பிள்ளைகளின் வளர்ச்சிநிலைபற்றிக் கலந்துரையாடலாம். எடுத்துக்காட்டாக, ஒலி, ஒளிப்பதிவுகளின்வழிப் பிள்ளைகள் வகுப்பினருடன் எவ்வாறு பழகுகிறார்கள், மொழியை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பனவற்றை ஆவணப்படுத்தலாம். இவற்றுடன் நிழற்படங்கள், நிகழ்வுப்பதிவுகள் முதலியவற்றை இணைத்துச் செயல்திறன் மின்கோப்பாக உருவாக்கிப் பிள்ளைகளின் குடும்பத்தாரோடும் பங்குதாரர்களோடும் பகிர்ந்துகொள்ளலாம்.

## 2. விவரங்களின் கூடுதல் விளக்கத்தைக் கண்டறிந்து பிள்ளைகளை மதிப்பிடுதல்

ஆசிரியர்கள் சேகரித்து ஆவணப்படுத்திய தகவல்களை அர்த்தமுள்ள விளக்கங்களை அளிப்பதற்கும் பிள்ளையின் கற்றலை மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தலாம். பிள்ளைகளின் ஒட்டுமொத்த முன்னேற்றம் குறித்துக் கருத்தாக்க விளக்கம் பெற, ஆசிரியர்கள் பின்வரும் வினாக்களைக் கேட்டுக்கொள்ளலாம்:

- பல்வேறு கற்றல் பகுதிகளில் பிள்ளையின் கற்றல், முன்னேற்றம் ஆகியவற்றைப்பற்றிப் போதிய விவரங்கள் இருக்கின்றனவா?
- தகவல்கள் பிள்ளையின் தொடர்ச்சியான வெற்றியையும் அவருக்கு ஏற்பட்ட சிரமங்களையும் காட்டுகின்றனவா?
- பிள்ளையின் வளர்ச்சிக்கான பண்புகள் (Developmental characteristics) கருத்திற்கொள்ளப்பட்டனவா?
- பிள்ளையின் சமூக, பண்பாட்டுச் சூழல் அவருடைய கற்றலிலும் வளர்ச்சியிலும் எம்மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?
- பிள்ளையை நியாயமான முறையில் மதிப்பீடு செய்வதற்குப் பற்பல மூலங்களிலிருந்து (பிள்ளை, அவரின் சக வயதினர், குடும்பத்தினர், மற்ற நிபுணர்கள், பிள்ளையின் படைப்பு) சான்றுகள் இருக்கின்றனவா?
- பிள்ளையின் கற்றலையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் தொடர் நடவடிக்கைகள் யாவை?

## 3. விவரங்களைத் தொகுத்துக் கோப்பில் முறையாக வைத்தல்

பிள்ளைகள் அடைந்துள்ள முன்னேற்றத்தைச் சுய எண்ணப் பிரதிபலிப்புச் செய்வதற்கு ஏதுவாக ஆசிரியர்கள் சேகரிக்கப்பட்ட விவரங்களைத் தொகுத்து முறையாகக் கோப்புகளில் வைக்க வேண்டும். இக்கோப்பிலுள்ள சான்றுகள் முறையாகத் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் பிள்ளைகள் நடவடிக்கையில் ஈடுபட்டபோது

எடுக்கப்பட்ட நிழற்படங்கள், நிகழ்வுப்பதிவுகள், சிறுதகவல் குறிப்புகள், ஒலி/ஒளிப்பதிவுகள், பிள்ளைகள் செய்த கைவினைப் பொருள்கள் ஆகியவை இருக்கலாம். இந்தத் தொகுப்பைத் தற்போது இருக்கும் வளங்கள், குறிக்கோள்கள், திரட்டப்பட்ட மாதிரி வகைகள், பெற்றோரின் தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல ஏட்டுக்கோப்பாகவோ மின்கோப்பாகவோ அமைத்துக்கொள்ளலாம்.

## 4. விவரங்களைக் குடும்பத்தாருடன் பகிர்ந்துகொள்ளுதல்

பிள்ளையின் கற்றலையும் வளர்ச்சியையும் குடும்பத்தாருடன் பகிர்ந்துகொள்வதில் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்:

- முழுமையான வளர்ச்சியை வெளிப்படுத்தும் சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், விழுமியங்கள், அறிவாற்றல், திறன்கள், கற்றல் இயல்புகள் ஆகியவற்றில் பிள்ளை அடைந்துள்ள வளர்ச்சியைச் சான்றுகளோடு காட்டுதல்
- பிள்ளையின் கற்றலையும் அவர்தம் வளர்ச்சியையும் சான்றுகளோடு முன்னிலைப்படுத்திக் காட்டுதல்
- ஆசிரியர் பிள்ளையிடம் எதிர்பார்ப்பதையும் பிள்ளை அடைய வேண்டிய இலக்குகளையும் பிள்ளையின் கற்றலுக்கு மேலும் வலுவூட்டக் குடும்பத்தார் வீட்டில் எவ்வகையில் உதவலாம் என்பதையும் பிள்ளையின் கற்றலை விரிவுபடுத்தப் பாலர் பள்ளி மேற்கொள்ளப்போகும் தொடர் நடவடிக்கையைப்பற்றியும் எடுத்துரைத்தல்
- குடும்பத்தார் தம் பிள்ளையைப்பற்றிக் குறிப்பிடும் அக்கறைக்குரிய கூறுகளையும் கருத்திற்கொள்ளுதல்

## 5. மறு ஆய்வு செய்தலும் புதிய கற்றல் நடவடிக்கைகளை உருவாக்குதலும்

பிள்ளைகளின் கற்றல், வளர்ச்சி பற்றிய தகவல்களைக் குடும்பத்தாருடன் பகிர்ந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல் மொழிப்பாடக் கலைத்திட்டத்தைத் திட்டமிடுவதற்கும் கற்பித்தலை மேம்படுத்துவதற்கும் ஆசிரியர்கள் செயல்திறன் கோப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பிள்ளைகளின் கற்றல் வளர்ச்சி குறித்துத் தாம் உற்றுநோக்கியவற்றையும் புரிந்துகொண்டவற்றையும் அடிப்படையாகக்கொண்டு ஆசிரியர்கள் கற்றல் நடவடிக்கைகள், கற்பித்தல் உத்திகள் ஆகியவற்றின் பயன்பாட்டை மதிப்பீடு செய்ய வேண்டும். அதையொட்டி நடப்பிலிருக்கும் மொழிப்பாடக் கலைத்திட்டத்தைச் சீரமைத்தும் புதிய கற்றல் நடவடிக்கைகளை உருவாக்கியும் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

## எடுத்துக்காட்டு: பிள்ளைகளின் கற்றலையும் வளர்ச்சியையும் ஆவணப்படுத்துதல்

**சூழல்:**

பழக்கலவை செய்வதற்குத் தேவையான பொருள்கள் (ஆப்பிள் துண்டுகள், பப்பாளித் துண்டுகள், ஆரஞ்சுச்சுளைகள், திராட்சை, தயிர், இடுக்கி, கரண்டி, குவளைகள்) வழங்கப்பட்டன. பிள்ளைகள் தங்களுக்கு விருப்பமான பழங்களை இடுக்கியால் குவளைகளுக்குள் எடுத்துப் போட்டார்கள். பிறகு, அவர்கள் கொஞ்சம் தயிரை அவற்றுடன் சேர்த்துக் கலந்தார்கள்.

**ஆசிரியரின் உற்றுநோக்கல் குறிப்பு:**

மாறன் பழக்கலவையைத் தயாரிக்கத் தனது முறைக்காகக் காத்திருந்தான். அவன் எந்தெந்தப் பழங்களை எடுப்பது என்பதைத் தீர்மானிக்க நீண்ட நேரமானது. இறுதியில், அவன் தன்னுடைய நண்பர்கள் எடுத்த பழங்களையே எடுத்தான். அவன் இடுக்கியால் பழங்களை எடுக்கத் தடுமாறினான். அவன் தயிரைக் கரண்டியால் எடுக்கும்போது, அது கீழே சிந்திவிட்டது. அதனால், அவன் வருத்தமடைந்தான்.

**பிள்ளையின் கற்றலையும் வளர்ச்சியையும் பற்றிய விளக்கமும் மதிப்பீடும்:**

மாறன் வெட்டி வைத்த பழங்களை எடுக்கத் தனது முறைக்காகக் காத்திருந்தான். அவன் தானாக முடிவெடுக்கத் தயக்கம் காட்டினான்; நண்பர்கள் செய்ததைப் பின்தொடரும் போக்கு அவனிடம் வெளிப்பட்டது. அவனுடைய தசைநார் இயக்கத்திறனை மேம்படுத்த வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும் (எ-டு: எளிய கருவிகளை முறையாகக் கையாள அனுமதித்தல்).

**தொடர் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்:**

- கற்றல் நிலைய நடவடிக்கையின்போது மாறன் தசைநார் இயக்கப் பணிகளில் ஈடுபட வாய்ப்பளிக்க வேண்டும். (எ-டு: கரண்டியால் பொருள்களை ஒரு குவளையிலிருந்து இன்னொரு குவளையில் போடுதல்)
- மாறன் தன்னம்பிக்கையுடன் தெரிவுகளைச் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். (எ-டு: கலைப்படைப்பை உருவாக்கப் பொருள்களைத் தேர்ந்தெடுத்தல், எதை, யாருடன் விளையாடுவது என்பதை முடிவெடுத்தல்)
- குழு வேலையின்போது மாறன் தனது முறைக்காகக் காத்திருந்ததால் அவனைப் பாராட்ட வேண்டும்.







பிள்ளைகளின் தசைநார் இயக்கத்திறன் வளர்ச்சியை உற்றுநோக்குதல்

பொருளடக்கப் பக்கத்திற்குச் செல்லவும்

# இயல் 5

## துடிப்புமிக்க தாய்மொழி கற்றல் சமூகத்தை உருவாக்குதல்

# துடிப்புமிக்க தாய்மொழி கற்றல் சமூகத்தை உருவாக்குதல்

பாலர் பள்ளியிலும் சமூகத்திலும் தாய்மொழியின் பயன்பாட்டை அதிகரிப்பதாலும் அதன் முக்கியத்துவத்தைப் போற்றிக் காப்பதாலும் பிள்ளைகள் துடிப்புடன் தாய்மொழியைக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கலாம். இத்தகைய சூழலை நிறுவி நிலைபெறச் செய்வதற்கு நீண்ட காலமாகலாம். இருப்பினும் அரியமுயற்சியுடன் இதனைச் செயற்படுத்தினால் பிள்ளைகள் தாய்மொழியைக் கற்றுக்கொள்வதற்கு இத்தகைய சூழல் உறுதுணையாய் அமையும். தாய்மொழியைத் துடிப்போடு கற்கும் சமூகத்தை உருவாக்குவதில் தாய்மொழி ஆசிரியர்களுக்குப் பெரும் பங்குண்டு.

# ஆசிரியர்கள் தங்களின் பணி குறித்துச் சுய எண்ணப் பிரதிபலிப்பில் ஈடுபடுதல்

பிள்ளைகளுக்கு உகந்த கற்றல் சூழல்களை ஏற்படுத்தித் தருவதற்கான அறிவாற்றல், திறன்கள், இயல்புகள் ஆசிரியர்களுக்கு அவசியம் இருக்க வேண்டும். விரைவாக மாறிவரும் உலகப் போக்கிற்கு உகந்தவர்களாகவும் புதிய கல்விப் போக்குகளை அறிந்தவர்களாகவும் தாய்மொழி ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும். அதற்காகத் தொடர்ந்து கற்றுக்கொள்வதுடன் பணித்திறன் சார்ந்த நுண்திற அறிவாற்றலையும் அவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், ஆசிரியர்கள் தங்களின் பணியைச் சுய எண்ணப் பிரதிபலிப்பு (Self-reflection) செய்வதாலும் பணித்திறன் சார்ந்த கற்றல் தொடர்ந்து நிகழும்.

### அ. எண்ணப் பிரதிபலிப்பு நடவடிக்கையில் ஈடுபடுதல் (Engaging in Reflective Practice)

ஆசிரியர்கள் எண்ணப் பிரதிபலிப்பு வாயிலாகத் தங்களின் நம்பிக்கைகள், குறிக்கோள்கள், கற்பித்தல் ஆகியவற்றை ஆராய்கிறார்கள். இதனால், பிள்ளைகளின் கற்றலை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைப்பற்றி அவர்களுக்கு நல்ல புரிந்துணர்வு ஏற்படுகிறது. இந்தப் புரிந்துணர்வுடன் அவர்கள் செயற்படும்போது பிள்ளைகளின் கற்றல் மேம்படுகிறது (யோர்-பார், சோமர்ஸ், கியர் & மொண்டி, 2006).


ஆசிரியர்கள் தங்களின் பணியையொட்டி எண்ணப் பிரதிபலிப்புச் செய்வதால் ஏற்படும் விளைவுகள்:

- தங்களின் கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வாறு பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்துகின்றன என்பதை நன்கு புரிந்துகொண்டு அவற்றிற்கேற்பச் செயற்படுவார்கள்.
- பிள்ளைகள் எத்தகையவர்கள், எவ்வாறு கற்றுக்கொள்வார்கள், தாங்கள் கற்பிப்பதைப் பிள்ளைகள் எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பன பற்றிய தங்களின் நம்பிக்கைகளை ஆசிரியர்கள் அறிந்துகொள்வார்கள். இந்த விழிப்புணர்வு அவர்களின் கற்பித்தல் பணியை மேம்படுத்துவதற்கு உதவும்.
- கற்றல் கற்பித்தலைப் பற்றிய தம்முடைய நம்பிக்கையை உறுதிசெய்துகொள்வார்கள் அல்லது மாற்றிக்கொள்வார்கள். இதனால், பிள்ளைகளின் கற்றலைப் பற்றிய செறிவான புரிந்துணர்வு ஏற்படும்.
- ஆசிரியர்கள் தங்களின் பணித்திறன் சார்ந்த பண்புகளை வளர்த்துக்கொள்வதுடன் வாழ்நாள் கற்றலிலும் ஈடுபடுவார்கள்.



பாடத்தையொட்டி எண்ணப் பிரதிபலிப்புச் செய்யக் கீழ்க்காணும் வினாக்களை வழிகாட்டியாகக்கொள்ளலாம்.

### எண்ணப் பிரதிபலிப்பு செய்வதற்குரிய வினாக்கள்




(தழுவல்: ரோல்ஃப், ஃபிரஷ்வாட்டர் & ஜேஸ்பர், 2001)

### ஆ. ஆசிரியர்கள் பணித்திறன் சார்ந்த கற்றலில் ஈடுபடுதல் (Engaging in Professional Learning)

பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்துவதற்காக ஆசிரியர்கள் ஒன்றுகூடித் தத்தம் யோசனைகளையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்வதே பணித்திறன் சார்ந்த கற்றல் ஆகும். ஆசிரியர்கள் பணித்திறன் மேம்பாட்டுக்கென நேரத்தை ஒதுக்குவதோடு அதைத் தங்களின் கற்றல் சமூகத்தோடு பயனுள்ள வழியில் கழிக்கவும் வேண்டும். பயனுள்ள பணித்திறன் சார்ந்த கற்றல், ஆசிரியர்களுக்கு ஏற்படும் பணிதொடர்புடைய சவால்களைக் களைவதற்கு உதவும்வண்ணம் அர்த்தமுள்ளதாகவும் ஈடுபாடுமிக்கதாகவும் அமைதல் வேண்டும்.

# பணித்திறன் சார்ந்த கற்றல் சமூகம்

பணித்திறன் சார்ந்த கற்றல் பல்வகைப்படும். பயிலரங்குகள், மாநாடுகள், கலந்தாய்வரங்கங்கள் ஆகியவற்றில் கலந்துகொள்வதோடு பணித்திறன் சார்ந்த பகிர்வுகள், ஆசிரியருக்குரிய பணி இணைப்புத்திட்டம் (Teacher Work Attachment), சக ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளைக் கவனித்தறிதல், மதியுரைத்தல் (Mentoring) ஆகியவற்றின்மூலமும் பள்ளிசார் ஆய்வுகள் செய்வதன் வாயிலாகவும் பணித்திறன் சார்ந்த நுண்திறத்தை ஆசிரியர்கள் வளர்த்துக்கொள்ளலாம். இத்தகைய கற்றல் சமூகத்தைத் தாம் பணியாற்றும் பாலர் பள்ளியிலும் மற்றப் பாலர் பள்ளிகளுக்கு இடையிலும் உருவாக்கலாம். மேலும், ஒரே பள்ளியில் பணிபுரியும் ஆங்கிலமொழி ஆசிரியர்களும் தாய்மொழி ஆசிரியர்களும் இணைந்தும் இதனை உருவாக்கலாம். ஆசிரியர்கள் நேரக் கட்டுப்பாடுகளையும் இடக்கட்டுப்பாடுகளையும் சமாளிக்கத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் தளங்களையும் வளங்களையும் பயன்படுத்தி ஆசிரியர்களுக்கிடையே கற்றல் சமூகங்களையும் உருவாக்கிப் பயன்பெறலாம்.



ஆசிரியர்கள் தமது பணித்திறன் சார்ந்த கலந்துரையாடலில் ஈடுபடுதல்

# ஆசிரியர்கள் பங்காளிகளுடன் உடனிணைந்து செயலாற்றுதல்

பாலர் பள்ளிகள், எல்லாப் பிள்ளைகளையும் பேணிவளர்த்துத் தரமான கல்வியைக் கடும் உழைப்போடு வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன. இருப்பினும், இந்த நோக்கத்தைத் தனியாகச் செயற்படுத்த இயலாது. குடும்பம், தொடக்கப்பள்ளி, சமூகம் ஆகியவற்றுடன் பாலர் பள்ளி கொண்டுள்ள நல்லுறவு, தரமான இளம்பருவக் கல்விக்கு உறுதுணையாக அமையும்.

## அ. பிள்ளைகளின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கக் குடும்பங்களுடன் செயலாற்றுதல் (Partnering Families to Support Children's Learning and Development)

பிள்ளைகளின் கற்றலுக்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் ஆதரவளிப்பதில் வீட்டுச்சூழல் முக்கியப் பங்காற்றுகிறது என்பதை ஆய்வுகள் சுட்டுகின்றன. பெற்றோருக்கும் ஆசிரியருக்குமிடையே உள்ள தொடர்பு, பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டுக்கு வழிவகுக்கிறது.

ஆசிரியர், பாலர் பள்ளியில் நிகழும் கற்றலைப்பற்றிக் குடும்பத்தாரிடம் தெரிவிப்பதால் குடும்பத்தாரால் வீட்டிலும் பிள்ளைகளின் கற்றலுக்குத் தகுந்த ஆதரவு அளிக்க முடியும். அதனைப்போல வீட்டில் பிள்ளைகள் எவற்றில் ஆர்வம் காட்டுகிறார்கள், அவர்களுக்கு வீட்டில் ஏற்படும் அனுபவங்கள் யாவை, என்பனபற்றிக் குடும்பத்தார் ஆசிரியரிடம் தெரிவிப்பதும் அவசியமாகும்.




பெற்றோர் – ஆசிரியர் சந்திப்பு

## தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதலும் பெறுதலும்

பிள்ளைகளின் வீட்டுச் சூழலையும் அவர்களின் தேவைகளையும் ஆசிரியர்கள் புரிந்துகொள்வதோடு குடும்பத்தாரிடம் பாலர் பள்ளியின் பாடக்கலைத்திட்டம், நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள், ஆசிரியர்களின் பணியிட மாற்றம் (Staff movement) முதலான விவரங்களை அவ்வப்போது தெரிவிக்க வேண்டும். குடும்பங்களுடன் தொடர்புகொள்ளும்போது ஆசிரியர்கள் குடும்பத்தார் கூறும் கருத்துகளையும் தவகல்களையும் கூர்ந்து கேட்டுக் கருத்திற்கொள்ள வேண்டும்.

## பாலர் பள்ளியில் நிகழும் கற்றலையும் வீட்டில் நிகழும் கற்றலையும் தொடர்புபடுத்துதல்

பிள்ளைகளின் விருப்பங்கள், திறமைகள், இயல்புகள் ஆகியவற்றை அவர்களின் குடும்பத்தாரிடமிருந்து ஆசிரியர்கள் தெரிந்துகொள்வதால் ஆசிரியர் ஈடுபாடு மிகுந்த பொருத்தமான கற்றல் அனுபவங்களைத் திட்டமிட இயலும். இதனால், பிள்ளைகள் தங்கள் கற்றலையும் அனுபவங்களையும் இணைத்துக் காண முடியும்.



பெற்றோர் பிள்ளைக்குக் கதை சொல்லுதல்

## பாலர் பள்ளியுடன் இணைந்து பெற்றோர் செயலாற்றுதல்

பின்வரும் வழிகளில் குடும்பத்தார் தங்கள் பிள்ளைகளின் பாலர் பள்ளி நடவடிக்கைகளில் இணைந்து பங்களிக்கலாம்:

- குடும்பத்தார் தங்களது நுண்திற அறிவாற்றலைப் பகிர்ந்துகொள்ளுதல் (கைவினைப் பொருளைச் செய்தல், கதை சொல்லுதல், விளையாட்டு / நாடகம் / இசை நடவடிக்கை போன்றவற்றில் உதவுதல் அல்லது சேர்ந்து ஈடுபடுதல்)
- பாலர் பள்ளியின் நிகழ்ச்சிகளில் பங்கேற்றல் (பிள்ளைகளோடு கற்றல் பயணத்திற்குச் செல்லுதல், நிதி திரட்டும் திட்டங்களில் உதவுதல்)
- கற்றல் நிலையங்களை அமைப்பதற்கான வளங்களை வழங்குதல் (தோட்டம் அமைப்பதற்குச் செடிகள், கருவிகள் வழங்குதல், வெளிப்புற விளையாட்டுப் பகுதியை அமைப்பதற்கான பொருள்களை வழங்குதல், நாடக மேடையை வடிவமைப்பதற்கான பொருள்களை வழங்குதல்)
- குடும்பப் பண்பாடு, மரபுகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல்
- தாய்மொழி கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான வளங்களை உருவாக்க உதவுதல்
- பெற்றோர் / குடும்ப ஆதரவுக் குழுவை உருவாக்குதல்

## குடும்பத்தாரின் உதவியுடன் பிள்ளைகள் வீட்டில் மேற்கொள்ளும் நடவடிக்கை

குடும்பத்தாரோடு தாய்மொழியில் கலந்துரையாடி மகிழ்வூட்டும் நடவடிக்கையில் ஈடுபடும்போது நடைமுறைக்கு ஏற்ற சூழலில் மொழியைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பிள்ளைகள் பெறுகின்றனர். இதனால், தாய்மொழியை வகுப்பறைக்கு அப்பால் பயன்படுத்தும் அனுபவத்தை அவர்கள் பெறுகின்றனர். விளையாட்டு, கண்டறிதல் முதலான நடவடிக்கைகளின்வழியே வீட்டில் பிள்ளையின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் குடும்பத்தார் ஆதரவு அளிக்கலாம். இத்தகைய நடவடிக்கைகள் கருத்துப்பரிமாற்றத்தையும் குடும்பப் பிணைப்பையும் ஊக்குவிக்கின்றன.

## நடவடிக்கைக்கான குறிப்பு:

**'வடிவ வேட்டை' நடவடிக்கை**

உங்கள் பிள்ளையிடம் வடிவம் ஒன்றை அறிமுகம் செய்யுங்கள் (எ-டு: முக்கோணம், சதுரம், வட்டம், நீள்சதுரம்). பிறகு, வீட்டினுள் இந்த வடிவத்திலுள்ள பொருள்களைச் சுட்டிக்காட்டச் சொல்லுங்கள் அல்லது பிள்ளையை அருகிலுள்ள பூங்காவிற்கு அழைத்துச் சென்று அந்த வடிவத்திலுள்ள பொருள்களைச் சுட்டிக்காட்டச் சொல்லுங்கள். பிள்ளை வடிவத்தைச் சுட்டிக்காட்டியவுடன் அதனை எவ்வாறு அடையாளம் கண்டார் என்பதை விளக்கச் சொல்லுங்கள். (எ-டு: முக்கோணத்திற்கு மூன்று நேர்க்கோடுகளும் மூன்று கூர்மையான மூலைகளும் உள்ளன). மேலும், நீங்கள் வித்தியாசமான வடிவங்கள் சிலவற்றையும் பிள்ளைக்கு அறிமுகம் செய்து விளையாட்டைத் தொடரலாம் (எ-டு: நட்சத்திர வடிவம், வைர வடிவம், அரைவட்டம்). பிள்ளையின் புரிந்துணர்வை மேலும் வலுப்படுத்த வடிவங்களை வரையச் சொல்லுங்கள். பின்னர், அவற்றைக் கத்தரித்து, ஒரு தாளில் ஒட்டி அழகிய படம் ஒன்றை உருவாக்கச் சொல்லுங்கள். அப்படத்தைப்பற்றி அவருடன் கலந்துரையாடுங்கள்.

## பிள்ளைகள் தாய்மொழியைக் கற்பதற்காகக் குடும்பத்தார் தரக்கூடிய ஆதரவு

| | |
|---|---|
| அன்றாட நடவடிக்கைகளில் தாய்மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல் | • இயன்ற அளவு வீட்டில் தாய்மொழியில் பேச முயல வேண்டும். பிள்ளையிடம் தங்களுடைய அனுபவங்களையும் எண்ணங்களையும் தாய்மொழியில் எடுத்துக் கூற ஊக்கமளிக்கலாம்.<br>• பிள்ளையின் கவனத்தை எது ஈர்க்கிறது என்பதைக் கவனித்து அதையொட்டி அவருடன் தாய்மொழியில் உரையாடலாம்.<br>• பிள்ளை தாய்மொழியில் படிக்கும் அல்லது கேட்கும் கதைகளைப்பற்றிப் பேசலாம் (எ-டு: கதாபாத்திரங்கள், கதையின் முடிவுபற்றிக் கலந்துரையாடலாம்).<br>• தாய்மொழியில் உரையாடச் சிரமப்படும் பெற்றோர், பிள்ளைகளிடம் தாய்மொழிச் சொற்களையும் சொற்றொடர்களையும் தமக்குக் கற்றுக்கொடுக்கச் சொல்லலாம். தாய்மொழியைக் கற்க வேண்டும் என்னும் பெற்றோரின் ஆர்வம் பிள்ளையை ஊக்கப்படுத்தும்.<br>• தமிழ் பேசும் நண்பர்கள், உறவினர்கள் முதலியோரை வீட்டுக்கு அடிக்கடி வரவழைத்துப் பிள்ளையை அவர்களோடு உரையாடச் செய்யலாம். |
| தாய்மொழியில் நடத்தப்படும் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுதல் | • தாய்மொழியில் இடம்பெறும் சிறுவர் நிகழ்ச்சிகளையோ ஒளிக்காட்சிகளையோ பிள்ளையுடன் சேர்ந்து பார்க்கலாம். பிறகு, அந்தக் கதையை மறுபடியும் கூறவோ நடித்துக்காட்டவோ பிள்ளையை ஊக்கப்படுத்தலாம்.<br>• விளையாட்டுகள், மகிழ்வூட்டும் நடவடிக்கைகள் வாயிலாக உற்சாகமூட்டும் வகையில் தாய்மொழியைப் பயன்படுத்தப் பிள்ளையை ஊக்குவிக்கலாம்.<br>• உங்கள் குடியிருப்பு வட்டாரத்தில் நடைபெறும் சமூகக் கொண்டாட்டங்கள் / பண்பாட்டு நடவடிக்கைகளில் கலந்துகொண்டு, தாய்மொழிச் சொற்களை அறிந்துகொள்ளப் பிள்ளைக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம். அத்துடன் இலையுதிர்காலப் பண்டிகை, நோன்புப் பெருநாள், பொங்கல் முதலான பண்பாட்டு நிகழ்வுகளைப் பற்றிய விழிப்புணர்வையும் அவர்களுக்கு ஏற்படுத்தலாம்.<br>• பெற்றோர் மெய்ந்நிகர் வாயிலாக மற்றப் பெற்றோர் ஆதரவுக் குழுக்களுடன் இணைந்து தம் பிள்ளையின் தாய்மொழி கற்றலை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைப்பற்றி ஆலோசிக்கலாம். |
| வீட்டில் தாய்மொழி வளங்களைப் பயன்படுத்துதல் | • வீட்டில் தாய்மொழியைக் கேட்கும் வாய்ப்பை ஏற்படுத்தலாம். (எ-டு: திரைப்படங்கள் / தொடர் நாடகங்கள் பார்த்தல், வானொலி கேட்டல்)<br>• பிள்ளையுடன் நூலகத்திற்குச் சென்று தாய்மொழிப் புத்தகங்களை இரவல் பெற்று அவற்றைப் பிள்ளையுடன் சேர்ந்து படிக்கலாம்.<br>• ஒலிப்பதிவு செய்யப்பட்ட கதைப்புத்தகங்களை இரவல் பெற்று, கதையைக் கேட்டுக்கொண்டே பிள்ளையுடன் சேர்ந்து புத்தகத்தை ஒவ்வொரு பக்கமாகத் திருப்பி வாசிக்கலாம். |

## ஆ. பிள்ளைகளின் கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கச் சமூகத்துடன் செயலாற்றுதல் (Engaging the Community to Support Children's Learning and Development)

வீடு, பள்ளி ஆகியவற்றிற்கு அப்பாலும் பிள்ளைகளின் கற்றலை விரிவுபடுத்துதல் அவசியமாகும். இதற்குச் சமூகத்தினருடன் பள்ளியும் குடும்பத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். வீட்டுக்கும் பள்ளிக்குமிடையே உள்ள கூட்டுறவைச் சமூகத்துடனான தொடர்புகளால் மேலும் செறிவடையச் செய்யலாம். இதன்வழியே பிள்ளைகள் வகுப்பறைக்கு அப்பாலும் தாய்மொழியைத் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரமுடியும்.

சமூகம் சார்ந்த நிகழ்வுகள் பெரும்பாலும், பிள்ளைகள் தங்களின் அறிவாற்றலை ஏற்படுத்திக்கொள்வதற்கும், புதிய திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும் அவற்றை அர்த்தமுள்ள, நடைமுறை சார்ந்த சூழலில் பயன்படுத்துவதற்கும் வழிவகுக்கின்றன.

### பாலர் பள்ளிகள் சமூகப் பங்காளர்களுடன் உடனிணைந்து செயலாற்றுவதற்குரிய வழிகள்:

- வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் அனுபவங்களை மேம்படுத்தச் சமூகப் பங்காளர்கள் உருவாக்கிய கல்விசார்ந்த வளங்களைப் பயன்படுத்துதல் (எ-டு: தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் ஆதரவிலும் இருமொழிக் கல்விக்கான லீ குவான் இயூ நிதி ஆதரவிலும் உருவாக்கப்பட்ட பயிற்றுவளங்கள், இன்ன பிற)
- பிள்ளைகளை நிறுவனங்களுக்கோ அமைப்புகளுக்கோ அழைத்துச் சென்று, அவற்றின் சேவைகளையும் அவை சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பையும் பிள்ளைகள் புரிந்துகொள்ள உதவுதல் (எ-டு: சிண்டா, தேசிய நூலக வாரியம், இன்ன பிற)
- சமூகப் பங்காளர்கள் நடத்தும் கல்வி சார்ந்த நிகழ்வுகளில் பிள்ளைகளைப் பங்கெடுக்கச் செய்தல் (எ-டு: மரபுடைமை நிலையங்கள், விலங்குத் தோட்டம், இன்ன பிற)
- நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து திறமை வாய்ந்த பொருத்தமான சமூகத்தினரை வகுப்பறைகளுக்கு முறைப்படி வரவழைத்து அவர்களின் திறன்களைப் பகிர்ந்துகொள்ளச் செய்தல் (எ-டு: தாதியர்கள், காவலர்கள், தீயணைப்புப் படையினர், இன்னும் பிறர்)
- நம் பல்லினப் பண்பாட்டை வளர்க்க உதவும் அமைப்புகள் (எ-டு: சமூக நிலையங்கள், மன்றங்கள், தேசிய நூலக வாரியம், லிட்டில் இந்தியா வர்த்தகச் சங்கம், இந்திய மரபுடைமைக் கழகம், இன்ன பிற) ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகளில் பங்குபெறுதல் (எ-டு: விழாக்கொண்டாட்டங்கள், பொருத்தமான பண்பாட்டு நிகழ்வுகள், கற்றல் பயணங்கள்)

## குடும்பங்களுடனும் தொடக்கப்பள்ளிகளுடனும் இணைந்து செயற்பட்டுப் பாலர் பள்ளியிலிருந்து தொடக்கப்பள்ளிகளுக்குச் செல்லும் பிள்ளைகள் சீரான நிலைமாற்றம் பெற ஆதரவு அளித்தல்

பாலர் பள்ளிக் கல்வி வாழ்நாள் கற்றலுக்கு அடித்தளமாக அமைவதோடு முறையான பள்ளி வாழ்க்கைக்குரிய மாற்றங்களுக்குப் பிள்ளைகளைத் தயார்செய்கிறது. இந்த மாற்றம் பிள்ளைகளின் பள்ளி வாழ்க்கை அனுபவத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.

**பாலர் பள்ளிக் கல்வியாளர்கள்** பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியில் கவனஞ்செலுத்தித் தொடக்கப்பள்ளியில் பிள்ளைகளுக்கு ஏற்படவிருக்கும் கற்றல் அனுபவங்களுக்கு அவர்களைத் தயார்செய்ய வேண்டும். மேலும், பிள்ளைகளின் மனவுணர்வு சார்ந்த திறன்கள், சுய நிர்வாகத் திறன்கள், உடலியக்கத் திறன்கள், சமூகத் திறன்கள் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் கவனஞ்செலுத்த வேண்டும். பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் தொடக்கப்பள்ளியில் நிகழும் சுவாரசியமான கற்றல் அனுபவங்களைப் பிள்ளைகளிடம் கூற வேண்டும். எடுத்துக்காட்டாகப் புதிய நண்பர்களைச் சந்தித்தல், புதியனவற்றைக் கற்றுக்கொள்ளுதல் போன்றவற்றை முன்னிலைப்படுத்திப் பிள்ளைகளிடம் கூற வேண்டும். இது பிள்ளைகளின் தன்னம்பிக்கையை வளர்க்க உதவும். இத்திறன்கள் தொடக்கநிலை ஒன்றுக்கான பயணத்திற்குப் பிள்ளைகளைத் தயார்படுத்த உதவும்.

**தொடக்கப்பள்ளிக் கல்வியாளர்கள்** பாலர் பள்ளியில் பிள்ளைகள் கற்றுக்கொண்ட அடிப்படைத் திறன்களை மேலும் மேம்படுத்துவதோடு, பிள்ளைகளிடம் காணப்படும் கற்றலுக்குரிய சாதகமான மனப்போக்கையும் இயல்புகளையும் மேலும் வலுப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் பிள்ளைகளின் தொடங்குநிலைகள் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் தொடர்ந்து சிறப்பாகக் கற்க இயலும்.

**பெற்றோர்** தங்களின் பிள்ளை சீரான நிலைமாற்றம் பெற்றுத் தொடக்கப்பள்ளிக்குச் செல்வதற்கு முக்கிய வகையில் பங்காற்றுகிறார்கள். பிள்ளைகளின் அறிவுசார் வளர்ச்சியிலும் அறிவுசாரா வளர்ச்சியிலும் பெற்றோர் சம அளவில் கவனஞ்செலுத்த வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளையிடமுள்ள சாதகமான கற்றல் மனப்போக்கை மேலும் வளர்க்கப் பாலர் பள்ளி ஆசிரியர்களுடனும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுடனும் இணைந்து செயற்பட வேண்டும்.

# நிறைவுரை

சிங்கப்பூரில் வளரும் பிள்ளைகள் ஊக்கத்துடனும் முனைப்புடனும் தமிழ்மொழியைக் கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதில் தமிழாசிரியர்கள் முக்கிய வகையில் பங்காற்றுகிறார்கள். ஆர்வம், ஈடுபாடு, செயல்திறன் ஆகியவற்றைக்கொண்ட நம் பிள்ளைகளுக்குப் போதுமான ஆதரவும் ஊக்கமும் கிடைத்தால் அவர்கள் தமிழ்மொழியை விரும்பி மகிழ்ச்சியோடு கற்றுக்கொள்ள முனைவதோடு மொழியைத் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்தவும் விழைவார்கள். பாலர் பள்ளியில் பயிலும் காலக்கட்டத்தில் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழிமீது விருப்பத்தையும் அதனைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் ஊக்கத்தையும் நம் பல்லினப் பண்பாடுகள்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தையும் ஏற்படுத்துதல் அவசியம். இவற்றை முறையாகச் செயற்படுத்துவதற்கு வழிகாட்டும் வகையில் மொழியறிவுக்கும் படிப்பறிவுக்கும் உரிய கல்வியாளர் வழிகாட்டி அமைந்துள்ளது. பாலர் பள்ளிகள் தங்களின் தமிழ்மொழிப் பாடக் கலைத்திட்டத்தைப் பிள்ளைகளின் தேவைகேற்ப வடிவமைப்பதற்கு இந்த வழிகாட்டி துணைபுரியும். பாலர் பள்ளித் தமிழாசிரியர்கள் இந்த வழிகாட்டியை முறையாகப் பயன்படுத்தி மகிழ்வூட்டும் கற்றலைச் செயற்படுத்துவர் என நம்புகிறோம். தமிழ்மொழியைத் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்துவதோடு நம் பல்லினப் பண்பாடுகளையும் போற்றி மதிக்கும் பிள்ளைகளைப் பேணி உருவாக்க உதவும் தமிழாசிரியர்களின் பங்கு போற்றுதற்குரியது.



பொருளடக்கப் பக்கத்திற்குச் செல்லவும்

# கலைச்சொற்கள்

# துணைநூற்பட்டியல்

# கலைச்சொற்கள்

| தமிழ் | ஆங்கிலம் |
|---|---|
| **முகவுரை** | |
| கல்வியாளர் வழிகாட்டி | Educators' Guide |
| கற்றல் குறிக்கோள்கள் | Learning Goals |
| முக்கிய அறிவாற்றல், திறன்கள், கற்றல் இயல்புகள் | Key Knowledge, Skills and Learning Dispositions |
| **இயல் 1** | |
| பாலர் பள்ளிக் கல்வியின் கற்றல் விளைவுகளின் படிநிலைகள் | Key Stage Outcomes of Pre-School Education |
| மகிழ்வுறு கற்றல் | Joyful Learning |
| இருமொழிக் கல்விக்கொள்கை | Bilingual Education Policy |
| தாய்மொழிக்கான மறு ஆய்வுக் குழு | Mother Tongue Languages Review Committee |
| **இயல் 2** | |
| இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் | Nurturing Early Learners |
| சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள் | Social and Emotional Competencies |
| கருத்திற்கொள்ள வேண்டிய முக்கியக்கூறுகள் | Key Considerations |
| எண்ணப் பிரதிபலிப்பு | Reflectiveness |
| **இயல் 3** | |
| அடிப்படை மொழித்திறன்கள் | Basic Language Skills |
| கருத்தறிதல் | Comprehension |
| இயக்கத்திறன்கள் | Motor Skills |
| கண்-கை ஒருங்கிணைப்பு | Eye-hand Coordination |
| உணர்வுசார் திறன்கள் | Sensory Skills |
| நடைமுறைசார்ந்த கற்றல் | Authentic Learning |

| இயல் 4 | |
|---|---|
| கற்பித்தல் முறைகள் | Teaching Methods |
| ஒருங்கிணைந்த அணுகுமுறை | Integrated Approach |
| அர்த்தமுள்ள தொடர்புகள் | Meaningful Connections |
| கற்றல் அனுபவங்கள் | Learning Experience |
| கற்றல் பகுதிகள் | Learning Areas |
| அர்த்தமுள்ள விளையாட்டு | Purposeful Play |
| அர்த்தமுள்ள விளையாட்டின் தொடர்பம் | The Continuum of Purposeful Play |
| தரமிக்க இருவழிக் கருத்துப்பரிமாற்றம் | Quality Interaction |
| பிள்ளை தாமே முன்னெடுக்கும் விளையாட்டு | Child Initiated Play |
| பிள்ளையும் ஆசிரியரும் இணைந்து முன்னெடுக்கும் விளையாட்டு | Child and Teacher-initiated Play |
| ஆசிரியர் முன்னெடுக்கும் விளையாட்டு | Teacher Initiated Play |
| வெளிப்புறக் கற்றல் | Outdoor Learning |
| ஆய்ந்தறிதல் | Discovery |
| கூடிக்கற்றல் உத்திமுறை அமைப்புகள் | Cooperative Learning Structures |
| சிந்தி-இணை-பகிர் | Think-Pair-Share |
| வரிசை வட்டக் கருத்துப்பரிமாற்றம் | Round Robin |
| எண்களைக் கூறி அழைத்தல் | Numbered Heads Together |
| சேர்-நில்-இணை | Mix-Freeze-Pair |
| வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் | Differentiated Instruction |
| திட்டப்பணி | Project Work |

| இயல் 5 | |
|---|---|
| கருத்துத்தெரிவிப்பு | Feedback |
| செயல்திறன் கோப்பு | Portfolio |
| செயல்திறன் மின்கோப்பு | E-Portfolio |
| மதிப்பீடு | Assessment |
| முழுமையான மதிப்பீடு | Holistic Assessment |
| முழுமையான வளர்ச்சி | Holistic Development |
| உடலியக்கம் | Physical Movement |
| அழகியல் கூறுகள் | Aesthetics |
| நடைமுறைசார்ந்த சூழல் | Authentic Setting |
| நிர்வாகச் செயற்பாடு | Executive Function |
| சுய கட்டுப்பாட்டுத் திறன்கள் | Self-Regulation Skills |
| சமநிலை வளர்ச்சி | Balanced Growth |
| ஆசிரியர் மதிப்பீடு | Teacher Assessment |
| சக மாணவர் மதிப்பீடு | Peer Assessment |
| சுய மதிப்பீடு | Self Assessment |
| உற்றுநோக்குதல் | Observation |
| நிகழ்வுப்பதிவுகள் | Anecdotal Records |
| ஆவணப்படுத்துதல் | Documentation |

| இயல் 6 | |
|---|---|
| கற்றல் சமூகம் | Learning Community |
| கற்றல் சூழல் | Learning Environment |
| பணித்திறன் சார்ந்த அறிவாற்றல் | Professional Knowledge |
| பணித்திறன் சார்ந்த கற்றல் சமூகம் | Professional Learning Community |
| உடனிணைந்து செயலாற்றும் பங்காளிகள் | Collaborative Partners |
| பங்காளித்துவம் | Partnership |
| சமூகப் பங்காளர்கள் | Community Partners |
| நிலைமாற்றம் | Transition |

# துணைநூற்பட்டியல்

Andrea Khalfaoui, R. G. (2020, 2021). A Systematic Review of the Literature on Aspects Affecting Positive Classroom Climate in Multicultural Early Childhood Education. *Early Childhood Education Journal, 49,* 71-81.

Atkinson, A. (2013). *Does dialogic book reading improve overall language skills of preschoolers?* University of Western Ontario: School of Communication and Disorders.

Bair, J. (2001). *Leaders in literacy: Multi-disciplinary literacy research for the twenty-first century*. US: College of Education, University of Maryland.

Best, J. R., Miller, P. H., & Naglieri, J. A. (2011). Relations between executive function and academic achievement from ages 5 to 17 in a large, representative national sample. *Learning Individual Differences, 21,* 327-336.

Bialystok, E., Craik, F.I.M., & Luk, G. (2012). Bilingualism: Consequences for mind and brain. *Trends in Cognitive Sciences*, *16*(4), 240-250.

Brooker, Liz and Woodhead, Martin eds. (2008). *Developing Positive Identities: Diversity and Young Children.* Early Childhood in Focus (3). Milton Keynes: Open University

Dixon, L., Wu, S., & Wu, S., & Daraghmeh, A. (2012). Profiles in bilingualism: Factors influencing kindergarteners' language proficiency. *Early Childhood Education Journal, 40,* 25-34.

Doyle, B. G., & Bramwell, W. (2006). Promoting emergent literacy and social-emotional learning through dialogic reading. *The Reading Teacher, 59*(6), 554-564.

Duncan, S. P. (2010). Instilling a lifelong love of reading. *Kappa Delta Pi Record, 46*(2), 90-93.

Hyland, F. (2004). Learning autonomously: Contextualizing out-of-class English Language learning. *Language Awareness, 13*(3),180-202.

Julia Mascadri, P. J. (n.d.). *Early childhood educators' intercultural ways of knowing: Calibrating knowledge, beliefs, and practice*. Proceedings from Early Childhood Conference Australia National Conference 2019, Australia.

Krashen, S. D., & Terrell, T. D. (1983). *The natural approach: Language acquisition in the classroom*. London: Prentice Hall.

Lever, R., & Senechal, M. (2011). Discussing Stories: On How a Dialogic Reading Intervention Improves Kindergartners' Oral Narrative Construction. *Journal of Experimental Child, 108,* 1-24.

Marulis, L. M., & Neuman, S. B. (2010). The effects of vocabulary intervention on young children's word learning: A meta analysis. *Review of Educational Research. 80*(3), 300-335.

Ministry of Education. (2022). *Nurturing Early Learners: A Curriculum Framework for Preschool Education in Singapore*. Pre-school Branch, Ministry of Education.

Ministry of Education. (2010). *Nurturing Early Learners and Proficient Users: 2010 Mother Tongue Languages Review Committee Report.* Singapore: Ministry of Education.

Neuman, S. B. (1999). Books make a difference: A study of access to literacy. *Reading Research Quarterly, 34* (3), 286-311.

Perfetti, C.A., Landi, N., & Oakhill, J. (2005). The acquisition of reading comprehension skill. In M.J. Snowling & C. Hulme (Eds.), *The science of reading: A handbook*. (pp.227-247). Oxford: Blackwell.

Ren, L., & Hu, G. (2013). A comparative study of family social capital and literacy practices in Singapore. *Journal of Early Childhood Literacy, 13*(1), 98-130.

Rogoff, B. (1990). *Apprenticeship in thinking: Cognitive development in school context*. UK: Oxford University Press.

Roskos, K.A., Tabors, P.O., & Lenhart, L.A. (2009). *Oral language and early literacy in preschool: talking, reading and writing (2nd Ed)*. Newark, DE: International Reading Association.

Sun, H. Y. (2018). Differential effects of internal and external factors in early bilingual vocabulary learning: The case of Singapore. *Applied Psycholinguistics, 39*(2), 383-411.

Vandenbroeck, M. (2000). *Self-awareness, cultural identity and connectedness: Three terms to (Re) define in anti-bias work*. Proceedings from 10th European Conference on Quality in Early Childhood Education (EECERA) Conference. London, England.

Van de Pol J, Volman M and Beishuizen J. (2010). Scaffolding in teacher-student interaction: A decade of research. *Educational Psychology Review 22* (3): 271-296.

York-Barr, J., Sommers, W.A., Ghere, G.S., & Montie, J.K. (2006). *Reflective practice to improve schools: An action guide for educators (2nd Ed.)*. Thousand Oaks, CA: Corwin Press.

Ministry of Education
SINGAPORE

Pre-school Education Branch

ISBN 978-981-18-7435-2